
கல்கி



ALKI நவம்பர் 16, 1952 4 அணா


ஹிமாலயா
புக்கே
டாய்லட், டால்கம் பௌடர்களின்
இனிமையான நறுமணத்தை
நீங்களும் அனுபவியுங்கள்
Himalaya Bouquet
Himalaya Bouquet
TOILET POWDER
இரண்டு
நேர்த்தியான
இராஸ்மிக்
தயாரிப்புகள்
HBP. 6-X30 TM

கல்கி பொருளடக்கம்

மலர் 12 } இதழ் 16 } — 1952 நவம்பர் 16 — { நந்தன ௵ கார்த்திகை 1

வெற்றிச் சிகரத்தை எட்டிப் பிடித்தார்!	(தலையங்கம்)	... 3
அனர்த்தத்தை அழைக்கிறார்கள்!	...	... 4
ஆறரைக்கோடி ரூபாய் தண்டம்!	...	... 5
பாரம் தாங்குமா?	(கார்ட்டூன்)	... 5
ஏழைகளின் வாகனத்துக்கு ஆபத்து!	...	... 6
அவர் பயமுறுத்தல்!	ரகு	... 7
சென்னையின் புது மேயர்	...	... 8
அட்டைப்பட விளக்கம்	...	... 8
பொன்னியின் செல்வன்	கல்கி	... 9
தமிழ்க் களஞ்சியம்	டி. கே. சி.	... 19
படித்துப் பாருங்கள்!	...	... 21
சந்தோஷ மனிதன்	எஸ். வி. எஸ்.	... 22
முயலின் பந்தயம் (பாப்பா மலர்)	விஜயம்	... 28
கடல் கன்னிகை	மாயாவி	... 33
கல்லும் கரைந்தது!	மேரி ஷாப்னர்—வாஞ்சி	... 43
காரணம் என்ன?	பி. எஸ்.	... 46
ராணி மாதவி	கி. ரா. கோபாலன்	... 49
உழுமங்கலத்து உழவன்	பகீரதன்	... 59
ஆரோக்கிய ரகசியம்	வி. என். குமாரசாமி	... 69
வட்ட மேஜை	...	... 71
தலைவர் வந்தார்!	ஸ்ரீவத்ஸன்	... 72



நவம்பர் 14ந் தேதி முதல்
தமிழ் நாடெங்கும்
மகாத்மா பிக்சர்ஸ்
ஜகன்மோகினி
தமிழ்
கவர்ச்சிகரமான கதை அமைந்த இன்னிசைச் சித்திரம்
பிளேபாக்: லீலா • ஜிக்கி • ராஜா
வசனம், பாடல்கள்: சுப்ரமண்யம்
D. சங்கரசிங்
B.V. ஆச்சார்யா
ராஜஸ்ரீ பிக்சர்ஸ் ரிலீஸ்
EP

கல்கி

மலர் 12

தமிழ்த் திருநாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார்

இதழ் 16

வெற்றிச் சிகரத்தை எட்டிப் பிடித்தார்

இரண்டாவது உலக மகாயுத்தம் நடந்த காலத்தில் ஜெனரல் மார்ஷல் என்ற பிரமுகர் அமெரிக்க இராணுவத்தின் பிரதம நிர்வாகியாக (Chief of Staff) இருந்தார். அப்போது அவர், ஐரோப்பா மீது படையெடுப்பதற்குற்ற திட்டம் ஒன்றைத் தயாரிக்கும்படி, இராணுவத்தில் சாதாரண அதிகாரியாக இருந்த ஐஸன்ஹோவருக்குக் கட்டளையிட்டார்.

அதற்கிணங்க, ஐஸன்ஹோவர் நீண்டதொரு படையெடுப்புத் திட்டத்தைத் தயாரித்துக் கொடுத்தார்; அதை அவசரப்படாமல் நிதானமாக வாசிக்கும்படி ஜெனரல் மார்ஷலைக் கேட்டுக்கொண்டார்.

"திட்டம் நீளமாக இருக்கிறது. ஒரு வேளை இதை நிறைவேற்றுவதற்குத் தாங்களே நேரில் செல்லும்படி நேரலாம். அப்படிச் செல்லுவதாயின், தாங்கள் போர் முனைக்குப் புறப்பட எவ்வளவு காலம் ஆகும்?" என்று ஜெனரல் மார்ஷல் ஐஸன்ஹோவரைக் கேட்டார்.

"நான் ஒரு மணி நேரத்தில் புறப்படுவதற்குத் தயார்" என்று ஐஸன்ஹோவர் யாதொரு தயக்கமுமின்றிக் கூறிய பதிலைக் கேட்டு ஜெனரல் மார்ஷல் அப்படியே திகைத்துப் போய்விட்டாராம்.

பிறகு ஐஸன்ஹோவர் நேச நேசத் துருப்புகளுக்குத் தலைமை வகித்து வட ஆப்பிரிக்காவில் மகத்தான வெற்றி பெற்றார். இத்தாலியைச் சரண் அடையும்படி செய்தார். ஜெர்மனியை முற்றிலும் முறியடித்து உலகப் பிரசித்தி பெற்றார்

அவ்விதம் உலகமே பிரமிக்கும்படியாக வெற்றிமேல் வெற்றி பெற்ற ஜெனரல் ஐஸன்ஹோவர் இப்போது அடைந்துள்ள வெற்றி, இதற்கு முன் அவர் பெற்ற மற்றெல்லா வெற்றிகளுக்கும் சிகரமாக அமைந்திருக்கிறது.

போர்முனைகளில் பெரும் வெற்றி பெற்ற ஐஸன்ஹோவர் இப்போது அரசியல் அரங்கத்திலும் ஈடில்லாத வெற்றி பெற்றுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சி (Republican Party) அபேட்சகராக நின்ற ஐஸன்ஹோவருக்கு மூன்று கோடி வாக்குகளுக்கு மேல் கிடைத்தது.

அமெரிக்க சரித்திரத்திலேயே இதற்கு முன் யாரும் ஜனாதிபதித் தேர்தலில் இத்தனை அதிக வாக்குகள் பெற்றதில்லை எனில், ஐஸன்ஹோவருடைய வெற்றியின் உயர்வை உணர்ந்து கொள்ளலாம்.

ஜெனரல் ஐஸன்ஹோவருக்குப் போட்டியாக நின்ற ஜனநாயகக் கட்சி (Democratic Party) அபேட்சகரான அட்லாய் ஸ்டீவன்சன் இரண்டரைக் கோடி வாக்குகள் பெற்றார்.

இதற்கு முன் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியுற்ற எவரும் இத்தனை அதிக வாக்குகள் பெற்றதில்லை என்றும் கூறப்படுகிறது.

நாலு மாதங்களுக்கு முன்வரையில் ஸ்டீவன்சனைப் பற்றி உலக மக்களுக்கு எதுவுமே தெரியாது. ஆனால் இன்றோ உலகில் ஸ்டீவன்சனின் பெயரை அறியாத நாடு இருக்க முடியாது.

இம்முறை நடந்த அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் இது ஒரு புதுமை அல்லவா?

மேற்படி தேர்தலில் இரு கட்சிகளுக்கும் போட்டி மிகவும் கடுமையாக இருந்தது.

போர்முனைகளில் தமது வல்லமையைக் காட்டிய ஐஸன்ஹோவர் பிரசார தந்திரத்திலும் வாய்ப் போரிலும்கூடத் தமக்கு அபாரத் திறமை உண்டு என்பதை இந்தத் தேர்தலில் நிரூபித்து விட்டார்.

இந்த வெற்றியைக் குடியரசுக் கட்சியின் வெற்றி என்றோ அல்லது ஜனநாயகக் கட்சியின் தோல்வி என்றோ கூறுவதற்கில்லை. மேற்படி வெற்றி ஐஸன் ஹோவரின் சொந்த வெற்றி ஆகும். சர்வதேசப் புகழ்பெற்ற ஐஸன்ஹோவர் மீது அமெரிக்க மக்களுக்கு உள்ள அபிமானத்தையே மேற்படி வெற்றி பிரதிபலிக்கிறது.

உலக நீதியையும் அரசியல் தர்மத்தையும் அடிப்படையாகக் கொண்ட இந்தியாவின் நடுநிலைமைக் கொள்கையைக் கண்டு முதலில் அமெரிக்கர்கள் அதிருப்தி அடைந்தனர். ஆனால் இப்போது அவர்கள் மேற்படி கொள்கையின் உயர்வை உணர்ந்து கொண்டிருப்பதால், இரு நாடுகளுக்கும் நெருங்கிய உறவும் நல்லெண்ணமும் நிலவி வருகின்றன.

ஜெனரல் ஐஸன்ஹோவரின் பதவி காலத்தில் மேற்படி நிலைமை இன்னும் அபிவிருத்தி அடையச் செய்தால் உலக க்ஷேமத்துக்கு உதவியவராவர்.

மேலும் ஐஸன்ஹோவர் கொரியா யுத்தம் நிற்கும்படி செய்து, உலக சமாதானத்துக்கு ஒரு நல்ல வழி காட்டுவாராயின் அவரை உலக மக்கள் என்றென்றும் மறக்க மாட்டார்கள்.

அனர்த்தத்தை அழைக்கிறார்கள்!

தஞ்சை ஜில்லாவைச் சேர்ந்த பெரிய மிராசதார்கள், மத்திய மிராசதார்கள் — பலரின் கருத்தை நாம் நேர்முகமாக அறிந்து கொள்ளும் சந்தர்ப்பம் நேர்ந்தது. அவர்கள் தங்கள் சொந்த நலம் இன்னது என்பதை உணர்ந்தவர்கள்; அத்துடன் பாரபட்சமின்றித் தர்ம நியாயமான அபிப்பிராயம் சொல்லக் கூடியவர்கள்.

அத்தகையவர்கள், "தஞ்சை விவசாய அவசரச் சட்டம் இந்த வருஷம் வந்திராவிட்டால், தஞ்சை ஜில்லாவில் பல இடங்களில் இந்த வருஷம் சாகுபடியே நடந்திராது" என்று சொன்னார்கள். கம்யூனிஸ்ட்டுகளின் செல்வாக்கு மிதமிஞ்சி ஓங்கி, அதனால் பெருங் குழப்பங்கள் விளைந்திருக்கும் என்றும் கூறினார்கள்.

தஞ்சை ஜில்லாவில் பல இடங்களில் பலவிதமான விவசாய முறைகள் அமுலில் இருக்கின்றன. ஆகையால் பொதுவாகச் செய்யப்படும் சட்டம் சிற்சில இடங்களில் சிலருக்கு அதிக சாதகமாயிருக்கலாம். சிலருக்குச் சாதகம் குறைவாயிருக்கலாம். வேறு சிலருக்கு ஏற்கெனவே இல்லாத சில புதிய அசௌகரியங்களையும் விளைவிக்கலாம். "மொத்தத்தில் எல்லா சந்தர்ப்பங்களையும் சேர்த்து எண்ணிப் பார்க்கும்போது பட்டாதார்கள் — உழவர்கள் இரு கட்சிக்கும் நியாயம் செய்யக்கூடிய முறையில் சட்டம் அமைந்திருக்கிறது" என்று ஸ்ரீ வி. எஸ். தியாகராஜ முதலியார் கூறிய அபிப்பிராயத்தை நியாய புத்தியும் தீர்க்க திருஷ்டியும் உள்ள பட்டாதார்கள் பலரும் ஒப்புக் கொள்கிறார்கள்.

அவசர நிலைமையை உத்தேசித்து அவசரமாகச் செய்த சட்டமாதலால், வாசகத்திலும் வியக்தங்களிலும் சிற்சில சந்தேகங்கள் ஏற்படக்கூடியது இயல்புதான். அவற்றைத் தெளிவாக எடுத்துச் சொன்னால், சர்க்கார் தக்க திருத்தங்கள் செய்யத் தயாராயிருந்தார்கள். அதனாலேயே அவசரச் சட்டத்துக்குச் சிற்சில திருத்தங்கள் உடனடியாக வந்தன.

அவசரச் சட்டத்தை நிரந்தர சட்டமாக்குவதற்காகப் பிரசுரிக்கப்பட்ட மசோதாவிலும் சில புதிய திருத்தங்கள் சேர்க்கப் பட்டன.

எனினும் தஞ்சை ஜில்லாவில் இன்னும் பார்லிமெண்டு விவகாரங்களிலேயே காலத்தைச் செலவிட்டு வந்தவர்களுக்கு இதெல்லாம் போதவில்லை. "அவசரச் சட்டம் எங்கள் உரிமையைக் கொள்ளை கொண்டு விட்டது!" "தஞ்சை ஜில்லா விவசாயத்தையே கெடுத்து விட்டது!" என்று பிரசாரம் செய்யவும் கூக்குரலிடவும் ஆரம்பித்தார்கள்.

இந்தக் கூக்குரலை மனமறிந்த பொய்க் கூக்குரல் என்று சொன்னால் குற்றமாகாது. அது மட்டுமல்ல; இப்படிப் பொய்க் கூக்குரல் எழுப்பியவர்கள் அனர்த்தத்தை எதிர்கொண்டு வருந்தி அழைக்கிறோம் என்பதைச் சிறிதும் தெரிந்து கொள்ளாமலே கூக்குரலிட்டார்கள்.

கூக்குரலிட்டதோடு நில்லாமல், சட்ட சபையில் காங்கிரஸுக்கு எதிர்க்கட்சி அங்கத்தினரின் ஒத்தாசையையும் நாடினார்கள்.

அதன் பயன் என்ன!

காங்கிரஸ் சர்க்கார் கொண்டு வந்த மசோதாவைப் பரிசீலனை செய்து அவசியமான திருத்தங்களைச் செய்வதற்குச் சட்ட சபையில் ஸெலக்ட் கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது.

குருட்டுப் பேராசையினாலும் வெறும் விவகார மோகத்தினாலும் சட்ட சபை அங்கத்தினர்களிடம் வந்தவர்கள், இப்போதுள்ள சட்ட சபையில் ஏறக்குறையப் பாதிப்பேர் கம்யூனிஸ்டுகளும் அவர்களைச் சேர்ந்தவர்களும் என்பதைக்கூட எண்ணிப் பார்க்கவில்லை.

ஸெலக்ட் கமிட்டியின் அமைப்பைப் பார்த்த பிறகு அவர்களுக்குக் கொஞ்சம் வெளிச்சம் ஏற்பட்டிருக்கும் என்று நம்புகிறோம். பட்டாதார்களை அடியோடு ஒழித்துக் கட்டி விடக் கங்கணம் கட்டிக் கொண்டிருப்பவர்கள் அந்தக் கமிட்டியில் இருக்கிறார்கள்.

எனவே, ஸெலக்ட் கமிட்டியிலிருந்து மசோதா வெளி வரும்போது உழவர்களுக்கு அதிக அநுகூலம் ஏற்பட்டாலும் ஏற்படா விட்டாலும், பட்டாதார்களுக்குப் பிரதிகூலம் அதிகமாயிருக்கும் என்று எதிர்பார்க்கலாம். அப்படி ஏற்படா விட்டால் பிள்ளையாருக்குத் தேங்காய் உடைக்க வேண்டியதுதான்.

விவசாயப் பாதுகாப்புச் சட்டம் சம்பந்தமாகக் கோர்ட்டுகளுக்குப் போகும் முயற்சிகளினாலும் இதேவிதமான விபரீத பலன்கள்தான் ஏற்படப் போகின்றன.

விவாதமும் விவகாரமும் வளர வளர, பட்டாதார்களுக்குத்தான் அதிக அசௌகரியங்கள் ஏற்படும் என்பதில் சந்தேகமே இல்லை.

அதோடு, கம்யூனிஸ்ட்டுகளின் பலமும் ஓங்கிக் கொண்டிருக்கும்.

இன்றைய தினம் மத்திய சர்க்காரிடம் இந்தப் பிரச்னையைக் கொண்டு போனால், எவ்விதத் தயக்கமும் இன்றி, பட்டாதார்களுக்கு 100-க்கு 40 பங்கும், உழவர்களுக்கு 100-க்கு 60 பங்கும் என்று தீர்ப்பளித்து விடக்கூடும்.

இதற்காக அவசியமானால் அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கும் அகில இந்தியத் தலைவர்கள் தயாராயிருக்கிறார்கள்.

வீண் கிளர்ச்சிகளும் விவகாரங்களும் நடத்தும் பட்டாதார்கள் அனர்த்தத்தை எதிர் கொண்டு அழைக்கிறார்கள் என்று எச்சரிக்கை செய்கிறோம்.

இப்போது இந்த விஷயத்தைப் புரிந்துகொள்ளாத பட்டாதார்கள் அடுத்த இரண்டு மூன்று வருஷங்களுக்குள் நிச்சயம் புரிந்து கொள்வார்கள். அப்போது புரிந்து கொண்டும் பயனில்லை; கையை நெரித்துக் கொண்டு நிற்பதைத் தவிர வேறொன்றும் செய்ய முடியாது.

ஆறரைக்கோடி ரூபாய் தண்டம்!

கொக்கைப் பிடிப்பதற்கு என்ன வழி என்று சிலர் கூடி யோசித்தார்களாம். "அது என்ன பிரமாதம்! கொக்கின் தலையிலே கொஞ்சம் வெண்ணெயை வைத்துவிட வேண்டியது. அது உருகி வழிந்து கொக்கின் கண்களை மறைத்து விடும்! அந்தச் சமயம் பார்த்து 'லபக்'கென்று கொக்கைப் பிடித்துவிட்டால் போகிறது!" என்று ஒரு புத்திசாலி சொன்னாராம். அதை மற்றப் புத்திசாலிகள் கரகோஷம் செய்து ஆமோதித்தார்களாம்! இந்த முறையைக் கடைப் பிடித்துப் பார்த்ததில் வெண்ணெய் நஷ்டமாயிற்றே தவிர, கொக்குப் பிடிபட வில்லை யென்று பிற்பாடு தெரிந்து கொண்டார்களாம்.

குடிசைக் கைத்தொழிலுக்கு ஆதரவு அளித்து ஊக்கம் ஊட்டி அமோகமாக அபிவிருத்தி செய்வதற்கு இந்திய சர்க்காரைச் சேர்ந்த மேதாவிகள் மேற்கண்டது போன்ற ஓர் அபூர்வ முறையைக் கண்டு பிடித்திருக்கிறார்கள்!

ஆலைத் துணியின் மீது கஜத்துக்குக் காலணா வீதம் வரி போட்டு வசூலிப்பதாம்! அதில் மொத்தம் ஆறரைக் கோடி ரூபாய் வருஷந்தோறும் வருமானம் வருமாம்! இந்தத் தொகையைக் கொண்டு குடிசைத் தொழில்களை உஜ்ஜீவிதத்திலும் அபிவிருத்தி செய்துவிடப் போகிறார்களாம்!

அது எப்படி அபிவிருத்தி அடையும் என்று கேட்டால், உபாயத்தைக் கண்டு பிடித்த மேதாவிகளுக்கும் அது அவ்வளவாகத் தெரியவில்லை.


ஆகையால் குடிசைக் கைத்தொழில் அபிவிருத்திக் கென்று ஆலோசனைக் கமிட்டி ஒன்று அமைத்து விட்டார்கள்!

கமிட்டியில் பத்தொன்பது அங்கத்தினர். இவர்களில் பெரும்பாலோர் குடிசையையே பார்த்திருக்க மாட்டார்கள். குடிசைக் கைத்தொழிலைப் பற்றி அவர்கள் தலைமேல் ஆணையாக ஒன்றுமே தெரியாது! இப்படிப் பட்டவர்களுடைய ஆலோசனைக் கமிட்டியினால் என்ன காரியம் நடக்கப் போகிறது என்று கேட்டால், ஏன்! நிச்சயமாக ஒரு காரியம் நடக்கும். ஆறரைக் கோடியில் ஒரு கணிசமான பகுதியை இவர்களுடைய பிரயாணச் செலவுகளும் படிச் செலவுகளும் இதர சில்லறைச் செலவுகளும் விழுங்கிவிடும். மிச்சமுள்ள பணத்தைத் தண்டமாகச் செலவு செய்வதற்கும் ஏதேனும் வழி கண்டு பிடித்துச் சொல்லி விடுவார்கள். நவநாகரிக வாழ்க்கையில் திளைத்த பெண்மணிகளும் ஆண்மணிகளுமாகப் பத்தொன்பது பேர் முயன்றால் ஆறரைக் கோடி ரூபாயைத் தண்டச் செலவு செய்வதுதானா பெரிய காரியம்!

கைத்தறித் தொழிலைக் காட்டிலும் அதிகம் பேருக்குப் பிழைப்பு அளிக்கும் குடிசைத் தொழில் வேறு கிடையாது. பரம்பரையாகக் கைத்தறித் தொழில் செய்து திறமை பெற்ற நாற்பது லட்சம் கைத்தறிக்காரர்கள் தங்கள் தொழிலைக் காப்பாற்றிக் கொடுக்கும்படி முறையிடுகிறார்கள். கரை போட்ட வேஷ்டிகளையும் வர்ணச் சேலைகளையும் மட்டும் தங்களுக்கு ஒதுக்கிக் கொடுக்கும்படி கோருகிறார்கள். அவர்களுடைய கோரிக்கையைத் தேசமே ஆதரிக்கிறது. இவ்வளவு தெளிவாக உடனே செய்யக் கூடிய உதவியைச் செய்யாமல் தட்டிக் கழிக்கப் பார்க்கிறார்கள்.

அதற்குப் பதிலாக ஆறரைக் கோடி ரூபாய் வரி வசூலித்துத் தண்டச் செலவு செய்ய அவசர அவசரமாக ஆலோசனைக் கமிட்டி அமைக்கிறார்கள்! இதைக் கேலிக் கூத்து என்று சொல்லாமல் வேறு என்னவென்று சொல்லுவது!

பாரம் தாங்குமா?



ஐந்து வருஷத் திட்ட யோசனைகள் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டிருக்கின்றன. ஏழை இந்தியாவின் வருமானம் அவ்வளவு பெரும் பாரத்தைச் சுமக்க முடியுமா என்று சிலர் சந்தேகிக்கிறார்கள்.

ஏழைகளின் வாகனத்துக்கு ஆபத்து!

சென்ற மாதத்தில் ஒரு நாள் திடீரென்று முக க்ஷவர பிளேடுகளுக்குப் பஞ்சம் வந்தது.

கடை வீதிகளில் முதல் நாள் வரையில் இலகுவாகக் கிடைத்து வந்த பிளேடுகள் சட்டென்று மாயமாக மறைந்து விட்டன!

காரணம் என்னவென்று கேட்டபோது, "வியாபாரிகள் க்ஷவர பிளேடுகளை அமுக்கி விட்டார்கள்!" என்று தெரிந்தது. ஏன் அமுக்கினார்கள் என்று விசாரித்ததில், "இந்திய சர்க்கார் பிளேடு இறக்குமதியை நிறுத்தி விட்டார்கள். அதனால் கடைக்காரர்கள் கையிலுள்ள சரக்கை அமுக்கி விட்டார்கள்!" என்று பதில் வந்தது.

அன்றாடம் முக க்ஷவரம் செய்துகொண்டு ஆபீஸுக்குப் போகும் வழக்கம் வைத்திருந்த லட்சக் கணக்கான நடுத்தர வகுப்பினர்—குமாஸ்தாக்கள், உபாத்தியாயர்கள் முதலியோர்—பெருந் திண்டாட்டத்துக்கு ஆளானார்கள். நாவிதர்களை அழைப்பதா அல்லது தாடி மீசை வளர்ப்பதா என்ற பெரிய பிரச்னை ஏற்பட்டு விட்டது.

இரண்டும் விருப்பமில்லாதவர்கள் இந்திய சர்க்காரின் வர்த்தகப் பகுதி அதிகாரிகளுக்கு, "முகத்தைக் கண்ணாடியில் பார்க்கச் சகிக்கவில்லை. ஆபீஸில் பெரிய உத்தியோகஸ்தர்கள் எரிந்து விழுவார்கள். உடனே புறப்பட்டு வந்து முக க்ஷவரம் செய்து விட்டுப் போகவும்" என்று மானஸத் தந்தி அடித்தார்கள். ஒன்றும் பயன்படவில்லை.

நல்ல வேளையாகச் சில நாளைக்குப் பிறகு கடைகளில் பிளேடுகள் வெளியில் வந்தன. அப்படி வெளியில் வந்தபோது 100க்கு 30 முதல் 50 வரை விலையைக் கூட்டிக் கொண்டு வந்தன.

ஏழை குமாஸ்தாக்களும் மற்றவர்களும் அதிக விலை கொடுத்துத் தொலைத்து வாங்கினார்கள்.

பிளேடுகள் இறக்குமதியைச் சடார் என்று நிறுத்தியதால் தேசத்தின் பொருளாதாரம் தடபுடலென்று உயர்ந்து விடவில்லை. சில கடைக்காரர்கள் கொள்ளை லாபம் அடித்தார்கள்.

இது தொலைந்து போகட்டும். குமாஸ்தாக்கள் முதலியோர் தினம் முக க்ஷவரம் செய்துகொள்ளா விட்டால் பாதகமில்லை.

ஆனால் ஏழைகளின் வாகனமாகிய பைசைக்கிளையும் இந்திய சர்க்கார் அதே கதிக்கு உள்ளாக்கினதைப்பற்றி என்னவென்று சொல்லுவது!

"பைசைக்கிள் திருடன்" என்ற பெயர் கொண்ட உலகப் பிரசித்தி பெற்ற இத்தாலிய சினிமாப் படம் இச்சமயத்தில் ஞாபகம் வருகிறது. அதில் ஓர் ஏழைத் தொழிலாளிக்குச் "சொந்த சைக்கிளுடன் வரவேண்டும்" என்ற நிபந்தனையின் பேரில் வேலை கிடைக்கிறது. வேலை கிடைத்தவுடனே சைக்கிள் திருட்டுப் போய் விடுகிறது. அதனால் அவன் அடைந்த வேதனையையும் அவன் குடும்பத்தார் அனுபவித்த இன்னல்களையும் மேற்படி படம் என்றும் மறக்க முடியாத இதிகாசமாகத் திரையில் சித்திரித்துக் காட்டுகிறது.

அதைப் போலவே இந்த நாட்டிலும் எத்தனையோ லட்சம் பேர் தங்கள் ஜீவனோபாயத்துக்குச் சைக்கிள் வண்டியை நம்பியிருக்கிறார்கள்.

ஆபீஸுக்கும் ஆலைக்கும் இதர தொழில் ஸ்தாபனங்களுக்கும் சைக்கிளின் உதவியின்றிப் போக முடியாதவர்கள் லட்சக் கணக்கில் இருக்கிறார்கள்.

சொந்த சைக்கிள் வைத்திருப்பதனாலேயே ஏதாவது உத்தியோகம் கிடைத்துப் பார்ப்பவர்கள் நம் நாட்டில் லட்சக் கணக்கில் இருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட ஏழைகளின் வாகனமாகிய பைசைக்கிள் ஏற்கெனவே நமது நாட்டில் மிக அதிகமான விலைக்கு விற்று வந்தது.

இங்கிலாந்தில் நூறு ரூபாய்க்குக் கிடைக்கக் கூடிய பைசைக்கிள் ஏழை இந்தியா தேசத்தில் இருநூற்றுப் பத்து ரூபாய்க்கு விற்று வந்தது.

சென்ற மாதத்தில் ஒரு நாள் திடீரென்று சைக்கிளின் விலையில் ஐம்பது ரூபாய் கூடிற்று.

முதல் நாள் ரூ. 210க்குக் கிடைத்த சைக்கிள் மறு நாள் ரூ. 260 ஆகிவிட்டது.

காரணம் என்னவென்று விசாரித்தபோது, இந்திய சர்க்கார் அடுத்த ஆறு மாதத்துக்கு அன்னிய நாட்டு சைக்கிள் இறக்குமதியை அடியோடு நிறுத்தி விட்டதுதான் என்று தெரிந்தது.

ஏன் இப்படித் தடை செய்தார்கள் என்று கேட்டால், உள் நாட்டின் சைக்கிள் உற்பத்தித் தொழிலுக்கு ஆதரவு தருவதற்காகத் தடை விதித்ததாகத் தெரிய வந்தது.

உள் நாட்டுக் கைத் தொழிலுக்கு உதவி செய்ய வேண்டியது அவசியம் என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள்.

ஆனால் எப்படி உதவி செய்ய வேண்டும்? எந்த அளவில் உதவி செய்ய வேண்டும்? லட்சக் கணக்கான ஏழைகளின் தலையில் கை வைத்து உதவி செய்வது அவசியமா!

பின் வரும் புள்ளி விவரங்களைக் கவனியுங்கள்.

இந்தியாவில் இன்று சுமார் 30 லட்சம்பேர் பைசைக்கிள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதாவது ஆயிரம்பேரில் சுமார் எட்டுப்பேர் தான் சைக்கிள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இங்கிலாந்து முதலிய நாடுகளில் ஆயிரம்பேரில் 400 பேர் முதல் 500 பேர் வரை சைக்கிள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தியா தேசத்தில் பைசைக்கிளின் விலை குறைந்தால் கோடிக் கணக்கில் பைசைக்கிள் செலவாவதற்கு இடம் இருக்கிறது.

தற்சமயம் வருஷத்துக்கு நாலு லட்சம் சைக்கிள்கள் இந்நாட்டில் விற்பனையாகி வருகின்றன.

மூன்று சைக்கிள் தொழிற் சாலைகள் பெரிய அளவில் சைக்கிள் உற்பத்தி செய்து வருகின்றன.

இந்த மூன்று தொழிற் சாலைகளும் வருஷத்துக்குச் சுமார் ஒரு லட்சம் சைக்கிள்கள் 'உற்பத்தி' செய்து வருகின்றன. சைக்கிள் முழுவதையும் இங்கேயே உற்பத்தி செய்துவிடவில்லை. சீமையிலிருந்து பற்பல சைக்கிள் பகுதிகளைத் தருவித்து இங்கேயுள்ள தொழிற் சாலைகளில் அப் பகுதிகளைக் கோர்த்து சைக்கிள் உருவம் தந்து பொது மக்களிடம் விற்பனை செய்கிறார்கள்.

ஆயினும் பரவாயில்லை. தோலைக் கடித்துத் துருத்தியைக் கடித்துத்தான் வேட்டை நாய் ஆக வேண்டும் என்பது போல், முதலில் சைக்கிள் பகுதிகளை வரவழைத்துக் கோர்த்துக் கொடுக்க ஆரம்பித்தால் சிறிது சிறிதாக எல்லாப் பகுதிகளையும் இங்கேயே உற்பத்தி செய்யலாம்.

ஆகவே இந்த உற்பத்திக்கும் ஆதரவு கொடுக்க வேண்டியதுதான் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் அந்த ஆதரவை எப்படிக் கொடுப்பது! வருஷத்தில் நாலு லட்சம் சைக்கிள் நாட்டில் தேவையாயிருக்கும்போது, ஒரு லட்சம் சைக்கிள்தான் நாட்டில் 'உற்பத்தி' ஆகும் நிலைமையில், சைக்கிள் இறக்குமதியை அடியோடு தடை செய்வதில் அர்த்தம் என்ன!

இந்த வருஷத்தில் ஒரு லட்சம் சைக்கிள் இந்த நாட்டில் உற்பத்தியாகும் மற்றும் தேவையாயிருக்கும் மூன்று லட்சம் சைக்கிள் இறக்குமதி செய்ய அநுமதிக்கலா மல்லவா!

அடுத்த வருஷத்தில் உற்பத்தி ஒன்றரை லட்சமாகும், அந்த அளவில் இறக்குமதியைக் குறைத்து, பாக்கி இரண்டரை லட்சம் சைக்கிள் இறக்குமதியாக அநுமதிக்கலாம் அல்லவா!

ஒரேயடியாக இறக்குமதியைத் தடை செய்த காரணம் என்ன! நோக்கம் என்ன! பலன் என்ன!

ஏற்கெனவே சைக்கிள் வரவழைத்து வைத்திருக்கும் வியாபாரிகள் சிலர் திடீர்ப் பணக்காரர்கள் ஆக வேண்டும் என்பது நோக்கமா!

சைக்கிளுக்கு ஐம்பது ரூபாய் வீதம் விலையை உயர்த்தி ஏழைகளின் தலையில் கையை வைக்க வேண்டும் என்பது நோக்கமா!

இவ்வளவு கேவலமான நோக்கம் உடையவர்கள் இந்திய சர்க்காரில் மந்திரியாயிருக்கிறார்கள் என்று நாம் நம்ப முடியாது. ஆனால், சைக்கிள் இறக்குமதியை அடியோடு தடை செய்ததின் பலன் என்னமோ, அவ்வாறுதான் இருக்கிறது.

ஆகையால், முன்யோசனையற்ற அசட்டுத்தனமே காரணம் என்று முடிவு கட்டவேண்டியிருக்கிறது.

இது இவ்வளவு அசட்டுத்தனமான காரியமாயிருக்கிறபடியாலேதான், சைக்கிள் 'உற்பத்தி' முதலாளிகள், சைக்கிள் வியாபாரிகள் எல்லாருமே ஒரு முகமாக மேற்படி இறக்குமதித் தடையை ஆட்சேபிக்கிறார்கள்.

சென்ற வாரத்தில் சென்னை கோகலே மண்டபத்தில் அகில இந்திய சைக்கிள் உற்பத்தியாளர்கள் — வியாபாரிகளின் மகாநாடு நடந்தது. அதில் கலந்து கொண்ட சைக்கிள் உற்பத்தியாளர்கள் "எங்களுக்கு உதவுவதற்காக இறக்குமதியை அடியோடு தடை செய்ய வேண்டியதில்லை. இறக்குமதியாகும் சைக்கிள்களுக்கு அவசியமான அளவு இறக்குமதி வரி விதித்து உள்நாட்டுத் தொழிலுக்குப் பாதுகாப்பு அளித்தால் போதும்!" என்றார்கள்.

சைக்கிள் வியாபாரிகள் இறக்குமதித் தடையை முழுதும் கண்டனம் செய்தார்கள்.

அவர்கள் தங்கள் கையில் உள்ள அன்னிய நாட்டு சைக்கிள்களை அதிக விலைக்கு விற்க முடியுமானாலும், அதனால் தங்கள் பெயர் கெடும் என்றும் நீடித்த வியாபாரத்துக்குப் பாதகம் விளையும் என்றும் உணர்ந்து சொன்னார்கள்.


இந்திய சர்க்காரில் மந்திரி பதவி வகிப்பவர்களுக்கு நீடித்த நிர்வாகப் பழக்கம் இல்லை. அதனால் இத்தகைய தவறுகள் சில சமயம் நேர்ந்துவிடக் கூடும்தான். செய்த தவறை எடுத்துக் காட்டிய பிறகாவது திருத்திக் கொள்ள வேண்டும்.

ஆகையால், சைக்கிள் இறக்குமதித் தடையை இந்திய சர்க்கார் உடனே ரத்து செய்வார்கள் என்று நம்புகிறோம்.

அப்படிக்கின்றி "நான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்" என்று பிடிவாதம் செய்துகொண்டிருந்தால் நாட்டில் மேலும் மேலும் அதிருப்தி வளருவதற்கே உதவி செய்தவர்கள் ஆவார்கள்.

இம்மாதிரி சிறிய தவறுகள் பல சேர்ந்து பெரிய புயலாகவும் பூகம்பமாகவும் ஆகிவிடக் கூடும்.

அவர் பயமுறுத்தல்!



ஐக்கிய ஜனநாயக முன்னணிக் கட்சியின் தலைவரான ஸ்ரீ டி. பிரகாசத்துக்கும் அந்தக் கட்சியைச் சேர்ந்த மற்ற அங்கத்தினருக்கும் தகராறு தொடர்ந்து நடந்து வருகிறது.

சென்னையின் புது மேயர்

சென்னை நகரிலுள்ள நீடித்த உண்மையான காங்கிரஸ்வாதிகளை நாம் நினைத்துப் பார்க்க ஆரம்பித்தோமானால் ஒரு சிலர் உடனே நம் மனக் கண் முன்னால் வருவார்கள். அவர்களிலே ஸ்ரீ டி. செங்கல்வராயன் முன்னணியில் நிற்பார்.

காலஞ்சென்ற ஸ்ரீ சத்தியமூர்த்தி அவர்களிடம் அரசியல் பிட்சை பெற்றவர் ஸ்ரீ செங்கல்வராயன். ஸ்ரீ சத்தியமூர்த்தியைப்போலவே ஆங்கிலத்திலும் தமிழிலும் அமோகமாகச் சொற்பொழிவு ஆற்றக்கூடிய வாக்கு வன்மை பெற்றவர். அந்த வாக்கு வன்மையை எப்போதும் காங்கிரஸ் தொண்டுக்காகவே அர்ப்பணம் செய்து வந்திருக்கிறார்.

காங்கிரஸின் சார்பாகப் பல முறை தேர்தலில் நின்று தோல்வி அடைந்திருக்கிறார். ஏன்! இந்த மேயர் பதவிக்கே இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நின்று காங்கிரஸ் நண்பர்களால் கைவிடப்பட்டுத் தோல்வி அடைந்தார். சென்ற பொதுத் தேர்தலில் இந்தியப் பார்லிமெண்டுக்கு நின்று சிறிய வோட்டு வித்தியாசத்தினால் தோல்வியுற்றார். அவரைச் சென்னை நகரிலிருந்து வெளியேற்றிச் செங்கற்பட்டு ஜில்லாவில் போட்டுப் பலிகொடுத்து விட்டார்கள் என்று சிலர் புகார் செய்தார்கள். ஆனால் நல்ல காங்கிரஸ்காரராகிய ஸ்ரீ செங்கல்வராயன் எவ்விதப் புகாரும் செய்ய வில்லை. அடிக்கடி தோல்வியுற்ற சிலர் மனம் வெறுத்துக் கட்சி மாறுவதுண்டு. அல்லது ஸ்தாபனத்தில் இருந்தபடியே தம் சகாக்களின் மீது குறை கூறிக் கொண்டு காலங் கழிப்பதுமுண்டு. அரசியல் வாழ்விலிருந்தே விலகிக் கொள்வதும் உண்டு. ஸ்ரீ செங்கல்வராயன் இந்த வழிகளிலெல்லாம் போகவே இல்லை. "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்று கருதும் கர்ம வீரரைப் போலவும், வெற்றியையும் தோல்வியையும் ஒன்றே எனக் கருதும் முற்றும் துறந்த முனிவரைப் போலவும் உறுதியுடன் காங்கிரஸ் தொண்டு ஆற்றி வந்தார்.

அவருடைய தொண்டைப் பொது மக்கள் பாராட்டுகிறார்கள் என்பதற்கு அறிகுறி இப்போது தான் முதன் முதலாகக் கிடைத்திருக்கிறது.

மேயர் செங்கல்வராயனை வாழ்த்துகிறோம். அவர் பதவி வகிக்கும் காலத்தில் சென்னை நகருக்குச் சில உருப்படியான நன்மைகளைச் செய்வார் என்று நம்புகிறோம்.

ஒரு சிறிய விஷயத்தை ஞாபகப்படுத்தவும் விரும்புகிறோம். சாதாரணமாக என்ன நடக்கிறது என்றால், புது மேயர் ஒருவர் பதவிக்கு வந்ததும் அவருக்கு டீ பார்ட்டிகளும் டின்னர் பார்ட்டிகளும் கொடுக்க ஆரம்பிப்பார்கள். இப்படி ஆறு மாத காலம் போய் விடும். பிறகு மேயர் பதவியிலிருந்து நீங்கப் போவதை உத்தேசித்துப் பிரிவுபசாரப் பார்ட்டிகள் கொடுக்கத் தொடங்குவார்கள். அதில் ஆறு மாத காலம் போய் விடும். வருஷ முடிவில் பார்க்கும்போது மேயர் பதவிக்கு வந்து சாதித்தது என்று சொல்லக் கூடியது ஒன்றுமிராது.

இந்த டீ பார்ட்டி—டின்னர் பார்ட்டி சுழலில் மேயர் செங்கல்வராயன் அகப்பட்டுக் கொள்ளாமலிருந்தால் நலமாயிருக்கும்.

டீ பார்ட்டிக்கோ அல்லது டின்னர் பார்ட்டிக்கோ அழைக்க வருகிறவர்களிடம் மேயர் செங்கல்வராயன் ஒரு நிபந்தனை விதிக்கலாம். "பக்கத்து ஜில்லாக்களில் பஞ்ச நிவாரண வேலைக்காக நூறு ரூபாய் நன்கொடை அளித்தால் வருவேன்" என்று சொல்லலாம்.

மேஜைகளில் அலங்காரமாக உணவுப் பண்டங்களை வைத்துவிட்டுத் திரும்ப எடுத்துக் கொண்டு போய் எறிவதற்காக ஆயிரம் ரூபாய் செலவு செய்ய முன் வருகிறவர்கள் பஞ்சத்தில் அடிபட்ட ஏழைகளுக்குக் கஞ்சி ஊற்றிக் காப்பாற்ற நூறு ரூபாய் கொடுக்க மறுக்க மாட்டார்கள் அல்லவா!

டிபுடி மேயர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் ஸ்ரீமதி சரஸ்வதி பாண்டுரங்கம் பல வருஷகாலம் தேச விடுதலைக்காகச் சிறையில் தவமிருந்த பெண்மணி. லௌகிக படாடோபங்களில்லாமல் அருமையான சமூகத் தொண்டு பல ஆற்றி வருகிறவர். அவர் மேலும் மேலும் சிறந்த சமூகத் தொண்டு செய்வதற்கு இந்த 'டிபுடி மேயர்' பதவியை ஒரு சாதனமாகக் கொள்வார் என்பதில் ஐயமில்லை. அவருக்கும் நமது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

அட்டைப்பட விளக்கம்

நம் கைத்தொழில் மந்திரி

ராஜாஜி மந்திரி சபையில் உள்ள திறமைசாலிகளில் டாக்டர் யு. கிருஷ்ண ராவ் ஒருவர். கைத்தொழில், போக்கு வரவு ஆகிய இரு முக்கிய இலாக்காக்களை அவர் நிர்வகித்து வருகிறார். டாக்டர் கிருஷ்ண ராவ் போக்கு வரவு மந்திரியான பிறகு சென்னை நகர பஸ்கள் மிக்க அபிவிருத்தி அடைந்திருக்கின்றன. பஸ் தொழிலாளிகளின் குறைகள் பலவும் நீக்கப்பட்டிருக்கின்றன. சர்க்கார் பஸ்களில் சர்க்காரைப் பற்றிக் குறை கூறும் பேச்சுக்களை இப்போது கேட்க முடிவதில்லை.

சென்னை மாகாணத்தில் விவசாயத்துக்கு அடுத்தபடியாக மிக முக்கியமான தொழில் கைத்தறித் தொழிலாகும். வள்ளுவர் பெருமான் காலத்திலிருந்து வழி வழியாக வந்து தேர்ச்சி பெற்ற தொழிலாகும். நாற்பது லட்சம் கைத்தறியாளரும் அவர்களுடைய குடும்பத்தினரும் அத்தொழிலை நம்பி யிருக்கிறார்கள். அப்படிப்பட்ட தலைசிறந்த குடிசைக் கைத் தொழிலுக்கு, கரை போட்ட வேஷ்டியையும் வர்ணச் சேலையையும் ஒதுக்கிக் கொடுத்துப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று சென்னைச் சட்டசபையில் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். அது அச் சபையின் அங்கத்தினரால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. தற்போதுள்ள சென்னைச் சட்ட சபையில் எத்தனை கட்சிக்காரர்கள் இருக்கிறார்கள், அவர்களுக்குள் எத்தனை வேற்றுமைகள், தினந் தினம் அந்த வேற்றுமைகள் எப்படிப் பெருகி வருகின்றன வென்பதை அனைவரும் அறிவார்கள். அப்பேர்ப்பட்ட சட்டசபையில் மந்திரி கிருஷ்ண ராவ் பிரேரேபித்த தீர்மானம் எதிர்ப்பின்றி நிறைவேறியது என்றால், அத்தீர்மானம் எவ்வளவு முக்கியமாயிருக்க வேண்டும்! அதைப் பிரேரேபித்தவர் எத்தனை அதிர்ஷ்டசாலியா யிருக்க வேண்டும்!

டாக்டர் கிருஷ்ண ராவின் அதிர்ஷ்டம் நம் நாட்டிலுள்ள கைத்தறிகாரர்களுக்கும் விரைவில் ஏற்படட்டும் என்ற ஆசையுடன் அவ்விருவரின் படங்களையும் நம் அட்டையில் வெளியிட்டிருக்கிறோம்.



அத்தியாயம் 16

"மலையமானின் கவலை"

மாளிகைக்கும் மதிள் சுவருக்கும் இடையிலிருந்த நிலா முற்றப் பகுதியில் கந்தமாறன் வழி காட்டிக் கொண்டு செல்ல, கரிகாலன் சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டு நடந்தான். மற்ற நால்வரும் பின்தொடர்ந்து சென்றார்கள்.

குரவைக் கூத்துக்காக மேடையும் கொட்டகையும் போட்டிருந்த இடத்தை அடைந்ததும் கரிகாலன் நின்றான்.

"ஓகோ! இது என்ன? இங்கே என்ன நடக்கப் போகிறது?" என்று கேட்டான்.

"கோமகனே! தங்களுக்கு விருப்பமாயிருந்தால், இங்கே குரவைக் கூத்து வைக்கலாம் என்று உத்தேசம்..."

"ஆகா! ரொம்ப நல்லது! குரவைக் கூத்து வையுங்கள். வில்லுப் பாட்டு வையுங்கள். கரிகால் வளவர் நாடகம், விஜயாலய சோழர் நாடகம் எல்லாம் வையுங்கள். பகலெல்லாம் காட்டில் வேட்டையாடுவதில் கழிப்போம். இரவெல்லாம் பாட்டிலும் கூத்திலும் கழிப்போம். சம்புவரையரே! என் பாட்டன் மலையமான் எனக்கு என்ன சொல்லி அனுப்பினான், தெரியுமா! கடம்பூர் சம்புவரையன் மாளிகையில் இருக்கும் போது, 'இரவில் தூங்காதே!' என்று எச்சரிக்கை செய்தான். நான் என் பாட்டனுக்கு என்ன மறுமொழி சொன்னேன், தெரியுமா? 'பாட்டா! நான் பகலிலும் தூங்குவதில்லை; இரவிலும் தூங்குவதில்லை. நான் தூங்கி மூன்று வருஷம் ஆகிறது. ஆகையால் நான் தூங்கும்போது விரோதிகள் எனக்கு ஏதேனும் தீங்கு செய்து விடுவார்கள் என்று பயப்பட வேண்டாம். நான் விழித்துக் கொண்டிருக்கும் போதே யாராவது தீங்கு செய்தால்தான் செய்யலாம். அவ்வளவு துணிச்சலுள்ள ஆண் மகன் யார் இருக்கிறான்?' என்று மலையமானுக்குத் தைரியம் சொல்லி விட்டு வந்தேன்!" என்று கூறிவிட்டுக் கரிகாலன் கடகடவென்று சிரித்தான்.

சம்புவரையர் கோபத்தினால் நடுங்கிய குரலில், "ஐயா! தாங்கள் தூங்கினாலும் சரி, விழித்துக் கொண்டிருந்தாலும் சரி,......தங்களுக்கு எவனும்......இந்த மாளிகையில் இருக்கும்போது......தீங்கு செய்யத் துணிய மாட்டான்!" என்றார்.

"ஆம், ஆம்! கடம்பூர் சம்புவரையர் மாளிகைக்குள் எனக்குத் தீங்கு செய்யக் கூடியவன் யார் இருக்க முடியும்? அல்லது வெளியிலிருந்து இவ்வளவு பெரிய மதிள் சுவர்களைத் தாண்டி யார் வர முடியும்? யமன் கூட வர முடியாது. கடம்பூர் சம்புவரையர் என்றால் யமன் கூடப் பயப்படுவானே? அந்தத் திருக்

கோவலூர்க் கிழவனாரின் வீண் கவலையைப் பற்றி உங்களுக்குச் சொன்னேன். வயதாகி விட்டதல்லவா? சில பேருக்கு வயதானால் மனோ தைரியம் குறைந்து விடுகிறது. அடுத்தாற்போல், என் பழுவூர்ப் பாட்டனைப் பாருங்கள்! எவ்வளவு மிடுக்காக நடந்து வருகிறார்? அறுபது பிராயத்தைக் கடந்தவர் என்று யாராவது சொல்ல முடியுமா?" என்று கூறிச் சிறு நகை செய்தான் கரிகாலன்.

பழுவேட்டரையர் இதற்கு மறுமொழி ஏதேனும் சொல்ல வேண்டும் என்று எண்ணித் தமது தொண்டையைக் கனைத்துக் கொண்டார். அது சிங்க கர்ஜனையைப் போல் முழங்கிற்று.

"பாருங்கள்! பெரிய பழுவேட்டரையர் தொண்டையைக் கனைத்தால் பாரெல்லாம் நடுங்கும் என்று சொல்லுவது எவ்வளவு சரியாயிருக்கிறது! கந்தமாறா! வந்தியத் தேவா! பார்த்திபேந்திரா! நீங்கள் எல்லாம் பழுவூர்ப் பாட்டன் வயதில் இவ்வளவு திடமாக இருப்பீர்களா என்று யோசித்துப் பாருங்கள். ஒருவேளை அவரைப்போல் தொண்டையைக் கனைப்பீர்கள். ஆனால் அவர் வயதில் அந்தப்புரத்துக்குப் புதிய பெண்ணைக் கொண்டு வர மாட்டீர்கள். தாத்தா! தங்களுடன் இளைய ராணியையும் அழைத்து வந்திருக்கிறீர்கள் போலிருக்கிறதே! முன்வாசல் மாடத்தில் பார்த்தேன்! இளைய ராணி எப்படிப் பிரயாணம் செய்து வந்தார்கள்? மூடு பல்லக்கிலா? ரதத்திலா? அல்லது வண்டியிலா?"

பழுவேட்டரையர் அப்போது குறுக்கிட்டு, "யானை மீது அம்பாரியில் வைத்து நாடு நகரமெல்லாம் அறிய அழைத்து வந்தேன்!" என்று பெருமிதத்துடன் கூறினார்.

"அப்படித்தான் செய்ய வேண்டும், தாத்தா! இனிமேல் எப்போதும் அப்படியே செய்யுங்கள்! மூடு பல்லக்கில் மட்டும் அழைத்து வர வேண்டாம். அதனால் பல விரஸமான வதந்திகள் ஏற்படுகின்றன. ஒரு வேடிக்கையைக் கேளுங்கள். பழுவூர் இளைய ராணியின் மூடு பல்லக்கில் சில சமயம் என் சித்தப்பன் மதுராந்தகன் இரகசியமாக ஏறிக்கொண்டு ஊர் ஊராகப் போய்வருகிறானாம்! இப்படி ஒரு வதந்தி நாடெங்கும் பரவியிருக்கிறது!" என்று கரிகாலன் கூறி இடி இடியென்று சிரித்தான்.

ஆனால் அங்கிருந்த மற்றவர்கள் யாரும் சிரிக்கவில்லை, ஒவ்வொருவர் மனத்திலும் ஒவ்வொரு விதக் கலக்கம் ஏற்பட்டது.

வந்தியத் தேவன் தன் மனத்திற்குள் "ஐயோ! எப்பேர்ப்பட்ட தவறு செய்து விட்டோம்! இந்த வெறி பிடித்த மனிதரிடம் எல்லாவற்றையும் சொல்லி விட்டோமே! ஒன்றையும் மிச்சம் வைத்துக் கொள்ளாமல் பகிரங்கப் படுத்திவிடுவார் போலிருக்கிறதே!" என்று எண்ணிக் கலங்கினான்.

பெரிய பழுவேட்டரையரின் உள்ளம் எரிமலையின் உட்பிரதேசத்தைப் போல் தீயும் புகையுமாகக் குமுறிக் கொதித்துக் கனன்றது. தீயும் புகையும் எரிமலை வாயின் வழியாக வருவதற்கு முன்னால் உண்டாகும் பயங்கர உறுமலைப் போல் அவர் மீண்டும் தொண்டையைக் கனைத்துக் கொண்டார்.

அவர் பேசுவதற்கு முன் பார்த்திபேந்திரன் ஓர் அடி முன்னால் பெயர்ந்து வந்து, "கோமகனே! பழுவூர் இளைய ராணியை நான் வெகு சிறிய காலந்தான் பார்த்துப் பழக நேர்ந்தது. அதற்குள்ளேயே அவர் எத்தகைய பத்தினித் தெய்வம் என்பதை அறிந்து கொண்டேன். பழுவூர் ராணியைப் பற்றி யாரேனும் அவதூறு கூற முற்பட்டால் அவனை அந்தக் கணமே என் வாளுக்கு இரையாக்குவேன்! இது சத்தியம்!" என்று சொன்னான்.

கந்தமாறன் பின்னால் ஒரு அடி வந்து நின்று, "என் கையில் கத்தி எடுக்க வேண்டிய அவசியமே இல்லை. பழுவூர் இளைய ராணியைப் பற்றி அவதூறு கூறுகிறவனை என் கையினாலேயே கழுத்தை நெறித்துக் கொன்று விடுவேன். இது சத்தியம்!" என்றான்.

இதைக் கேட்ட வந்தியத் தேவனும் ஒரு அடி முன் வந்து, "நானும் அப்படித்தான்! பழுவூர் ராணியைப் பற்றி யாரேனும் தவறாகப் பேசினால், என் கண் பார்வையினாலேயே அவனைச் சுட்டெரித்து விடுவேன்!" என்றான்.

"ஆஹாஹா! கொஞ்சம் பொறுங்கள், நண்பர்களே! என்னிடமே சண்டைக்கு வந்து விடுவீர்கள் போலிருக்கிறதே! பார்த்தீர்களா, தாத்தா! தமிழ்ப் பெண் குலத்தின் கௌரவத்தைக் காப்பாற்றுவதில் இவர்கள் எவ்வளவு துடிப்புடன் இருக்கிறார்கள்? ஆனால் பழுவூர் இளைய ராணியைப் பற்றி யாரும் அவதூறு சொல்லவில்லை. சொன்னால், நானும் கேட்டுக்கொண்டு சும்மா இருக்க மாட்டேன். இந்த வீராதி வீரர்கள் வரும் வரையில் அப்படி அவதூறு சொன்னவனை நான் உயிரோடு வைத்திருக்க

மாட்டேன். பழுவூர் இளைய ராணியின் மூடு பல்லக்கைப் பற்றித்தான் குறை சொல்லுகிறார்கள்! அந்தக் கோழை மதுராந்தகன் பழுவூர் ராணியின் மூடு பல்லக்கில் ஊர் ஊராக இரகசியப் பிரயாணம் செய்கிறானாம்! எப்போது ஆண்மகன் ஒருவன் மூடு பல்லக்கில் இரண்டு பக்கத்திலும் திரை விட்டுக் கொண்டு பிரயாணம் செய்கிறானோ, அப்போது இளைய ராணியும் அப்படிப் பிரயாணம் செய்தால் சில அனர்த்தங்கள் விளையக் கூடும் அல்லவா?......"

"கோமகனே! பராந்தக சக்கரவர்த்தியின் பேரனும் கண்டராதித்தருடைய திருமகனுமான மதுராந்தகத் தேவர் எதற்காக மூடு பல்லக்கில் பிரயாணம் செய்ய வேண்டுமாம்? எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே?" என்றான் பார்த்திபேந்திர பல்லவன்.

"அதன் காரணமும் ஒரு வேடிக்கையான காரணந்தான்! மதுராந்தகன் மூடு பல்லக்கில் ஏறிக்கொண்டு ஊர் ஊராகப் போய்த் தன் கட்சிக்குப் பலம் திரட்டிக் கொண்டு வருகிறானாம்!......"

"எதற்காகப் பலம் திரட்டுகிறது?"

"எதற்காகவா? என் தகப்பனாருக்குப் பிறகு சோழ ராஜ்ய சிம்மாசனத்தில் அவன் ஏறுவதற்காகத்தான்! எப்படியிருக்கிறது கதை? சில மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் இந்தக் கடம்பூர் மாளிகைக்குக் கூட அவன் அப்படி மூடு பல்லக்கில் இரகசியமாக வந்திருந்தானாம். நள்ளிரவில் சதியாலோசனைக் கூட்டம் ஒன்று இங்கே நடந்ததாம். பார்த்திபேந்திரா! திருக்கோவலூர்க் கிழவனார் நீயும் என்னுடன் இருந்தபோதுதானே இதையெல்லாம் சொன்னார்? மதுராந்தகனுக்குச் சிம்மாதனம் ஏறுவதற்கு உள்ள ஆர்வத்தினால் அவசரப்பட்டு என் தந்தையைக் கொஞ்சம் சீக்கிரமாகவே சொர்க்கத்துக்கு அனுப்பினாலும் அனுப்பிவிடுவான் என்று சொன்னாரே? அதெல்லாம் உனக்கு நினைவில்லையா?"

"நினைவுக்கு வருகிறது, இளவரசே! அதையெல்லாம் அப்போதும் நான் நம்பவில்லை. இப்போதோ, சிறிதுகூட நம்பவில்லை. தஞ்சாவூருக்குப் போய்த் தங்கள் தந்தையை நேரில் தரிசித்துவிட்டு வந்த பிறகு......"

"நீ மட்டும் என்ன? நானுங் கூடத்தான் நம்பவில்லை. நம்பியிருந்தால் இந்தக் கடம்பூர் மாளிகைக்கு விருந்தாளியாக வந்திருப்பேனா?" என்று கூறிக் கரிகாலன் மீண்டும் எதையோ நினைத்துக் கொண்டவன்போல் சிரித்தான்.

கடம்பூர் சம்புவரையர் தொண்டையைக் கனைத்துக் கொண்டு, "கோமகனே! திருக்கோவலூர் மலையமான் குலத்துக்கும் எங்கள் குலத்துக்கும் நீண்ட கால விரோதம் என்பது தங்களுக்குத் தெரிந்திருக்கும்!" என்றார்.

"தெரியாமல் என்ன? அந்த விரோதத்தைப் பற்றிச் சங்கப் புலவர்கள் பாடியிருக்கிறார்களே? கொல்லிமலை வல் வில் ஓரியை மலையமான் திருமுடிக்காரி சண்டையில் கொன்றான். வல் வில் ஓரியின் வம்சத்தில் நீங்கள் வந்தவர்கள். ஆகையால் அந்த விரோதத்தை இன்னமும் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்..."

"கோமகனே! வல் வில் ஓரியின் சாவுக்கு உடனே பழி வாங்கப்பட்டது. வல் வில் ஓரியின் உறவினனாகிய அதிகமான் நெடுமானஞ்சி திருக்கோவலூர் மீது படையெடுத்துச் சென்று அந்த ஊரையும் அழித்தான்; மலையமானு

டைய முன்னோர் மலைக்கோட்டையையும் தரைமட்டமாக்கினான்......"

"சம்புவரையரே! அதிகமான் மட்டும் தனியாக அந்தக் காரியத்தைச் செய்துவிடவில்லை. என் முன்னோனாகிய சோழன் கிள்ளி வளவனுடைய உதவியைக் கொண்டுதான் மலையமான் மீது அதிகமான் வெற்றி அடைந்தான். அந்தப் பழைய கதையெல்லாம் இப்போது எதற்கு?............"

"நாங்கள் மறந்து விட்டாலும், மலையமான் மறப்பதில்லை. ஏதாவது எங்கள் பேரில் அவன் குற்றம் சாட்டிக் கொண்டிருக்கிறான்............"

"நான்தான் சொன்னேனே? கிழவருக்கு வயதாகி விட்டது; ஆகையால் புத்தியும் தடுமாறுகிறது. நான் இங்கே இருக்கும்போது எனக்கு ஆபத்து ஒன்றும் வராமல் பாதுகாப்பதற்காக அவன் ஒரு பெரும் சைன்யத்தைத் திரட்டிக் கொண்டு வராமல் இருக்க வேண்டுமே என்று கூட எனக்குக் கொஞ்சம் கவலையாயிருக்கிறது......"

"இளவரசே! அப்படி ஏதேனும் தங்களுக்குச் சந்தேகம் இருந்தால்......" என்று சம்புவரையர் தடுமாறினார்.

"எனக்குச் சந்தேகமா? இல்லவே இல்லை. மலையமானோடு எங்கள் உறவு இரண்டு தலைமுறையாகத்தான். பழுவேட்டரையரோடு எங்கள் உறவு ஆறு தலைமுறையாகத் தொடர்ந்து வந்திருக்கிறது. பழுவூர் அரசரே இங்கே வந்திருக்கிறார். அவர் சோழ குலத்துக்கு விரோதமாக ஏதும் செய்வார் என்று நினைக்க எனக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதா?" என்று கரிகாலன் கூறிப் பைத்தியச் சிரிப்புச் சிரித்தான்.

பழுவேட்டரையர் கம்பீரமான குரலில் "இளவரசே! சோழ குலத்துக்கு விரோதமாக நான் எதுவும் செய்யமாட்டேன்; இது சத்தியம். தர்ம நியாயத்துக்கு விரோதமாகவும் எதுவும் எப்பொழுதும் செய்ய மாட்டேன். இது இருமடங்கு சத்தியம்!" என்றார்.

"ஆமாம், ஆமாம்! தர்ம நியாயம் என்பதாக ஒன்று இருக்கத்தான் இருக்கிறது. அதைப் பற்றித் தங்களிடம் பேசித் தெரிந்து கொள்ளத்தான் வந்தேன். வேட்டையாடும் நேரமும், கூத்துப் பார்க்கும் நேரமும் போக ஒழிந்த நேரத்தில் சற்று தர்ம நியாயத்தையும் பற்றிப் பேசலாம்! சம்புவரையரே! இந்தப் பிரம்மாண்டமான அரண்மனையில் நானும் என் சிநேகிதர்களும் தங்குவதற்கு எந்த இடத்தை ஏற்படுத்தியிருக்கிறீர்கள்?" என்று கேட்டான் கரிகாலன்.

"ஐயா! தங்களுக்கும் பழுவூர் மன்னருக்கும் பின்கட்டில் விருந்தினர் விடுதி முழுவதையும் ஒதுக்கி விட்டிருக்கிறோம். மற்றப்படி வரக்கூடிய சிற்றரசர்களையெல்லாம் என்னோடு முன்கட்டிலேயே வைத்துக் கொள்வேன்......"

"ஓகோ! இன்னும் சிற்றரசர்களும் வரப் போகிறார்களா?"

"ஆம்; இளவரசே! தங்களை இங்கே சந்திப்பதற்குச் சுற்றுப்புறமுள்ள குறுநிலமன்னர்கள் எல்லாரும் ஆவலாயிருக்கிறார்கள். பலரும் வருவார்கள்."

"வரட்டும்; வரட்டும்! எல்லாரும் வரட்டும்! ரொம்ப நல்லது. யோசித்து முடிவு செய்ய வேண்டியதை ஒரு வழியாக முடிவுசெய்து விடலாம். மதுராந்தகனுடைய சதியாலோசனை ஒருபுறம் இருக்கட்டும். நானே உங்களுடன் சேர்ந்து ஒரு சதியாலோசனை செய்ய விரும்புகிறேன். அதற்கு இந்த மாளிகையைக் காட்டிலும் தகுந்த இடம் கிடைக்காது!" என்றான் கரிகாலன்.

அத்தியாயம் 17

பூங்குழலியின் ஆசை

நாகைப் பட்டினத்திலிருந்து கோடிக்கரை வரையில் சென்ற ஓடையில் பூங்குழலியின் படகு போய்க் கொண்டிருந்தது. பூங்குழலியோடு சேந்தன் அமுதனும் அப் படகில் இருந்தான். படகு கோடிக்கரையை நெருங்கிக் கொண்டிருந்தது.

ஓடைக் கரையில் தங்க நிறத் தாழம் பூக்கள் மடல் விரித்து மணத்தை அள்ளி எங்கும் வீசிக் கொண்டிருந்தன.

ஒரு தாழம்பூவின் மீது பச்சைக் கிளி ஒன்று பறந்து வந்து உட்கார்ந்தது. அது உட்கார்ந்த வேகத்தில் தாழம்பூ ஊஞ்சல் ஆடுவது போல் ஆடியது. பச்சைக் கிளியும் அத்துடன் ஆடிவிட்டுப் பிறகு அதன் தங்க நிற மடலைத் தன் பவள நிற மூக்கினால் கொத்தியது.

படகு நெருங்கியதும், பச்சைக் கிளி 'கிக்கி' 'கிக்கி' என்று கத்திக் கொண்டு பறந்தோடி விட்டது.

"பிறந்தால் பச்சைக் கிளியாகப் பிறக்க வேண்டும்!" என்றாள் பூங்குழலி.

"நீ அவ்விதம் எண்ணுகிறாய்! அதற்கு எத்தனை கவலையோ, எவ்வளவு கஷ்டமோ, யார் கண்டது?" என்றான் சேந்தன் அமுதன்.

"என்ன கவலை, கஷ்டம் இருந்தாலும், இஷ்டம் போல் எல்லையற்ற வானத்தில் பறந்து செல்ல முடிகிறதல்லவா? அதைக் காட்டிலும் இன்பம் வேறு உண்டா?" என்றாள் பூங்குழலி.

"அப்படிப் பறந்து திரியும் பச்சைக் கிளியைச் சிலர் பிடித்துக் கூண்டில் அடைத்து விடுகிறார்களே!" என்றான் சேந்தன் அமுதன்.

"ஆமாம், ஆமாம்! அரண்மனைகளில் வாழும் இராஜ குமாரிகள் பச்சைக்கிளிகளைக் கூண்டுக்குள் அடைத்து வைக்கிறார்கள்! குரூர ராட்சஸிகள்! கிளிகளைக் கூண்டில் அடைத்து விட்டு அவற்றுடன் கொஞ்சி விளையாடுகிறார்கள்! நான் மட்டும் ஏதேனும் ஓர் அரண்மனையில் சேடிப் பெண்ணாயிருந்தால், கூண்டில் அடைபட்ட கிளிகளுக்கு விஷம் வைத்துக் கொன்றுவிடுவேன். கிளிகளைப் பிடித்துக் கூண்டில் அடைக்கும் இராஜ குமாரிகளுக்கும் விஷத்தைக் கொடுத்து விடுவேன்......"

"நீ இப்போது பேசுவதைக் கேட்டால், உன்னையும் குரூர ராட்சஸி என்றுதான் சொல்லுவார்கள்."

"சொன்னால் சொல்லட்டும்! நான் ராட்சஸியா யிருந்தாலும் இருப்பேன்; இராஜ குமாரியா யிருக்க மாட்டேன்."

"இராஜ குமாரிகளின் மீது உனக்கு ஏன் இத்தனை கோபம், பூங்குழலி! பார்க்கப்போனால், அவர்கள் பேரிலும் பரிதாபப் படவேண்டியதல்லவா? கூண்டில் அடைபட்ட பச்சைக் கிளிகளைப் போலத்தான் அவர்களும் அரண்மனைக்குள் அடைபட்டுக் காலங் கழிக்க வேண்டி யிருக்கிறது. தப்பித் தவறி அவர்கள் வெளியில் புறப்பட்டால், எத்தனை கட்டுக் காவல்? எத்தனை இரகசியம்? எத்தனை ஜாக்கிரதை? உன்னைப் போல் அவர்கள் படகில் ஏறிக்கொண்டு, தன்னந் தனியாக ஓடையிலும் கடலிலும் போக முடியுமா? இஷ்டப்படி துள்ளித் திரியும் மானைப் போல் காட்டில் சுற்றி அலைய முடியுமா?"

"அவர்களை யார் அடைந்து கிடக்கச் சொல்கிறார்கள்? நான் சொல்லவில்லையே? இஷ்டமிருந்தால் அவர்களும் காட்டில் அலைந்து திரிவதுதானே?"

"இஷ்டம் மட்டும் போதாது. அவரவர்களுடைய பிறப்பு வளர்ப்பையும் பொறுத்தது. கிளியைப் போல் நீயும் வானத்தில் பறக்க விரும்புகிறாய். அது முடிகிற காரியமா? கடற்கரையில் நீ பிறந்து வளர்ந்தாய். அதனால் இவ்வளவு சுயேச்சையாக இருக்க முடிகிறது. அரண்மனையில் பிறந்து வளர்ந்தவர்களால் அது முடியாது. இன்னும் ஒரு விசித்திரத்தைக் கேள். சிலநாள் கூண்டில் அடைபட்டு இராஜ குமாரிகளின் கையினால் உணவு அருந்திப் பழக்கப்பட்ட கிளிகள் பிறகு கூண்டைத் திறந்து விட்டாலும் ஓடிப் போகவே விரும்புவதில்லை. சிறிது தூரம் பறந்து வட்ட மிட்டுவிட்டு, பிறகு 'கிறீச்' 'கிறீச்' என்று கத்திக்கொண்டு கூண்டுக்குத் திரும்பி வந்து விடும். தஞ்சையிலும் பழையாறையிலும் உள்ள அரண்மனைகளில் இதை நானே நேரில் பார்த்திருக்கிறேன்......"

"அவ்விதம் கூண்டில் அடைபடுவதற்கு நான் ஒருநாளும் சம்மதிக்க மாட்டேன். நான் கிளியா யிருந்தால் சொல்கிறேன். என்னைக் கூண்டில் அடைத்து வைத்து அமுதூட்ட வரும் இராஜகுமாரியின் கையை வெடுக்கென்று கடித்து விடுவேன்......"

"கூண்டில் அடைபட்ட கிளியா யிருக்கவும் நீ விரும்ப மாட்டாய். அரண்மனையில் அடைபட்ட அரசிளங் குமரியா யிருக்கவும் நீ விரும்ப மாட்டாயல்லவா?"

"மாட்டவே மாட்டேன். அதைக் காட்டிலும் விஷந்தின்று உயிரை விட்டு விடுவேன்!"

"அதுதான் சரி! அப்படியானால் அரண்மனையில் வாழும் இராஜ குமாரனைக் கலியாணம் செய்து கொள்ளவும் நீ ஆசைப்படக் கூடாது!"

கீழ்வானத்தில் கருமேகங்கள் திரண்டு கொண்டிருந்தன. அவ்வப்போது பளீர் பளீர் என்று மின்னல்கள் மின்னிக் கொண்டிருந்தன. இடியின் குமுறல் இலேசாகக் கேட்டுக் கொண்டிருந்தது.

சேந்தன் அமுதன் கடைசியாகச் சொன்னதைக் கேட்டதும் பூங்குழலியின் கண்களிலிருந்தும் பளீர் என்று மின்னல் கற்றைகள் புறப்பட்டன.

"நான் இராஜ குமாரனைக் கலியாணம் செய்து கொள்ள ஆசைப்படுவதாக உனக்கு யார் சொன்னது?" என்று கோபமாகக் கேட்டாள்.

"எனக்கு யாரும் சொல்லவில்லை. நானாகத்தான் சொன்னேன். உன் மன



தில் அத்தகைய் ஆசை இல்லாவிட்டால் நல்லதாய்ப் போயிற்று. நான் சொன்னதை மறந்து விடு!'' என்றான் சேந்தன் அமுதன்.

சற்று நேரம் அந்தப் படகில் மௌனம் குடி கொண்டிருந்தது. சேந்தன் அமுதன் துடுப்பினால் படகு தள்ளும் சத்தமும், வறட்டுத் தவளைகளின் குரலும், கடற் பறவைகளின் ஒலியும், கடல் அலைகளின் ஓசையும், அவ்வப்போது கீழ்த்திசையில் இடி முழக்கமும் கேட்டுக் கொண்டிருந்தன.

சேந்தன் அமுதன் தொண்டையைக் கனைத்துக் கொண்டு மனத்தையும் தைரியப்படுத்திக் கொண்டு ''பூங்குழலி! என் அந்தரங்கத்தை வந்தியத் தேவன் உன்னிடம் வெளியிட்டதாகக் கூறினாய் அல்லவா? அதைப் பற்றி உன் கருத்தைத் தெரிவித்தால் நல்லது. அதோ கோடிக்கரையின் கலங்கரை விளக்கம் தெரிகிறது. இனி உன்னோடு தனியாகப் பேசும் சந்தர்ப்பம் கிட்டாமற் போகலாம். நாளை நானும் புறப்பட்டுச் செல்ல வேண்டும். தஞ்சையில் என் தாயாரைத் தனியாக விட்டு வந்து வெகு நாளாகிறது!'' என்றான்.

''வந்தியத் தேவன் உனக்காக ஏன் தூது சொல்ல வேண்டும்? உனக்கு வாய் இல்லையா? கேட்க வேண்டியதை நேரில் கேட்டுவிடேன்!'' என்றாள் பூங்குழலி.

''சரி! கேட்கிறேன். நீ என்னைக் கலியாணம் செய்து கொள்வாயா?'' என்று சேந்தன் அமுதன் கேட்டான்.

''எதற்காக என்னைக் கலியாணம் செய்து கொள்ளும்படி கேட்கிறாய்!'' என்றாள் பூங்குழலி.

''உன்பேரில் எனக்கு அந்தரங்கமான ஆசை இருக்கிறது. அதனாலேதான்!''

''அந்தரங்கமான ஆசையிருந்தால் கலியாணம் செய்து கொண்டுதான் தீர வேண்டுமா?''

''அப்படியொன்றும் 'தீரவேண்டும்' என்பதில்லை. உலக வழக்கம் அப்படி இருந்து வருகிறது......''

''உன்னைக் கலியாணம் செய்துகொண்டால் எனக்கு நீ என்ன தருவாய்? நான் வேண்டும் அரண்மனை வாழ்வும் ஆடை ஆபரணங்களும் யானை குதிரைகளும் பல்லக்கும் பணிப் பெண்களும் உன்னால் தர முடியுமா?''

''முடியாது; அவற்றுக் கெல்லாம் மேலான அமைதியுள்ள வாழ்க்கையைத் தருவேன். கேள், பூங்குழலி! தஞ்சை நகர்ப் புறத்தில் அழகான பூந்தோட்டத்தின் மத்தியில் என் குடிசை இருக்கிறது. அதில் என் அன்னையும் நானுந்தான் வசிக்கிறோம். நீ அங்கு வந்து விட்டாயானால், உன் வாழ்க்கையே மாறுதல் அடைந்து விடும். என் அன்னை உன்னை அன்போடு வைத்து ஆதரித்துப் பாதுகாப்பாள். பொழுது விடிந்ததும் எழுந்திருந்து நம் வீட்டைச் சுற்றியுள்ள கொடிகளிலும் மரங்களிலும் குலுங்கும் மலர்களை இருவரும் சேர்ந்து சித்திர விசித்திரமான மாலைகளாகக் கட்டலாம். மாலைகளை நான் தஞ்சைத் தளிக் குளத்தார் ஆலயத்துக்கும் துர்க்கா பரமேசுவரியின் ஆலயத்துக்கும் கொண்டு போய்க் கொடுத்து விட்டு வருவேன். அதற்குள் நீ எங்கள் தோட்டத்திலுள்ள தாமரைக் குளத்தில் குளித்து விட்டு என் அன்னைக்கு வீட்டு வேலைகளில் உதவி செய்யலாம். மாலை நேரங்களில் நாம் மூவரும்



தாமரைக் குளத்தில் தண்ணீர் மொண்டு கொண்டு போய்ப் பூச்செடிகளுக்கு ஊற்றலாம். மாலை ஆனதும் நான் உனக்கு அமுதினும் இனிய தெய்வத் தமிழ்ப் பதிகங்களைச் சொல்லிக் கொடுப்பேன். உன்னுடைய மதுரமான குரலில் அவற்றைப் பாடினால், பாடிய உன் நாவும் இனிக்கும்; கேட்கும் என் காதும் இனிக்கும். நமக்கு விருப்பம் இருந்தால் ஆலயங்களுக்குச் சென்று இறைவனைத் தரிசித்து விட்டு அத் தெய்வப் பாடல்களைப் பாடி விட்டு வரலாம். கோயிலுக்கு வரும் பக்தர்களும் கேட்டு மகிழ்வார்கள். பூங்குழலி! இதைக் காட்டிலும் இனிய வாழ்க்கை, மகிழ்ச்சி அளிக்கும் வாழ்க்கை உலகில் வேறு என்ன இருக்க முடியும்? யோசித்துப் பார்த்துச் சொல்லு!"

இவ்விதம் சேந்தன் அமுதன் கூறியதை யெல்லாம் கேட்டு விட்டுப் பூங்குழலி கல கல வென்று சிரித்தாள்.

"அமுதா! நீ இனியதென்று கருதும் வாழ்க்கையைப் பற்றிச் சொன்னாய்! ஆனால் நான் எத்தகைய வாழ்க்கை வேண்டுமென்று ஆசைப்படுகிறேன், தெரியுமா? வானுலகத்துக்குச் சென்று தேவேந்திரனை மணந்து கொள்ள ஆசைப்படுகிறேன். தேவேந்திரனுடன் ஐராவதத்தில் ஏறி வானத்தில் மேக மண்டலங்களுக்கு மத்தியில் பிரயாணம் செய்ய விரும்புகிறேன். தேவேந்திரனுடைய கையிலிருந்து வஜ்ராயுதத்தைப் பிடுங்கி மேகக் கூட்டங்களின்மீது பிரயோகிக்க ஆசைப்படுகிறேன். வஜ்ராயுதத்தினால் தாக்கப்படும்போது அந்தக்

கரிய மேகங்களிலிருந்து ஆயிரம் பதினாயிரம் மின்னல்கள் கற்றை கற்றையாகக் கிளம்பி வான மண்டலத்தைச் சுக்கு நூருகப் பிளப்பதைப் பார்க்க ஆசைப்படுகிறேன். இப்போதெல்லாம் வானத்திலிருந்து இடி விழுந்தால் எங்கேயோ கடலில் அல்லது காட்டில் விழுந்து மறைந்து விடுகிறதல்லவா? நான் அப்படி இடிகளை வீணுக்க மாட்டேன். அரசர்களும் அரசிகளும் இராஜகுமாரர்களும் இராஜகுமாரிகளும் வாழும் அரண்மனைகளாகப் பார்த்து அவற்றின் மேலே இடிகளைப் போடுவேன். அந்த அரண்மனைகள் இடிந்து விழுந்து மண்ணோடு மண்ணுவதைப் பார்த்துக் களிப்பேன். தேவேந்திரன் ஒரு வேளை என்னை மணந்து கொள்ள இஷ்டப்படாவிட்டால் வாயு தேவனிடம் செல்வேன். அவனுக்கு ஏற்கெனவே பல மனைவிகள் இருந்தாலும் பாதகம் இல்லை யென்று என்னை மணந்து கொள்ளச் சொல்லுவேன். அவ்வளவுதான். பிறகு இந்த உலகத்தில் எப்போதும் புயற் காற்றும் சுழிக் காற்றும் சண்டமாருதமும் அடித்துக் கொண்டே யிருக்கும். பெரிய பெரிய மரங்கள் பெயர்ந்து மாடமாளிகைகளின் மீது விழுந்து அவற்றை அழிக்கும். கடலில் போகும் மரக்கலங்கள் சண்டமாருதத்தினுல் தாக்குண்டு துகள் துகளாகச் சிதறிப் போகும். அந்தக் கப்பல்களில் பிரயாணம் செய்வோர் கொந்தளிக்கும் கடலில் விழுந்து தவிப்பார்கள். அவர்களில் இராஜகுமாரர்களும் இராஜகுமாரிகளும் இருந்தால் அவர்கள் ஆழ்கடலின் அடிவாரத்துக்குப் போகட்டும் என்று விட்டு விட்டு, மற்றவர்களை மட்டும் போனுல் போகிறதென்று தப்ப வைப்பேன். வாயுதேவனும் ஒருவேளை என்னை மணந்து கொள்ள மறுத்தால் அக்கினி தேவனிடம் செல்வேன். அப்புறம் கேட்க வேண்டுமா? இந்த உலகமே தீப்பற்றி எரிய வேண்டியதுதான்!...''

"பூங்குழலி! போதும்! நிறுத்து! ஏதோ ஒரு மனக் கசப்பினுல் இவ்விதமெல்லாம் நீ பேசுகிறுய். மனமறிந்து யோசித்துப் பேசவில்லை. உன் மனநிலையை அறிந்து கொள்ளாமல் உன்னிடம் நான் கலியாணப் பேச்சை எடுத்ததே என் தவறுதான். அதற்காக என்னை மன்னித்து விடு! கடவுள்தான் உன்னுடைய மனக் கசப்பைப் போக்கி அமைதி அளித்து அருள வேண்டும். அதற்காக நான் அல்லும் பகலும் பிரார்த்தனை செய்து வருவேன்!'' என்றுன்.

உட்கார்ந்திருந்த பூங்குழலி திடீரென்று எழுந்து நின்றுள். ஓடைக் கரையில் இருந்த ஒரு மரத்தின் பக்கமாக உற்றுப் பார்த்தாள். சேந்தன் அமுதனும் அந்தத் திசையை நோக்கினுன். மரக்கிளைகளின் மத்தியில் ஒரு பெண்மணியின் முகம் தெரிந்தது. சேந்தன் அமுதன் ஒரு கணம் அங்கே நின்றவளின் முகத்தில் தன் அன்னையின் முகச் சாயலைக் கண்டு திகைத்துப் போனுன்.

பின்னர், அவன் தன் அன்னை இல்லையென்பதை அறிந்து கொண்டான். பூதத் தீவில் வசிப்பதாகப் பூங்குழலி கூறிய தன் பெரியம்மாவாக இருக்க வேண்டும் என்று ஊகித்துக் கொண்டான்.

பூங்குழலி படகிலிருந்து தாவி ஓடைக் கரையில் குதித்து அந்தப் பெண்மணியை நோக்கி விரைந்து ஓடினுள். (தொடரும்)

தமிழ்க் களஞ்சியம்



டி.கே.சி

14. ஆம்; போய்க் கொண்டே யிருக்கும்!

தமிழ் நாட்டிலோ தமிழர்களிடத்திலோ வீரம் இல்லை என்று சொல்லுவார் கிடையாது. சென்ற யுத்தத்தில் தமிழ்நாட்டு வீரர்கள் வட நாட்டு வீரர்களோடு கலந்து போர் செய்ய வேண்டிய சந்தர்ப்பங்கள் பல இருந்தன. அந்தச் சந்தர்ப்பங்களிலெல்லாம் தமிழர்களே மற்றவர்களை விட வீரங் காட்டிக் காரியத்தைச் சாதித்தார்கள். இது ராணுவ அதிகாரிகள் எழுதி வைத்துள்ள குறிப்பு.

ஆனால் சில வருஷங்களுக்கு முன்பு சில ஆசிரியர்கள் ஏதோ தமிழைக் கரை கண்டவர்கள் மாதிரி வீர ரஸமான பாடல்கள் தமிழில் இல்லை; தமிழ் பாஷையே வீரத்துக்கு ஒவ்வாத பாஷை என்றெல்லாம் பட்டம் கட்டிப் பறக்க விட்டார்கள். மற்றவர்கள் என்னத்தைக் கண்டார்கள்? "ததாஸ்து" வைத்தார்கள். இனி:

⁂

வீரச் சுவையுள்ள பாடல்கள் ஒன்றிரண்டைப் பார்க்கலாம்.

அச்சுத களப்பாளன் மிக்க சேனை வளம் கொண்டவனாய் இருந்தான். குதிரை என்ன, தேர் என்ன, யானை என்ன, எல்லாம் அபாரமாய் இருந்தது. அவனுடைய நாடு தொண்டை நாடு. தொண்டை நாடு என்றாலே வட நாட்டாருக்குப் பயம்.

அச்சுத களப்பாளன் அபூர்வமான போர் யானைகள் வைத்திருந்தான். அவைகளின் வீரச் செயல்களைப் பற்றிப் புகழாதவர்கள் கிடையாது. இது சம்பந்தமாக ஒரு விஷயம்.

சார்லஸ் டார்வின் என்பவர் சயன்ஸ் உலகத்தில் மிகச் சிறந்தவராய் விளங்கியவர். இப்போதும் அவருடைய பெயர் மங்கவில்லை.

ஒரு ஆராய்ச்சிக் கழகம் இங்கிலாந்தில் இருந்து புறப்பட்டுத் தென் அமெரிக்காவுக்குப் போயிற்று. அதில் டார்வினும் கலந்து கொண்டார். ரோடு வசதிகள் யாதும் இல்லாத காலம் அது.

ஆராய்ச்சிக் கழகத்தார் ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்துக்குப் போன போது அந்த ஊர்க் குடிகள் இருபது பேர் தலையில் சாமான்களை ஏற்றி நடந்து செல்லுவார்கள் கழகத்தார். அப்படிப் போகும்போது பருந்துகளும் கழுகுமாக வட்டமிட்டுக் கூடவே பறந்து வந்தன.


கூலி ஆள் ஒருவனிடம் டார்வின் "ஏன் இப்படி நம்மை விடாது சுற்றிக் கொண்டே வருகின்றன பருந்துகளும் கழுகுகளும்?" என்று கேட்டார்.

கூலி ஆள் சொன்னான்: "இந்த மாதிரி கூட்டமாய் நாங்கள் போனோமானால் யுத்தத்துக்குப் போகிறோம் என்றுதான் பொருள். யுத்தத்தில் அனேகர் இறந்து படுவார்கள். பருந்துகளுக்கும் கழுகுகளுக்கும் கொண்டாட்டம் தான். அதை உத்தேசித்துத்தான் இப்போதும் வருகின்றன அவை." இனி:

⁂

அச்சுத களப்பாளனது போர் யானைக்கு (பெரிய கொம்பனுக்கு)க் கள்ளை நிறைய ஊட்டி, சங்கிலியைக் கழற்றிப் பகையாளிகளின் ஊரை நோக்கித் திருப்பி விட்டு விட்டார்கள். யானை, காதை வீசிக் கொண்டும், தும்பிக்கையை வேகமாக அப்படியும் இப்படியும் ஆட்டிக் கொண்டும், காலை ஒரே எட்டாக எட்டி வைத்தும் வேகமாய் நடக்கிறது.

பகையாளிகளின் ஊரும் மக்களும் என்ன பாடு படுவார்கள் என்பது பற்



புது டில்லியில் ஸ்ரீ வி. சங்கர ஐயர் அவர்களின் திருப்பணியான பிள்ளையார் கோவிலுக்குக் கும்பாபிஷேக மகோத்ஸவம் சிறப்பாக நடைபெற்றது. சேங்காலிபுரம் ஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் மேற்படி வைபவத்துக்காக விஜயம் செய்திருந்தார்கள். ஸ்ரீ வி. சங்கர அய்யர் தம்பதிகளையும் டாக்டர் கே. என். கிருஷ்ணன் தம்பதிகளையும் படத்தில் காணலாம்.

றிச் சொல்லவா வேண்டும்? பகையாளிகளைத் தொம்சம் செய்யப் புறப்பட்டு விட்டது யானை என்று பருந்துகளுக்கும் பேய்களுக்கும் நரிகளுக்கும் செந்நாய்களுக்கும் தெரிந்து விட்டது.

படுபருந்தும் பேயும்
  நரியும் செந் நாயும்
கொடிகழுகும் இத்தனையும்
  கூடி — வடிவுடைய
கோமான் கனப்பானன்
  கொல்யானை போர்வேட்டுப்
போமாறு போமாறு
  போம்!

[படு பருந்தும்: கொடிய பருந்துகளும்; கொடி கழுகும்: வெகு விசாலமான இறக்கைகளைக் கொண்ட கழுகுக் கூட்டங்களும்; வடிவுடைய கோமான்: அழகு வாய்ந்த அரசன்; கொல்யானை: போர் யானை; போர் வேட்டு: போர் வெறி கொண்டதாய்]

வீர ரஸம் என்பது அப்படியே பொழிகிறது பாட்டில்.

வேல் முனை

பாண்டியனது வீரத்தைப் பற்றி வீர ரஸம் பொங்கப் பாடுகிறார் முத்தொள்ளாயிர ஆசிரியர்.

புலவர் பாண்டியனுடனேயே இருக்கிறார். அவர் அதிசயித்த காட்சிகளில் ஒன்று: பல இடங்களில் இருந்து தங்கச் சுரங்கங்களிலக் கிடைத்த தங்கக் கட்டிகளைக் கொண்டு வந்து சமர்ப்பிக்கிறார்கள் அரசன் முன்னிலையில்.

ஏது, மண் வெட்டியைக் கீழே போட்டால் தங்கம்தான் தட்டுப்படும் போல் இருக்கிறது பாண்டி நாட்டில்!

பாண்டி நாட்டு ஊர்களுக்குச் சென்றால் நாடகப் பாட்டுகள், நடனப் பாட்டுகள், கவிகள் இவைகளை ஆங்காங்கு மக்கள் சங்கங்களாய் இருந்து அனுபவித்துக் கொண்டல்லவா இருக்கிறார்கள்!

அந்தக் காலத்தில் சங்குகள் விலையுயர்ந்த வஸ்து. சங்குகளை வளையல்களாகச் செய்து காஷ்மீரம் வரையும் அனுப்பி வந்தார்கள் பாண்டி நாட்டில்.

முத்தைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். கடலில் இறங்கி ஒரு முங்கு முங்க வேண்டியது. கைக்கு வருவது முத்துத் தான் போல் இருக்கிறது இந்தப் பாண்டி நாட்டில்!

மலைச் சாரலுக்குப் போனால் — பொதிகை மலைச் சாரல்த்தான் — யானைகள் கூட்டம் கூட்டமாய்க் கிடைக்கும். கேட்பானேன் பாண்டியனது யானைப் படையின் வளத்துக்கு!

மேலே சொன்ன விஷயங்களையொட்டி பாண்டியனது கைவேல் செய்யும் காரியத்தைச் சொல்லுகிறார் கவிஞர்:

பார்படுப செம்பொன்,
  பதிபடுப முத்தமிழ்,
நீர்படுப வெண்சங்கும்
  நித்திலமும்—சாரல்
மலைபடுப யானை
  வயமாறன் கூர்வேல்
தலைபடுப தார்வேந்தர்
  மார்பு.

[பார்படுப: தோண்டினும் மண்ணில் காண்பது; பதிபடுப: கைநருங்கக் காண்பது; நீர் படுப: சமுத்திரத்தில் காண்பது; சித்திலம்: முத்து; சாரல் மலைபடுப: மலைச் சாரல்களில் காண்பது; வயமாறன்: சக்தி வாய்ந்த பாண்டியனது; கூர் வேல்த் தலைபடுப: கூர்மையான வேலின் முனையில் காண்பது என்ன; தார் வேந்தர் மார்பு: ரத்ன மாலைகள் அணிந்த பகையரசர்களின் மார்புதான்; யுத்தத்தில் பகையரசர்களின் மார்பின் ஊடுருவி நிற்கும் வேல் என்பது குறிப்பு.]

பாடல்களைப் பார்த்த பிறகு வீரரஸம் தமிழ்க் கவிகளில்த் தான் இருக்குமோ என்று சொல்லத் தோன்றுகிறது.

படித்துப் பாருங்கள்!

திருக்குறட் சொல்லடைவு

உலகப் பொது நூல் திருக்குறள்; உலகம் போற்றும் நூல் திருக்குறள்; அதன் காரணமாகத்தான் மகா கவி பாரதியார், "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு" என்றார்.

மனித வாழ்க்கையை மாண்புறச் செய்யும் உயர்ந்த விஷயங்களெல்லாம் திருக்குறளில் அடங்கியிருக்கின்றன. அந்த இணையற்ற நூலின் சொற் சுவை, பொருட் சுவைகளை நுகர்ந்து இன்புற இந்நூல் பேருதவியாக அமைந்திருக்கிறது.

ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள் பாக்களிலும் ஆளப்பட்டிருக்கும் ஒவ்வொரு சொல்லையும் பிரித்து எடுத்து அகர வரிசைப்படுத்தி, எந்தெந்தப் பொருள்களில் அவை உபயோகப் படுத்தப் பட்டிருக்கின்றன என்பதைக் கணக்கிட்டுக் காட்டியிருக்கிறார் இந்நூலாசிரியர். ஒவ்வொரு சொல்லின் அடியையும் காட்டி, அந்த அடியின் மூலம் அதன் பொருளையும் விளக்கச் செய்திருக்கிறார். ஒரு சொல் இன்னொரு சொல்லுடன் சேர்ந்து வேறு புதுப் பொருளில் வந்திருந்தாலும் அதையும் தொடரிலக்கணக் குறிப்புடன் வெளியிட்டிருக்கிறார். வள்ளுவர் காலத்தில் வளர்ந்த தமிழின் சொற்றொடர் அமைப்பு எவ்வாறு இருந்தது என்பதை அறிய இவ்வாராய்ச்சி நூல் பெரிதும் பயன்படும். திருக்குறளை ஆழ்ந்து அறிவதற்கு ஏற்ற முறையில், வெளி வந்திருக்கும் முதல் பேரகராதி என்று இந் நூலைக் கூறலாம்.

திருக்குறள் பாக்களை எழுத்தெண்ணிப் படித்தவர்களுக்கும் அவைகளை நினைவில் இருத்திக் கொள்ளுதல் என்பது எளிதான காரியமன்று; சிலருக்குச் சில குறள் பாக்கள் நினைவில் இருக்கும்; இன்னும் சிலருக்குச் சில குறள்களின் முதல் பதம் மட்டும் நினைவில் இருக்கும்; மற்றும் சிலருக்கு இரண்டொரு குறள்களின் கடைசி வார்த்தைகள் மட்டும் நினைவில் இருக்கும். அத்தகையவர்கள் கையில் இந்நூல் இருந்தால் கவலையே வேண்டியதில்லை. முதற் குறிப்பு அடைவு, கடைச் சொல் அடைவு என்னும் பகுதிகள் இந்நூலைப் படிப்பவர்களுக்குப் பெரிதும் பயன் படுவனவாகும்.

பல ஆண்டுகள் பாடு பட்டு இவ்வரிய ஆராய்ச்சி நூலை இயற்றித் தந்த ஆசிரியர் எல்லோருடைய பாராட்டுக்கும் உரியவர் என்பதில் ஐயமில்லை. திருக்குறளில் வழங்கும் இடைச் சொற்கள், உரிச் சொற்கள், அவை சேர்ந்து நிற்கும் இடங்கள் முதலியவற்றைத் தேடித் தொகுத்து, அவை எந்த எந்தப் பொருளில் வருகின்றன, எந்த எந்தத் திருக்குறளை அடைந்து நிற்கின்றன என்று விளக்கமாகக் கூறுவதால் இந் நூலுக்குத் திருக்குறட் சொல்லடைவு என்னும் பெயர் ஏற்பட்டது. மேற்படி சொற்களின் எழுத்தை இலக்கணக் கூறுபாட்டினால் எண்ணி, பிறகு அவற்றின் பொருளை எண்ணி, சொற்களின் பிரயோக மரபை எண்ணி இந்நூல் தொகுக்கப் பட்டிருப்பது பாராட்டுக்குரியதாகும். தமிழ் மொழியில் இம்மாதிரி அரிய ஆராய்ச்சி நூல் வெளி வருவது முதல் முயற்சி.

ஆசிரியர்: தமிழ்மணி சாமி வேலாயுதம் பிள்ளை; பிரசுரம்: மொழியரசிப் பதிப்பகம், சென்னை; விலை: ரூ. 7—0—0.

SERVICE (தீபாவளி மலர்)

'சேவை' என்ற பெயரில் வருஷத்துக்கு நான்கு முறை வெளியாகும் இந்த ஆங்கிலப் பத்திரிகை விஞ்ஞானத்துக்கும், கலைகளுக்கும் அருந் தொண்டாற்றி வருகிறது. இதோ, இந்தத் தீபாவளி மலரையே எடுத்துக் கொள்ளுங்கள். புரொபஸர் வி. மகாதேவன் என்பவர் பங்களூரிலுள்ள ராமன் ஆராய்ச்சிக் கூடத்தைப் பற்றி அருமையான கட்டுரை எழுதியிருக்கிறார். ஸ்ரீ கே. பாஷ்யம் அவர்கள் அரசியல் சம்பந்தமான கட்டுரை எழுதி யிருக்கிறார். நீதிபதி ராஜமன்னார் காளிதாஸனைப் பற்றி இலக்கிய சம்பந்தமான கட்டுரை எழுதி யிருக்கிறார். ஸர் ஆர். கே. ஷண்முகம் செட்டியாரைப் பற்றி, கவாஜித் திருநாளைப் பற்றி, ராஜம் ஐயரைப் பற்றி, ஆனந்த குமாரஸ்வாமியைப் பற்றி யெல்லாம் கட்டுரைகள் இருக்கின்றன. இப்படிப் பல விஷயங்களைப் பற்றி அறிவிற் சிறந்தவர்கள் எழுதிய கட்டுரைகள் கொண்ட இந்த மலரை யாருமே பொக்கிஷமாகப் போற்றுவார்கள்.

ஆசிரியர்: எஸ். ஆர். வெங்கடராமன்; கிடைக்குமிடம்: "Service" Publications, 9, Bombay Mutual Annexe, Linghi Chetty St., Madras-1, விலை ரூ. 3.





"ஏ, ராக்கம்மா!"

"என்ன?" என்றாள் ராக்கம்மாள் தான் படுத்திருந்த பாயில் முதுகையும் உடலையும் நெளித்துக் கொண்டே.

"கோழி கூவி ஏழு சாமம் ஆகுது. இன்னும் என்ன தூக்கம்! எழுந்திரு எழுந்திரு!" என்றான் அவள் கணவனான சொக்கன்.

"கிழக்கு வெளுக்க இன்னும் நேரம் கெடக்கு—நிலாவே மறையல்லையே!" என்றாள் ராக்கம்மாள் பாயை விட்டு எழுந்து உட்கார்ந்து கொண்டே.

"பின் நிலா காலத்திலே பொழுது விடியற வரைக்கும்தான் நிலா காயும். அது ஒரு கணக்கா, எழுந்திரு! எழுந்திரு!" என்றான் சொக்கன் மறுபடியும்.

சொக்கன் கவலை இறைக்கும் சாலையும் நொற்றுக் கயிற்றையும் தோளின்மீது தூக்கிக்கொண்டு தொழுவத்திலிருந்த ஜோடி மாட்டையும் ஓட்டிக்கொண்டு வயலை நோக்கிப் புறப்பட்டான். அப்படிப் புறப்படுவதற்கு முன் ஒரு முறை ராக்கம்மாளைத் திரும்பிப் பார்த்து, "ஏ, பின்னே! கஞ்சிக் கலயத்தைத் தூக்கிக்கிட்டு மில்லிலே சங்கூதுற நேரத்துக்கு முன்னாலேயே வந்துவிடு!" என்று சொல்லி அப்பால் நகர்ந்தான்.

"ஆகட்டும், மச்சான்! சாமி வீட்டுக்குப் போய் நெல்லைக் குத்திக் கொடுத்துவிட்டு வந்து, கஞ்சி காய்ச்சி எடுத்துக்கிட்டு வர்றேன்!" என்றாள் ராக்கம்மாள்.

அவள் கூறியதைக் கேட்டு முடித்ததும் 'ஹை...ஹை' என்று சொக்கன் மாட்டை ஓட்டினான். ஜல்...ஜல் என்ற சதங்கைச் சத்தம் மாட்டின் கழுத்துப் பட்டையிலிருந்து எதிரொலித்தது.

வானத்திலிருந்த சந்திரன் தன் பொன் நிலவைப் பசுங் கதிர்களின் மீது பொழிந்து பூமியைச் சுவர்க்க பூமியாகச் செய்து கொண்டிருந்தான். காலை நேரத்துக் குளிர் காற்றில் அப்பொழுதுதான் மூளைவிட்டு எழும்பியிருக்கும் பச்சிளங் கதிர்கள், ஒரு பச்சைக் கம்பளத்தை உதறிப் போடுவதுபோல், அலை அலையாக அசைந்தாடின.

அந்தச் சூழ்நிலையில் வரப்பின் மீது மாட்டை ஓட்டிக் கொண்டு சென்று கொண்டிருந்த சொக்கனுக்கும் அவனையறியாமல் உற்சாகம் எழுந்ததுவோ, என்னவோ தெரியவில்லை. அல்லது தனிமையின் காரணமாக ஏற்படும் பீதியைப் போக்கத்தானோ என்னவோ தெரியவில்லை:

ஆத்றோரம் கோடிக்காலாம்,
அரும்பரும்பா வெத்திலையாம்
போட்டா செவக்குதில்லே
பொன்மயிலே உன்மயக்கம்

என்று பாடிக்கொண்டே போனான்.

இந்தக்குரல் அந்த ஊரின் எல்லையிலிருந்த கோவிலின் கோபுர வாசலில் படுத்து உறங்கிக் கொண்டிருந்த அந்த இளைஞனுடைய செவியில் விழுந்தது. தூங்கிக் கொண்டிருந்த அவன் எழுந்து உட்கார்ந்து கொண்டான். அவன் முகத்தில் ஒரு புன்னகை அரும்பியது.

"யார் ஐயா, அது? எழுந்திரு! எழுந்திரு!" என்று ஒரு ஆள் அவனை எழுப்பினான்.

"ஏன், ஐயா! இன்னும் கொஞ்ச நேரம் இங்கே உட்காரக் கூடாதா? பொழுது விடியும் வரையிலுமாவது இங்கே இருந்து விட்டுப் போகக் கூடாதா?"

"நீர் யார் ஐயா? இந்த ஊருக்குப் புதிசு போலிருக்கிறது. பொழுது விடியறதுக்கு முன் இந்தக் கோவிலைப் பெருக்கி, தண்ணீர் தெளித்து, சுத்தம் செய்து கோலம் போட்டு வைக்க வேண்டும் தெரியுமா?"

"ஓகோ! அப்படியானால் நான் எழுந்து போய் விடுகிறேன். ஆனால் ஒரு கேள்வி! அதற்குப் பதில் சொல்வீர்களா?"

"என்ன?"

"உங்களுக்குத் தெரிந்த கவலையற்ற மனுஷரை, சந்தோஷத்தில் மூழ்கியிருக்கும் ஒரு மனிதரைக் காட்ட முடியுமா?"

"பேஷாக! இதோ இந்தக் கோவில் தர்ம கர்த்தா திருவாளர் சிவசங்கரம் பிள்ளை அவர்களையே எடுத்துக் கொள்ளுங்களேன். எல்லாம் கோவில் சொத்திலேயே நடந்து விடுகிறது! அவருக்கு என்ன கவலை? சதா ஆனந்த சாகரத்தில்தான் திளைக்கிறார்!"

"அப்படியா?" என்றான் அந்த இளைஞன்.

இந்த இடத்தில் அந்த இளைஞன் யார், என்னவென்று சொல்லிவிட வேண்டியது நம்முடைய கடமையாகும்.

அவனும் உலகிலுள்ள எல்லா இளைஞர்களைப்போல் ஒரு சாதாரண யுவன்தான். அவன் பெயர் ஆனந்தன். அவனுக்குத் தற்சமயம் ஒரு வெறி ஏற்பட்டிருந்தது. அதாவது, உலகத்திலே மிகவும் சந்தோஷமாகவும் ஆனந்தமாகவும் இருக்கும் மனிதரைப் பார்க்க வேண்டும் என்ற ஆசைதான். யாரைக் கண்டாலும், "உங்களுக்குத் தெரிந்த 'சந்தோஷ மனித'ரைக் கூறுங்கள்" என்று கேட்பான். சொந்த ஊரில் தான் பார்க்க விரும்பிய மனிதரைக் காணக் கிடைக்காததால் வெளியூருக்கு வந்திருந்தான். வந்த ஊரில் இருட்டியவுடன் ஊர்க் கோவிலிலேயே படுத்துத் தூங்கி விட்டான்.

* * *

"ஐயா, கோவில் தர்மகர்த்தா சிவசங்கரம் பிள்ளை வீடு எது?" என்று தெருவில் போய்க் கொண்டிருந்த ஒருவரைக்கேட்டான்.

"மூன்றும் தெருவிலே பெரிய மாடி வீடு தெரிகிறதே—பச்சை பெயின்ட் பூசிய கதவு இருக்கும். அந்த வீடுதான்!"

ஆனந்தன், சிவசங்கரம் பிள்ளை வீட்டை நாடிச் சென்றான். கதவை இடித்தான்.

"யார் ஐயா அது? இந்த விடியற்காலை வேளை வந்து தொந்தரவு செய்கிறது?" என்று கூறிக்கொண்டே ஒருவர் எழுந்திருந்து கதவைத் திறந்தார்.

"சிவசங்கரம் பிள்ளை என்கிறது யார்?" என்றான் அந்த இளைஞன்.


"ஏன், நான்தான்!"

"ஓ! நீங்கள்தானா? நீங்கள் கவலையற்ற மனிதர், சதா சந்தோஷத்தில் மூழ்கியிருப்பவர் என்று கேள்விப் பட்டேன். அப்படிப் பட்ட புண்யாத்மாவைப் பார்த்து விட்டுப் போகலாம் என்று வந்தேன்."

"என்ன? என்ன? எந்த அயோக்கியன் எனக்குக் கவலையில்லை என்று கூறினான்? எந்தப் படுபாதகன் நான் எப்போதும் சந்தோஷத்திலேயே மூழ்கியிருப்பதாகக் கூறினான்? என் சொந்த வேலைகள் போதாது என்று, கோவில் சொத்துக்களை வேறு தலை மேல் சுமந்து கொண்டு நான் படும் பாடு அந்த ஈசுவரனுக்குத்தான் தெரியும். கோவில் சொத்தில் நான் காலணா எடுத்துக் கொள்வதில்லை என்றாலும் 'ஏன் ஸார், தேன் எடுப்பவன் புறங்கையை நக்காமல் விடுவானா?' என்று பேசுகிறார்கள். ஒரு காரணமுமின்றி இந்த லோகாபவாதத்துக்கெல்லாம் நான் உடன்பட்டு, என் மனசு படும்பாடு கொஞ்சமல்ல. இந்த லக்ஷணத்தில் எனக்குக் 'கவலையற்றவன்' என்ற பெயர் வேறே! நன்றாயிருக்கிறது! நன்றாயிருக்கிறது!!" என்றார் அவர்.

ஆனந்தன் மனசு சோர்ந்து போய்விட்டது. அவ்விடத்தை விட்டு வெளியே வந்தான்.





கிளிரிஸீடியா என்னும் பசுந்தாள் உரச் செடிகள் நன்கு தழை கழித்துவிட்ட பிறகு துளிர்த்துத் தழைத்திருக்கும் காட்சி. (கையினால் சுட்டிக் காட்டிக் கொண்டிருப்பவர் :—"விவசாயத்தில் சில விந்தைகள்" என்ற கட்டுரையில் வரும் ஸ்ரீ எஸ். வி. ராகவன், "Victory Farm", கோத்தம் பாக்கம், பூனமல்லி போஸ்டு.)

அவன் அடிமேல் அடி எடுத்து வைத்து நடந்தான். அவன் மனம் தீவிர யோசனையில் ஈடுபடத் தொடங்கியது.

அவன் சிந்தனையைத் தெருவில் சென்று கொண்டிருந்த இரண்டு பேருடைய பேச்சுக் குரல் கலைத்தது.

"அவருக்கு என்னப்பா குறைவு? மில், பணம் காய்ச்சி மரமாகப்பணத்தைக் கொட்டுகிறது. வருஷத்துக்கு ஒரு கார் வாங்குகிருர்!" என்று ஒருவர் கூறி முடிக்கவில்லை.

அதற்குள் இன்னொருவர், "கார் மட்டுமா? வீடு மேலே வீடு வாங்குகிருர்; மாடி மேலே மாடி கட்டுகிருர். தஞ்சாவூர் ஜில்லாவிலே பூமி பாதிக்கு மேலே இவருடையதுதானும். கொடுத்து வைத்த மனுஷர். கால்மேல் கால் போட்டுக் கொண்டு மனுஷன் ஆனந்தமாக இருக்கிருர். ஒரு குறையுண்டா? ஒரு கவலையுண்டா?" என்ருர்.

இதைக் கேட்டதும் ஆனந்தன் அடைந்த சந்தோஷம் சொல்லி முடியாது. தான் இத்தனை நாளும் தேடிக் கொண்டிருந்த சந்தோஷ மனிதர் கிடைத்து விட்டதாகவே எண்ணிச் சந்தோஷப் பட்டான். அவர் யார், இன்ஞர், எங்கே யிருக்கிருர் என்று தெரிந்துகொண்டு அவரை நேரவே போய்ப் பார்த்து விட்டால் தன் லட்சியமே நிறைவேறி விட்டதாகும் அல்லவா? பிறவிப் பயனை அடைந்து விட்டதாகும் அல்லவா?

இவ்வாறு நினைத்து, தெருவோடு பேசிக் கொண்டு சென்ற அவ்விருவர் முன்னிலையில் 'தோபுகமர்' என்று போய் நின்முன்.

"ஐயா! தாங்கள் இத்தனை நேரம் பேசிக் கொண்டு சென்றீர்களே, அந்த அதிர்ஷ்ட மனிதர் யார்? எங்கே யிருக்கிருர்? தயவு செய்து எனக்குச் சொல்லுங்களேன்" என்று கேட்டான் ஆனந்தன்.

"ஏன்?" என்று அந்த இருவரும் சேர்ந்தாற் போலச் சந்தேகத்துடன் கேட்டார்கள்.

"ஒன்றுமில்லை, உலகில் சந்தோஷ மனிதரைத் தேடிக் கண்டு பிடித்தே தீருவது என்ற சபதம் செய்திருக்கிறேன். ஒருவேளை நான் தேடும் சந்தோஷ மனிதர் தாங்கள் பேசிக் கொண்டிருந்த மனிதராக இருக்கலாமோ என்ற சந்தேகம் ஏற்பட்டது. அதனுல்தான் கேட்கிறேன். அவர் பெயரும் விலாசமும் தயவு செய்து சொல்லுங்கள்" என்று கேட்டான் ஆனந்தன்.

ஆனந்தனின் பேச்சைக் கேட்ட அந்த மனிதர்கள் 'இவன் யாரோ பித்துக்குளி போலிருக்கிறது! இவன், நாம் பேசிக் கொண்டிருந்த மனிதரிடம் போனுல் ரொம்பத் தமாஷாக இருக்கும்' என்று அந்தக் காட்சியைக் கற்பனையில் பார்த்துச் சிரித்துக் கொண்டே, "அவரா? அவர்தான் இந்த ஊர் பாதாள பயங்கரி மில்லின் புரோப்ரைட்டர் ஸ்ரீமான் கோவிந்தசாமிப் பிள்ளை. இன்றைய தேதியிலே விரல் விட்டு எண்ணக் கூடிய பெரும் பணக்காரர்களிலே அவர் ஒருத்தர். அவர் வீடு அரண்மனை மாதிரி யிருக்கும் போய்ப் பாரும்! அவரைப் பார்த்தாலே உம்மைப் பிடித்திருக்கும் பஞ்சம் பஞ்சாய்ப் பறந்து போகும்......" என்ருர்கள்.

“சரி அவரை நிச்சயமாய்ப் பார்க்கிறேன்” என்று சொல்லி விட்டு, அவன் விடைபெற்றுக் கொண்டான்.

*** ***

மாறு மதுரையிலே—ஒரு
மருக் கொழுந்துக் கூடைக்காரி

என்ற தெம்மாங்குப் பாட்டு, காலையில் அவனை எழுப்பிய குரலிலேயே வந்தது.

சந்தோஷ மனிதனைத் தேடிச் சென்ற ஆனந்தன் இந்தப் பாட்டைக் கேட்டு அப்படியே பிரமை பிடித்து நின்றான். ‘ஆகா! எவ்வளவு இனிமையாக இருக்கிறது’ என்று தன்னை மறந்து வியந்தான்.

அது பட்டப் பகல் நேரம். சூரியன் உச்சி வானத்திலிருந்தான். சொக்கன் வயலில் களை எடுத்துக் கொண்டிருந்தான். தூரத்திலே ராக்கம்மா, கஞ்சிக் கலயத்தைத் தலைமேல் வைத்துக் கொண்டு, வருவதைப் பார்த்தான். அவளைக் கேலி செய்யும் முறையில் தான் ‘மாறு மதுரையிலே’ என்ற தெம்மாங்குப் பாட்டைப் பாட ஆரம்பித்தான்.

இந்தக் காதலர்களின் உல்லாசச் சிரிப்பையும் கேளிக்கையும் கண்டு ஆனந்தன் சற்று நேரம் அநுபவித்துக் கொண்டிருந்தான். பின்னர், இந்தக் காதலர்களின் அந்தரங்கப் பேச்சைக் கேட்பது உசிதமல்ல என்று நினைத்து மேலே நடந்து சென்றான்.

*** ***

“யாரோ ஒரு இளைஞர் தங்களைப் பார்க்க வேண்டும் என்கிறார்” என்றான் பாதாள பயங்கரி மில்லின் முதலாளியான கோவிந்தசாமிப் பிள்ளையிடம் அவருடைய காரியதரிசி.

“என்ன விஷயமாம்? எதற்காக என்னைப் பார்க்க வேண்டும் என்கிறான்?”

“காரணம் சொல்ல மறுக்கிறான். உங்களை நேரில் பார்க்க வேண்டும்; இரண்டு நிமிஷம் அவகாசம் கொடுத்தால் போதும் அதற்கு மேல் தனக்குக் காரியமில்லை என்கிறான்.”

“அப்படியா? அவனைப் பார்ப்பதற்கு வேலை கேட்க வந்திருப்பவன் போல் தோன்றுகிறதா? தொழிலாளர் கூட்டத் தலைவன் போல் தோன்றுகிறதா? பாக்டரி இன்ஸ்பெக்டர் போல் தோன்றுகிறதா...?” என்று கேட்டார் மில் முதலாளி.

“அப்படி யெல்லாம் இல்லை, ஸார்! எவனோ ஒரு பித்துக்குளி. உங்களை ஒரு முறை கண்ணால் பார்த்து விட்டாலே தனக்கு ஜன்ம சாபல்யமான பலன் கிடைத்துவிட்டதாகக் கருதுவானாம். வெறும் பைத்தியம். அவனைப் பார்ப்பதனால் நமக்கோ, நமது மில்லுக்கோ எந்தவிதமான ஆபத்தும் நேராது” என்று தைரியமளித்தான் காரியதரிசி.

பிறகுதான் ஆனந்தனுக்குப் பேட்டி யளிக்கச் சம்மதித்தார்.

“யாரப்பா நீ? உனக்கு என்ன வேண்டும்?” என்று கேட்டார் மில் முதலாளி — ஆனந்தன் உள்ளே நுழைந்ததும்.

“தாங்கள் மிக மிகச் சந்தோஷ வாழ்க்கை நடத்துவதாகக் கேள்விப் பட்டேன். அத்தகைய சந்தோஷ மனிதரைப் பார்த்து விட்டுப் போகலாம் என்று வந்தேன்” என்றான்.

இதைக் கேட்டவுடன் மில் முதலாளியின் கண்களில் கனல் பறந்தது. “என்ன சொன்னீர்? நான் சந்தோஷமாக இருக்கிறேனா? உங்களிடம் யார் அவ்விதம் கயிறு கட்டிவிட்டது? இராப் பகலாகத் தூக்கமில்லாமல் நான் படும்கவலை எனக்கல்லவா தெரியும்? வருமான வரி காரியாலயத்தார் ‘எட்டு லக்ஷரூபாய் அமித லாபம் கிடைத்திருக்கிறது. அதற்கு வரி விதிக்கப் போகிறோம்’ என்று பயமுறுத்துகின்றனர். அதற்கு எந்தப் பொய்யைச் சொல்வது, எத்தனை பொய்களைச் சொல்வது என்று தெரியாமல் தவிக்கிறேன். மில்லிலேயானால் தொழிலாளர்கள், ‘ஐந்து மாத

விவசாயக் கட்டுரைக்கு நூறு ரூபாய் பரிசு!

- நன்செய், புன்செய், காய்கறி, பழத்தோட்டம் ஆகிய பல்வேறு விவசாயத் துறைகளில் காரியாம்சத்தில் நடந்திருக்கும் உண்மையான சாதனைகளைப் பற்றி எழுதப்படும் மிகச் சிறந்த கட்டுரைக்கு ரூ. 100 பரிசும், இரண்டாவது சிறந்த கட்டுரைக்கு ரூ. 50 பரிசும் வழங்கப்படும்.
- அத்தகைய கட்டுரைகள் மற்ற விவசாயிகளுக்கு உபயோகப்படக்கூடிய யோசனைகளுடனும் புள்ளி விவரங்களுடனும் இருக்க வேண்டும். அதே சமயத்தில் வாசகர்கள் சுவையுடன் படிக்குமாறும் அமைந்திருக்க வேண்டும்.
- சில விவசாயிகள் தங்கள் நிலங்களில் அதிகம் நெல்லும் மற்ற தானியங்களும் விளைவித்துச் சர்க்காரிடம் பரிசு பெற்றிருக்கிறார்கள். பரிசு பெற்றவர்கள் தங்கள் சொந்த அனுபவங்களை வைத்துக் கொண்டு எழுதலாம். அல்லது பக்கத்தில் உள்ளவர்கள் அந்தப் பரிசு பெற்ற விவசாயிகளைக் கண்டு அவர்களுடைய சாதனைகளைப்பற்றிய விவரங்களைத் தெரிந்து கொண்டும் எழுதலாம்.
- கட்டுரைகள் நவம்பர் மாதம் முப்பதாம் தேதிக்குள் “கல்கி” காரியாலயத்துக்கு வந்து சேர வேண்டும். தயவு செய்து உறையின் மேலே ‘விவசாய சாதனைக் கட்டுரை’ என்று குறிப்பிடவும்.



சிறுவர்களின் பொருட் காட்சி

சென்னை, மயிலாப்பூரிலுள்ள பி. எஸ். செகண்டரி ஸ்கூல் மாணவர்கள் (முதல் வகுப்பிலிருந்து மூன்றாவது பாரம் வரை படிக்கும் சிறுவர்கள்) சென்ற மாதம் 31-ம் தேதி ஒரு பொருட் காட்சியை நடத்தினார்கள். ஸ்ரீமான் கே. பாலசுப்பிரமண்ய அய்யர் எம். எல். ஸி. திறந்து வைத்தார்.

பொருட் காட்சியைப் பல பகுதிகளாகப் பிரித்திருந்தனர். நெசவுப் பகுதியில் பல தறிகளில் மாணவர்களே ஆடைகளை வெகு உற்சாகமாக நெய்தனர். போட்டோவில் தெரியும் கயிற்றில் தொங்கும் துணிகள் எல்லாம் அந்தப் பள்ளிக்கூடத்தில் நெய்யப்பட்ட துணிகள்.

சாரணப் பயிற்சிபெற்ற மாணவர்கள் முதலுதவி எப்படி எப்படிக் கொடுக்கிறார்கள் என்பதைச் சித்திரங்கள் மூலமாகவும் செய்து காண்பித்தும் மாணவர்கள் விளக்கினார்கள்.

மாணவர்கள் தங்கள் கையாலேயே செய்த பொம்மைகள், அட்டை வீடுகள், வர்ணச் சித்திரங்கள் யாவும் கண்ணையும் கருத்தையும் கவருவனவாக இருந்தன.

இப்பொருட் காட்சியிலேயே மிகவும் சிறந்து விளங்கியது சுதந்திர மலைதான். பாரத தேசம் சுதந்திரம் பெற்ற வரலாற்றை மலையாக உருவகப்படுத்தி யிருந்தனர். 1857-ம் ஆண்டு சிப்பாய்க் கலகம் என்ற முதல் படியில் அடி எடுத்துவைத்து 26-1-1950 ஆண்டு மலையுச்சியை அடைந்து சுதந்திரக் கொடியை காட்டினோம். ஒவ்வொரு படிக்கும் ஒரு முக்கியமான சரித்திரப் பிரசித்தி பெற்ற வருஷத்தைக் குறிப்பிட்டு அதில் தெளிவாக விஷயமும் எழுதியிருந்தனர். கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாக விளங்கியது இச்சிறுவர்கள் பொருட் காட்சி.

போனஸ் கொடுக்கிறாயா அல்லது வேலை நிறுத்தம் செய்யட்டுமா?' என்று பயமுறுத்துகிறார்கள். அவர்களை எப்படித் தாஜா பண்ணுவது என்று தெரியாமல் தவிக்கிறேன். பின்னையாண்டானானால், நேற்று காரை எடுத்துக் கொண்டு போய் வருமானமில்லாத டாக்டர் மீது காரை ஏற்றி 'ஆக்ஸிடெண்ட்' பண்ணி விட்டு வந்துவிட்டான். 'இந்தக் கார் ஏறியதனால் எனது வலது கை வேலைக்கு உதவாமல் போய்விட்டது. ஆகவே பத்து லக்ஷ ரூபாய் நஷ்ட ஈடு கொடு என்று கோர்ட்டில் தாவா போடப் போகிறேன்' என்று அந்த வருமானமில்லா டாக்டர் பயமுறுத்துகிறானும். அதை எப்படிச் சமாளிப்பது என்று கவலைப் பட்டுக் கொண்டிருக்கிறேன். இப்படி இன்னும் என் கவலைகள் எத்தனையோ இருக்கின்றன. உண்மை இப்படியிருக்க, எந்த அயோக்கியன் அப்படிச் சொன்னான் — நான் சந்தோஷமாக இருக்கிறேன் என்று. எந்த மடையன் அவ்வாறு கூறினான்?......" என்று ஒரே அடியாய் இரைந்தார்.

அதைக் கேட்ட அவன், அப்படியே திக்பிரமை பிடித்து நின்றான். 'இங்கேயும் நமக்கு ஏமாற்றந்தானா' என்ற எண்ணம் தான் அவன் மனத்தில் மேலோங்கி நின்றது.

"தயவு செய்து மன்னித்து விடுங்கள். நான் வருகிறேன்" என்று கூறிக்கொண்டு அவ்விடத்தை விட்டுச் சென்றான் ஆனந்தன்.

மாலை நேரம் மேற்கே செவ்வானம் படர்ந்திருந்தது. ஆனந்தன் யோசித்துக் கொண்டே அடிமேல் அடி வைத்துச் சென்றான்.

ஊரில் உள்ளவர்கள் யார் யாரைப் பற்றி, 'இவர்கள் சந்தோஷமாக வாழ்கிறார்கள்; அவர்கள் ஆனந்தத்தில் திளைக்கிறார்கள்' என்று கூறுகிறார்களோ, அவர்களையெல்லாம் நெருங்கிப் போய்ப் பார்த்ததில் வெளியில் சொல்லிக் கொள்ள முடியாத துன்பத்தில் ஆழ்ந்திருப்பவர்களாகக் காண்கிறார்கள். ஆகவே இனி ஊரார் பேச்சை நம்புவதில் பயனில்லை...... என்ற முடிவுக்கு வந்தான் ஆனந்தன். அந்தச் சமயத்தில்,

மாலை நேரம் வந்திடுச்சு
மஞ்சள் வெயில் படர்ந்திடுச்சு
ஆலை மேலே தூங்கிவரும்
ஆயன் பெருமானைக் கும்பிடுவோம்!

என்ற குரல் வந்தது. அதே குரல்தான். காலையில் கேட்ட குரல்; மத்தியானம் கேட்ட குரல்.

ஆனந்தனுக்கானால் ஒரே வியப்பாக இருந்தது. குரல் வரும் திசையை நோக்கிச் சென்றான். இருள் கவியும் நேரம். தடங் கூடச் சரியாகத் தெரியவில்லை. தட்டுத் தடுமாறிக் கொண்டு சென்றான். அவன் சென்ற வழியெல்லாம், பின் வருமாறு யோசித்துக் கொண்டே சென்றான்:

'இவன் வயலில் வேலை செய்யும் உழவன். இவன் குரல் சூரியோதயம் ஆவதற்கு முன்பே கேட்டது. மத்தியானம் கேட்டது. இப்பொழுதும் கேட்கிறது. இதிலிருந்தே இவன் காலையிலிருந்து மாலை வரைக்கும் ஒரே ஆனந்தத்தில் திளைக்கிறான் என்பது தெரிகிறது. இவனல்லவோ உண்மையான சந்தோஷ மனிதன்! இவனைக் காண்பதை விட்டு, எங்கெல்லாமோ, யார் யாரையெல்லாமோ பார்த்துக் கொண்டு வந்தேனே!'

இப்படி இவன் எண்ணி முடிவதற்கும் வயலிலிருந்த சொக்கனை நெருங்குவதற்கும் சரியாக இருந்தது.

அப்போதுதான் சொக்கன் ஏர்க்கலப்பை, கிணற்றுக் கயிறு, சால் எல்லாவற்றையும் தோள் மேல் சுமந்து கொண்டு தன் வீட்டை நோக்கிப் புறப்பட்டுக் கொண்டிருந்தான்.

"இந்தாப்பா, உன்னைத்தானே! சற்று நில்" என்றான் ஆனந்தன்.

சொக்கன் திரும்பிப் பார்த்தான். "நீங்க யாருங்க? என்ன வேணுங்க?" என்று கேட்டான். அவன் குரலில் தயை, தாட்சண்யம் என்ற பாவனை மாதிரிக்குக்கூட இருக்கவில்லை.

"என்ன ஐயா நீ! காலையிலே யிருந்து விளக்கு வைக்கிற நேரம் வரைக்கும் ஒரே குஷியும் கும்மாளமுமாக இருக்கிறாயே! ஒரே சந்தோஷத்தில்தான் மூழ்கி யிருக்கிறாப் போலக் காணுதே..." என்றான் ஆனந்தன்.

"என்ன? குஷியா? சந்தோஷமா?" என்று சொக்கன் ஒன்றும் புரியாமல் கேட்டான்.

சொக்கனுடைய இந்த வார்த்தைகளைக் கேட்டதும், ஆனந்தனுக்குப் பெரும் ஏமாற்றமாகப் போய் விட்டது. கடைசியில் இவனும் தான் கவலையிலும் கஷ்டத்திலும் ஆழ்ந்து கிடப்பதாகச் சொல்லப் போகிறான் என்றே தீர்மானித்து விட்டான்.

"அப்படியானால் நீயும் கவலைப் பட்டுக் கொண்டுதான் இருக்கிறாயா?" என்று மிகவும் சோர்ந்த குரலில் கேட்டான் ஆனந்தன்.

சொக்கன் முகத்தில் வியப்புக் குறி படர்ந்தது. "என்ன சொன்னீர்கள்? கவலையா? கஷ்டமா? அப்படி யென்றால்...?" என்று கேட்டான்.

இந்த வார்த்தைகள் ஆனந்தனை இன்னும் பெரும் அதிசயத்தில் ஆழ்த்தியது.

"என்ன! 'கவலை' இன்ன தென்றே உனக்குத் தெரியாதா? உனக்கு ஒருவித கவலையும் கிடையாதா? நீ கவலைப்பட்டதே கிடையாதா?" என்று வியப்புத் தொனிக்கக் கேட்டான் ஆனந்தன்.


"ஆமாம், நான் கவலையும் பட்டது கிடையாது; சந்தோஷமும் பட்டது கிடையாது. இதற்கெல்லாம் முதலில் எனக்கு நேரம் இருந்தால்தானே?" என்றான் சொக்கன்.

"என்ன, இதற்கெல்லாம் நேரம் கிடையாதா உனக்கு?" என்றான் ஆனந்தன்.

"ஆமாம், எனக்கு நேரமே கிடையாது. ஓய்வு உள்ளவர்களுக்குத்தான் கவலையும் சந்தோஷமும். நான்தான் சூரியோதயத்துக்கு முன்னாலிருந்து சூரியாஸ்தமனமாகிறவரை ஒரு வேலை இல்லா விட்டால் இன்னொரு வேலையில் ஈடுபட்டிருக்கிறேனே! என் மனசைச் சதா வேலையிலேயே கருத்துக் கொள்ளச் செய்து விடுகிறேன். உடல் அசதி ஏற்படும்போது எனக்குத் தெரிந்த தெம்மாங்குப் பாட்டுப் பாடிக் கொண்டே வேலை செய்து விடுகிறேன். அப்போது எனக்குக் களைப்புத் தோன்றுவதில்லை. இப்படி நான் சந்தோஷமும் கவலையும் என் உள்ளத்தில் புக நேரமே அளிப்பதில்லை" என்று கூறிக் கொண்டே தன் வீட்டை நோக்கிப் புறப்பட்டான்.

ஆனந்தன் அதைக் கேட்டு அப்படியே பிரமித்து நின்று விட்டான். வாழ்க்கையின் ரகசியத்தை, வாழ்க்கை வாழ வேண்டிய முறையைப் பற்றி எவ்வளவு சுலபமாக, நாள் எல்லாம் உழைக்கும் இந்த உழவன் சொல்லி விட்டுப் போய் விட்டான் என்று வியந்தான்.

அவனுடைய வார்த்தைகள் ஆனந்தனின் உள்ளத்தை ஆட்கொண்டன. அவன் கூறிய உண்மையை நினைக்க நினைக்க ஆனந்தன் உள்ளத்தில் பேர் உவகைப் பெருக்கெடுத்தது. அதிகம் வளர்த்துவானேன்? ஆனந்தன் தேடி வந்த சந்தோஷ மனிதன் தானாக இருப்பதை உணராமலே தன் ஊரை நோக்கிச் சென்று கொண்டிருந்தான். ஆம், உண்மையை உணர்வதுதானே ஆனந்தமும்!



முயலின் பந்தயம்

விஜயம்



காட்டில் வர வர அந்த யானையின் அக்கிரமம் தாங்க முடியாமல் போய்விட்டது. மரக் கிளைகளைச் சடசடவென்று முறித்துக் காட்டுப் பாதைகளில் வீசி வழி யெல்லாம் நடக்க முடியாமல் செய்தது. குளத்தில் இறங்கித் துதிக்கையில் தண்ணீரை நிறைய மொண்டு வந்து முயல் குட்டி, மான் குட்டி இவைகளெல்லாம் விளையாடும் இடமாகப் பார்த்து, 'புஸ்' என்று தண்ணீரை அவைகள் மீது வீசும். நல்ல மழையில் அகப்பட்டுக் கொண்ட மாதிரி அவைகள் சொட்டச் சொட்ட நனைந்து போய்விடும். ஜலத்தில் அவைகள் நடுங்குவதைப் பார்த்து யானை கடகடவென்று சிரிக்கும். திடீரென்று ஒரு முயல் குட்டியைத் தன் தும்பிக்கையினால் தூக்கி, சர்க்கஸ் விளையாட்டு மாதிரி ஆகாயத்தில் 'விர்விர்' என்று ஆட்டி, மரத்தின் உச்சாணிக் கிளையில் கொண்டு போய் வைத்து விட்டு 'ஓ' வென்று பலமாகச் சிரிக்கும்.

இந்த யானை ஏதோ ஒரு சர்க்கஸ் கம்பெனியில் இருந்து தப்பி இந்தக் காட்டுக்கு வந்து சேர்ந்துவிட்டது. சர்க்கஸில் பல வித்தைகள் செய்து பழகிப் போன யானைக்குக் காட்டுக்கு வந்ததில் பொழுதே போகவில்லை. ஆகையினால் இந்த மாதிரி சேஷ்டைகள் ஓயாமல் ஏதாவது செய்து கொண்டே இருந்தது.

இப்படி யானை செய்த அக்கிரமங்களைச் சொல்லப் போனால் அவைகளுக்கு எல்லையே இல்லை. அதுவும் யானைக்குச் சின்ன மிருகங்களிடம் சேஷ்டை செய்து விளையாடுவதில் தான் பிரியம் அதிகமாயிருந்தது.

எப்படியாவது இந்தப் பொல்லாத யானைக்குச் சரியானபடி புத்தி கற்பிக்க வேண்டும் என்று ஒரு முயல் குட்டி தீர்மானித்தது. தீர்மானித்து விட்டால் போதுமா? யானை எவ்வளவு பெரிய மிருகம்? அது எவ்வளவு பலம் உடையது? முயல் குட்டி எவ்வளவு சின்னது? அதற்கு ஒரு யோசனை தோன்றியது. அந்த யோசனையுடன் இன்னும் சில மிருகங்களையும் அழைத்துக் கொண்டு யானை இருக்கும் இடத்துக்குச் சென்றது முயல் குட்டி.

"யானை அண்ணா, யானை 'அண்ணா!'" என்று முயல் குட்டி கூப்பிட்டது.

"யார் அது?" என்று யானை அலட்சியமாகக் கேட்டது.

"நான்தான் முயல். உங்களோடு ஒரு பந்தயம் போடலாம் என்று உத்தேசித்து உங்களிடம் வந்திருக்கிறேன்!" என்று முயல் குட்டி தைரியமாகக் கூறியது.

"ஹஹ், ஹஹ், ஹா!" என்று அந்தக் காடே அதிரும்படியாகச் சிரித்தது யானை.

"என்னோடு பந்தயம் போடும் அளவுக்கு உனக்குத் தைரியம் வந்து விட்டதா? என்னிடம் எத்தனை தடவை உதை பட்டிருக்கிறாய்? இன்னுமா உனக்கு என்னிடம் கொஞ்சங்கூடப் பயம் உண்டாகவில்லையா? சரி, உன் பந்தயத்தைச் சொல்லு, பார்க்கலாம். இந்தத் தடவையோடு உன் கொட்டம் அடங்கிவிடும். சரியானபடி புத்தி புகட்டி விடுகிறேன்!" என்று யானை திமிருடன் பதில் சொல்லிற்று.

"சரி, பந்தயத்தைச் சொல்லுகிறேன், கேளுங்கள். இங்கிருந்து பத்து மைல் தூரத்

கிலுள்ள நகரத்துக்கு நாளைக் காலை இருட்டோடு புறப்பட்டு நாளைப் பகல் பன்னிரண்டு மணிக்குள் போய்ச் சேர்ந்து விட வேண்டும். அங்கே ஒரு அரச மரமும் பிள்ளையார் கோயிலும் இருக்கிறதல்லவா? அதுதான் நாம் போய்ச் சேரவேண்டிய இடம். யார் முதலில் போய்ச் சேருகிறார்களோ அவர்கள் பந்தயத்தில் ஜயித்தவர்கள். தோற்றுப் போனவர் மறுபடியும் இந்தக் காட்டு எல்லைக்கே எந்தக் காரணத்தை முன்னிட்டும் வரக் கூடாது. இதுதான் பந்தய நிபந்தனை. என்ன சொல்லுகிறீர்கள்? நம்முடைய மற்ற மிருக நண்பர்கள் சாட்சி இருப்பார்கள். இப்பொழுதே ஓநாயும் நரியும் புறப்பட்டு நகரத்துக்குப் போய் அந்த அரசமரத்தின் அடிக்குப் போய் நாம் போய்ச் சேருவதற்கு முன்பு காத்திருப்பார்கள்!'' என்று முயல் கம்பீரமாகச் சொல்லியது.

யானை முயலைப் பார்த்து, மறுபடியும் 'கட கட' வென்று சிரித்தது.

"முயலே, உனக்குக் கேடு காலம் தான் வந்து விட்டது. அநியாயமாக இந்தக் காட்டை விட்டு ஓடப் போகிறாய். நீ எங்கே? நான் எங்கே? நான் மனசு வைத்து விட்டேனானால் எண்பது மைல் என்ன, அதற்கு மேலே இருந்தால் கூட லட்சியம் செய்யாமல் ஒரு விநாடியில் போவேன். உன்னால் என்னோடு போட்டி போட முடியுமா? தத்துப் பித்து என்று என்னிடம் உளறியதற்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டு வந்த வழியைப் பார்த்துக் கொண்டு போ!'' என்று யானை மிகவும் அலட்சியமாகச் சொல்லியது.

"இந்த அகம்பாவம்தான் உன்னை விட்டுப் போகமாட்டேன் என்கிறது. உடம்பு பெரியதாக இருந்து விட்டால் போதுமா? திறமையிருந்தால் அதைச் செய்து காட்ட வேண்டும். பந்தயத்தை ஒப்புக் கொள்ள முடியவில்லை என்றால், என்னால் முடியாது என்று சொல்லி விட்டுப் போயேன்!'' என்று கூறியது முயல்.

உடனே யானைக்குக் கோபம் வந்து விட்டது. "சரி, உன் பந்தயத்தின் நிபந்தனைப்படி நான் நடந்துகொள்ளத் தயார். நாளை விடியற்காலை இதே இடத்துக்கு வந்து விடு. உன் கொட்டத்தை அடக்குகிறேன்!'' என்றது.

முயல் இதைக் கேட்டதும் சந்தோஷத்துடன் தன் இருப்பிடத்துக்கு வந்து சேர்ந்தது. முயல் குட்டியின் நண்பர்களாகிய மற்ற மிருகங்களெல்லாம் முயல் குட்டி பந்தயத்தில் ஜயிக்கவேண்டுமே என்று கவலைப்பட்டன.

ஓநாய், "நானும் நரியும் இப்பொழுதே புறப்பட்டு நகரத்துக்குப் போகிறோம். நீ எப்படி அந்த முரட்டு யானையைப் பந்தயத்தில் ஜயிக்கப் போகிறாய் என்றுதான் எங்களுக்கு யோசனையாயிருக்கிறது. உன் பத்தடியை யானை ஒரே அடியில் வைத்து விடுமே! அதுவும் ஆத்திரத்தில் நடக்க ஆரம்பித்தால் யானையோடு போட்டி போட யாராலும் முடியாது!'' என்று கூறியது.

முயல்குட்டி, "நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாதீர்கள். இந்த யானையின் திமிரை அடக்கி, இந்தக் காட்டை விட்டுத் துரத்தி விட்டுத்தான் மறுகாரியம்!'' என்று உற்சாகத்தோடு கூறிற்று. ஓநாயும் நரியும் அங்கிருந்து புறப்பட்டு விட்டன.

மறு நாள் பந்தயம் ஆரம்பமாயிற்று. கரடி, முள்ளம் பன்றி, மான் முதலிய மிருகங்களெல்லாம் வந்திருந்தன. யானை ஆத்திரத்தோடு புறப்பட்டது. காடே அதிரும்படியாக நடந்தது. முயல் குட்டி 'விர்'ரென்று காற்றாய்ப் பறந்தது.

பாவம், முயல்குட்டி ரொம்பச் சின்னது தானே! இரண்டு மூன்று மைல்கள் சென்றதுமே அதன் கால்கள் வலிக்க ஆரம்பித்தன. பல்லைக் கடித்துக் கொண்டு ஓடியது.

யானைக்குப் பலம் அதிகமாகையால் காட்டில் நடந்து செல்லுவது அதற்குக் கஷ்டமாகவே இல்லை. 'பட பட', 'சட சட' என்று போகிற வழி நெடுக மரக்கிளைகளை முறித்துக் கொண்டு மிகவும் உற்சாகத் தோடு சென்றது. எண்பது மைல் தூரத்தில் அல்லவா நகரம் இருக்கிறது! முயல்குட்டி தலை கீழாக நின்றாலும் பகல் பன்னிரண்டு மணிக்குள் அங்கே வந்து சேரவே முடியாது. நன்றாய் அவமானப்படப் போகிறது!'' என்று யானை நினைத்துச் சந்தோஷப்பட்டது.

பொழுது விடிந்து வெகு நேரம் ஆகிவிட்டது. பகல் இரண்டு மணிக்கு மேல்தான் யானை நகரத்தின் எல்லைக்குப் போய்ச் சேர்ந்தது. இருந்தாலும் அது அலட்சியமாகத்தான் நடந்து சென்றது. 'பலசாலியான நம்மாலேயே சீக்கிரம் வந்து சேர முடியவில்லை. முயல்குட்டி, பாவம்! அது எங்கே வரப் போகிறது!' என்று நினைத்துக் கொண்டே போய் அரசமரத்தடிப் பிள்ளையார் கோவிலுக்குப் போய்ச் சேர்ந்தது.

"என்ன யானையாரே, இவ்வளவு நேரமா இங்கே வந்து சேருவதற்கு? ரொம்ப சிரமம் பாவம், உங்களுக்கு! பெரிய உடம்பைத் தூக்கிக் கொண்டு நடப்பதென்றால் சும்மாதானா? உங்களுக்காக எத்தனை நேரம் காத்திருப்பது? வாருங்கள், இங்கே வந்து கொஞ்சம் இளைப்பாறுங்கள்! பந்தயத்தில் தோற்று விட்டதற்காக வருத்தப் படாதீர்கள்!'' என்று முயல் குட்டி தன் கீச்சுக் குரலில் சொல்லி விட்டுச் சிரித்தது. நரியும் ஓநாயும் முயல் குட்டியுடன் சேர்ந்து கொண்டு சிரித்தன.



யானைக்கு வந்த கோபத்துக்கு எல்லையே இல்லை. முயல் குட்டியை அப்படியே தூக்கி மேலே எறிந்து விடலாமா என்று தோன்றியது. இந்தச் சமயம், யானை கொஞ்சங்கூட எதிர்பாராத ஒரு காரியம் நிகழ்ந்து விட்டது. 'தபதப' என்று ஏழெட்டுப் பேர் ஓடி வந்தார்கள். அவர்கள் கையில் சங்கிலிகளும் கயிறுகளும் இருந்தன. நடந்து வந்த அலுப்பில் சோர்ந்து போய் நின்று கொண்டிருந்த யானையின் கால்களில் சங்கிலியை மாட்டி அதைச் சிறை செய்து விட்டார்கள். அவர்கள் அந்த ஊருக்குப் புதிதாக வந்திருந்த சர்க்கஸ்காரர்கள். ஏற்கெனவே இந்த யானை அவர்கள் கம்பெனியில்தான் இருந்தது. அவர்கள் தப்பி ஓடிவிட்ட இந்த யானையை வெகு நாட்களாகத் தேடிக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது அதுவாகவே வந்து அவர்களிடம் அகப்பட்டுக் கொண்டது.

யானையின் தொல்லை தீர்ந்து விடவே முயல் குட்டிக்கும் மற்ற மிருகங்களுக்கும் சந்தோஷம் தாங்க முடியவில்லை.

"முயல் குட்டியே, நீ எப்படி யானைக்கு முன்னாலே இங்கே வந்து சேர்ந்தாய்? கூர்மையான புத்திசாலித்தனத்துக்குப் பெயர் போன எனக்கே அது விளங்கவில்லை. எங்களுக்கு இப்பொழுதாவது அந்த ரகசியத்தைச் சொல்லேன்!" என்று நரி கேட்டது.


"ஏன்? இந்தச் சாதாரண விஷயம் உனக்கு விளங்கவில்லையா? நம் காட்டுக்கு நாலைந்து மைல் தூரத்தில் ரயில்வே ஸ்டேஷன் இருக்கிறது அல்லவா? அங்கே பட்டணம் போகும் மெயில் வண்டி காலையில் எத்தனை மணிக்கு வருகிறதென்று முன்னாலேயே பார்த்துத் தெரிந்து வைத்துக் கொண்டிருந்தேன். ஒரே ஓட்டமாக ஓடி அந்த மெயில் வண்டியில் கார்டு பெட்டியில் அவருக்குத் தெரியாமல் ஏறி ஒரு அடக்கமான இடத்தில் படுத்திருந்தேன். காலை ஒன்பது மணிக்குள் மெயில் வண்டி பட்டணம் வந்து விட்டது. ஒருவரும் கவனிக்காத சமயமாகப் பார்த்து வண்டியிலிருந்து இறங்கி இங்கே இந்தக் கோவிலுக்கு வந்து விட்டேன்!" என்று முயல் உற்சாகத்தோடு கூறியது.

இதைக் கேட்ட நரியும் ஓநாயும் அடைந்த ஆச்சரியத்துக்கு அளவே யில்லை. "சபாஷ், சபாஷ்! அருமையான யோசனை!" என்று முயல் குட்டியைப் பாராட்டின.

நல்ல சமயம்!

நவம்பர் மீ. 2உ கல்கி இதழ் அட்டைப்படம் கருத்தைத் தூண்டி இக் கடிதத்தை உருவாக்கியது. இங்கே ஷண்முகானந்த சங்கீத சபையார் ஸ்கந்த ஷஷ்டி கொண்டாடினார்கள்.

சென்னையிலிருந்து "முருகதாஸ்" எனப்பெயர் பூண்ட திருப்புகழ் மணி கோஷ்டி பக்தர் ஒருவரைத் தருவித்து ஆறு நாளும் முருக நாமம் ரீங்காரம் செய்வித்தார்கள்.



புதுடில்லியில் ஸ்கந்தசஷ்டி உற்சவம், 'முருகதாஸ'ரின் திருப்புகழ் பஜனையுடன் சிறப்பாக நடந்தது.

முருகதாஸரின் சாரீரம் ரொம்பவும் இனிமையானது. சபையோரை மெய்மறக்கச் செய்யும் சக்தி வாய்ந்தது. திருப்புகழும் தேவாரமும், சுத்தமான உச்சரிப்புடன் அவர் பாடியது எல்லோர் காதிலும் ரீங்காரம் செய்த வண்ணம் இருக்கிறது.

"முருகா" "முருகா" என்று அவர் சொல்வதைக் கேட்டு இவ்வுலகில் மன முருகாதவர்கள் இருக்கவே முடியாது.

சிந்த. ராணிப்பேட்டை கஞ்சி நிலையக் கட்டுரை நல்ல சமயத்தில் வந்த கட்டுரை. சமயத் தொண்டு செய்ய மடாதிபதிகளுக்கும் ஒரு நல்ல சமயம்.

அன்ன தான சிவன் ஞாபகார்த்த சங்கத்தார் ஆங்காங்கு கஞ்சி உபயம் நடத்துவதாகக் கல்கியில் கண்டிருக்கிறது.

தில்லி ஷண்முகானந்த சபைத் தலைவர் ஸ்ரீ அன்னதானம் அவர்கள் இந்த வட்டாரங்களில் மிகப் பிரபலமான ஆடிட்டர். அவர் பெயரும் அபூர்வமாய் சமயத்துக் கேற்றாற்போல் வாய்த்திருக்கிறது. ஆயிரம் பேருக்கு ஒரு மாதம் உணவளித்தால் ஸ்ரீ அன்னதானம் அப்பெயர் பெற்ற பாக்கியவான் ஆவார். ஷண்முகானந்த சபையோரும் நல்ல சமயத்தில் பஞ்சமாகிய சூரபத்மனை ஒழித்த புண்ணியத்தைக் கட்டிக் கொள்வார்கள்.

புதுடெல்லி
4-11-52

சுப்புடு.

[தாங்களும் ஸ்ரீ சுப்பிரமண்யரின் திருநாமத்தைக் கொண்டவர்தான். சூர சம்ஹார முயற்சியில் சேர்ந்து பங்கு கொள்ளலாமே? — ஆசிரியர்]


இந்திய நாட்டு உபசரிப்பு வழக்கத்தின் முதற் பண்பு
தாம்பூல விசாரணை
தாம்பூலத்தின் தனிச்சிறப்பு
கீதா வாசனை பாக்குத்தூள்
தயாரிப்பவர்கள்
வேல்ஸ் இண்டஸ்ட்ரியல்ஸ், மதராஸ்-21.
VEL'S INDUSTRIALS, MADRAS-21.



இந்த
விதம்
துவைப்
பாய்
SWASTIK
777
Superfine
SOAP
தினம் வெண்மையாய் உடுப்பாய்
ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிமிடெட், வடாலா, பம்பாய்



என் கணவர் முன்பு ஒரு சமயம் ஒரு சிறு கதை எழுதினார்.

அவர் ஒரு பிரபல எழுத்தாளர். இருந்தாலும், எந்தக் கதையை எழுதினாலும் முதலில் என்னைப் படிக்கச் செய்து, நல்லதென்று சொன்னால்தான் பத்திரிகைக்கு அனுப்புவார். அதுபோல இந்தக் கதையையும் என்னிடம் தந்து, "நீலு, இதைப் படித்துப் 'பாஸ்' செய்" என்றார்.

கைவேலையைப் போட்டு விட்டுக் கதையை அவசரம் அவசரமாகப் படித்தேன். அது எனக்குப் பிடிக்கவில்லை.

அவருடைய கதைகளிலே மற்றெல்லாவற்றையும் விடக் கவர்ச்சியானது வாழ்வை ஒட்டிய கதை அமைப்புத்தான். 'இப்படி நடக்குமா?' என்று ஒருவர் ஒரு கேள்வி கேட்கும்படி ஒரு சம்பவமாவது அவருடைய கதைகளில் இருக்கவே இருக்காது. ஆனால் இந்தக் கதை......?

"என்ன படித்து விட்டாயா? 'பாஸ்' தானே! இப்படிக் கொடு; இன்றைத் தபாவில் சேர்க்க வேண்டும்" என்று அவர் அடுக்களைக்கு வந்து அவசரப் படுத்தினார்.

"இதை எந்தப் பத்திரிகைக்கும் அனுப்ப வேண்டாம்!" என்று நான் சொன்னதும் அவர் திடுக்கிட்டுப் போனார்.

"ஏன் நீலு? இந்தக் கதை ரொம்ப நன்றாக அமைந்திருப்பதாக அல்லவா நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்?"

"படிக்கச் சுவாரஸ்யமாகத்தான் இருக்கிறது. ஆனால் கதையின் அமைப்பு? அதன் முடிவு? இப்படி எங்கேயாவது நடக்குமா?"

"பேஷாக நடக்கும். தமக்கைக்கு வாழ்வளிக்கத் தங்கை பிராணத்தியாகம் செய்து கொள்ளுவது நடக்காத சம்பவமா?"

"ஒருபோதும் நடக்கிராது. பெண் மனத்தை உங்களைவிட நன்றாக நான் அறிவேன். அழகியான சாரு, தான் காதலித்து வந்த ரகுபதி தன் அக்காளுக்குக் கணவனாக வரவேண்டுமென்று தற்கொலை செய்து கொண்டாள் என்று முடித்திருக்கிறீர்களே; அப்படி எந்தப் பெண்ணும் செய்ய மாட்டாள்!"

"நீ நினைப்பது தவறு, நீலு! பெண் எப்பொழுதுமே தியாகத்துக்குப் பெயர் போனவள். கணவனுக்காக, மக்களுக்காக, பெற்றோருக்காக, இப்படி எத்தனையோ தியாகங்களைச் செய்த பெண்மணிகளைப் பற்றி நீ படித்ததில்லையா? அதுபோல, இங்கே சாரு தமக்கைக்காகத் தன்னைத் தியாகம் செய்து கொள்ளுகிறாள்."

என் கணவர் தமது கதையின் போக்கும் முடிவும் சரியானது என்பதை நிரூபிக்க என்னென்ன வெல்லாமோ எடுத்துச் சொன்னார். ஆனால் இதுபோல ஒரு சம்பவம் புராணத்திலோ, சரித்திரத்திலோ, அல்லது நிகழ் காலத்திலோ நடந்ததாக நான் படித்ததில்லை யாதலால், வாசகர்கள் அவர்மீது

வைத்துள்ள மதிப்பை இக்கதை குறைத்து விடக்கூடும் என்று, அதை அனுப்பலாகாதென்று கண்டிப்பாகக் கூறி விட்டேன். அவர், ஒன்றும் சொல்லாமல் பாவம், வேறொரு கதை எழுத உட்கார்ந்தார்.

இது நடந்து ஒரு வாரம் ஆன பின்பு ஒரு நாள் மார்க்கெட்டில் காய்கறி வாங்கிக் கொண்டிருந்தேன். "ஹலோ மாமி!" என்ற பழகிய குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். சென்னையில் இருந்தபோது எங்களுடன் ஒரே வீட்டில் வசித்து வந்த ராஜாமணி ஐயரின் பெண் ஹேமா என்னை நோக்கிக் குதூகலத்துடன் வந்து கொண்டிருந்தாள்.

"இங்கே எப்பொழுதடி வந்தாய் ஹேமா? ஊரில் அப்பா அம்மா, எல்லோரும் சௌக்கியமா? நாலைந்து வருஷங்கள் ஆயிற்று, உன்னைப் பார்த்து; இல்லையா?" என்றேன்.

"என் கணவர் இங்கே சினிமாவுக்குப் பாட்டு எழுதிக் கொடுக்க வந்திருக்கிறார், மாமி! நாங்கள் தாதரில் இருக்கிறோம். வந்து இரண்டு வாரங்களாயிற்று."

"உனக்குக் கலியாணமாகி விட்டதாடி? எந்த ஊர்க்காரர் உன் கணவர்?"

"பட்டணத்துக்காரர்தான். அதோ நிற்கிறார் பாருங்கள், பசுப்போல. அம்மாடியோ அவருக்கும் எனக்கும் கல்யதனமாகக் கலியாணம் நடந்தேறுமா என்பது கடைசி வரையில் எல்லோருக்கும் சந்தேகமாகவே இருந்தது. அதனால்தான் தெரிந்த மனிதர்களுக்கு ஒரு அழைப்புக் கடிதங்கூட அனுப்ப முடியாமல் போய்விட்டது."

"ஏண்டி, அப்படி? அவருக்கு உன்னைப் பிடிக்க வில்லையா?"

"அது ஒரு பெரிய கதை மாமி; நாளைக்கு ஆத்துக்கு வாருங்களேன். சாவகாசமாய்ச் சொல்லுகிறேன். அதோ பாருங்கள். அவர் என்னைக் கூப்பிடுகிறார்."

ஹேமா அவளுடைய வீட்டு விலாசத்தைக் கூறிவிட்டுக் கணவனிடம் துள்ளி ஓடினாள்.

வீட்டுக்குப் போனதும், இவரிடம் ஹேமா பம்பாய்க்கு வந்திருப்பதைச் சொன்னேன்.

"ராஜாமணி ஐயருக்கு இங்கே மாற்றலாகி விட்டதா, என்ன?" என்று கேட்டார், என் கணவர்.

"இல்லை. ஹேமாவுக்குக் கலியாணமாகி விட்டதாம். கணவன் சினிமாப் படங்களுக்குப் பாட்டு எழுதிக் கொடுப்பவனாம். இங்கே அந்த வேலையாக வந்தவன் அவளையும் அழைத்து வந்திருக்கிறான். தாதரில் தான் இருக்கிறார்களாம்; நாளைக்குப் போய்ப் பார்த்துவிட்டு வரலாமா?"

"போய் வாயேன்."

"நீங்கள்?"

"எனக்கு இப்பொழுது ஆபீஸில் ஆடிட்டர் வந்திருக்கிறார்; ஒழியாது. நான் சாவகாசமாக ஒரு லீவு நாளில் போய் வருகிறேன். நீ போய் வா நாளைக்கு. அப்படியே அடுத்த



ஞாயிற்றுக் கிழமை இருவரையும் இங்கே சாப்பிட வரும்படி அழைத்து விட்டு வா."

மறு நாள் பிற்பகலில் நான் ஹேமாவின் வீட்டுக்குப் போனேன். அப்பொழுது அவள் என்னவோ மிகவும் முனைந்து எழுதிக் கொண்டிருந்தாள்.

"என்னடி, வந்தவர்களைக் கூடக் கவனியாமல் அப்படி முனைந்து எழுதிக் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டேன்.

ஹேமா வெட்கம் தோயச் சிரித்துக் கொண்டே "கதை எழுதுகிறேன், மாமி!" என்றாள்.

"நீ கூட ஆரம்பித்து விட்டாயா?"

"என்னவோ மாமி, அவருக்குக் கவிதைப் பித்து; எனக்குக் கதைப் பித்து. காமா–சோமா வென்று ஏதாவது கிறுக்குவேன்!"

"இங்கே கொண்டு வாடி பார்க்கலாம், எப்படி எழுதியிருக்கிறாய் என்று!"

"ஐயையோ! வேண்டாம் மாமி! நீங்கள் பெரிய 'கிரிடிக்'. அத்தனை புகழ் பெற்ற மாமா எழுதுகிற கதைகளுக்கே ஆயிரம் 'வக்கணை' சொல்லும் உங்களுக்கு இந்தக் கத்துக் குட்டியின் கதைகள்..."

அவள் கதை எழுதிய தாள்களை உள்ளே எடுத்து வைத்து விட்டு, அடுத்த அறையிலிருந்த கணவனை அழைத்து வந்து எனக்கு அறிமுகம் செய்து வைத்தாள். என்னோடு கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்த பின்னர், தனக்கு ஷூட்டிங் இருப்பதாக அவன் போன பிறகு ஹேமாவிடம் அவள் கலியாண விஷயத்தைப் பற்றிக் கேட்டேன்.

"அதை யேன் கேட்கிறீர்கள் மாமி— கேலிக் கூத்து!" என்றவள், சட்டென



எழுந்து சென்று பெட்டியிலிருந்து ஒரு போட்டோப் படத்தை எடுத்து வந்து என்னிடம் தந்தாள். அவளுடைய கலியாணப் படமாக்கும் என்று ஆவலோடு நோக்கினேன். ஆனால், அது அப்படமல்ல. வேறு யாரோ ஒரு பெண்ணுடைய படம். மீன்காரி மாதிரி உடை உடுத்துக் கொண்டு, கையில் துடுப்புடன் ஓடம் தள்ளிக் கொண்டிருந்தாள், அப்படத்திலிருந்த பெண். படத்தின் அடியில் ஒரு பாட்டும் எழுதியிருந்தது.

"நீலக்கடல் அலைமேலே, என்
நெஞ்சம் மிதக்கையிலே, அதில்
பாலமிட்டு அமர்ந்துவிட்ட—பொற்
பாவையவள் இவள் தான்."

"இதெல்லாம் என்னடி, ஹேமா?" என்று வியப்போடு கேட்டேன்.

"இவளால்தான் இவர் எனக்குக் கிடைத்தார்."

"அப்படியென்றால்......?"

"அதுதான் சொன்னேனே, பெரிய கதையென்று. விவரமாகச் சொல்லுகிறேன், கேளுங்கள்!" என்று ஆரம்பித்தாள் ஹேமா.

* * *

இவருடைய அப்பா இருக்கிறாரே மாமி, அவர் பட்டணத்திலே பிரசித்தி பெற்ற வக்கீல். ஸர் எஸ். மாதுர்பூதம் என்று பெயர். கிரிமினல் கேஸ்களில் எந்த ஜட்ஜாயிருந்தாலும் கதிகலங்க அடித்துவிடுவார். கொள்ளை கொள்ளையாகச் சம்பாதித்தார். மகாலட்சுமி மாதிரி மனைவி—என் மாமியாரின் பெயரும் அதுதான். ஆசைக்கு ஒரே ஒரு பிள்ளை, இவர். கார், பங்களா, அது இது என்று ரொம்ப ஆடம்பரமாக வாழ்ந்து வந்தார்.

என்னுடைய மாமியார் ரொம்ப ஆசார சீலமானவள். போன வருஷம் அவள் செத்துப்போன வரையில் தன் கையால் சமைத்த உணவையே உண்டு வந்தாள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். தனது இருபதாவது வயதிலே என்னவோ இவரைப் பெற்றெடுத்தாள். அதன் பிறகு கருத்தரிக்கவே இல்லை. 'புருஷன் — மனைவிக்குள் ஏதோ தகராறு. ஒரே வீட்டில் தம்பதிகளாக வாழ்ந்தாலும் அவர்களிடையே தாம்பத்திய உறவு கிடையாது' என்றும் ஊரில் ஓர் வதந்தி உலவி வந்தது. அது எவ்வளவு உண்மையோ தெரியாது; ஆனால், என் மாமனார் செத்துப் போனவரையில் அவள் அவருக்கு உகந்த மனைவியாகத்தான் வாழ்ந்து வந்தாள்.

அப்பாவுக்கும் அம்மாவுக்கும், இவர் படித்து, பெரிய வக்கீலாக வரவேண்டும் என்ற ஆசை இருந்தது. ஆனால் இவரோ, பி. ஏ.க்கு மேல் படிக்க மாட்டேன் என்று பிடிவாதமாக மறுத்து விட்டார். ஹைஸ்கூலில் படிக்கும் போதிருந்தே இவரைக் கவிதைப் பித்து நன்றாகப் பிடித்துக் கொண்டு விட்டது. எப்பொழுதும் கவிதைகளைப் படித்துப் படித்து காலடைவில் தாமே கவிதை இயற்றவும் தொடங்கி விட்டார்.

சாந்தோமில் இருக்கது இவருடைய பங்களா. பக்கத்தில் கடல். மீன் பிடிக்கப் போகிற—வருகிறவர்களை யன்றி வேறு ஜன நடமாட்டமற்ற அந்த இடத்தில்தான் இவரை அதிகமாகக் காணலாம்.

சேந்தன் என்ற ஒரு செம்படவன் இவர்கள் குடும்பத்துக்கு ரொம்பத் தெரிந்தவன். அவனுடைய மனைவி கூடச் சிலகாலம் இவர்களுடைய வீட்டில் வேலைக்காரியாக இருந்திருக்கிறாள். அநேக நாட்கள் இரவு நேரத்தில் இந்தச் சேந்தன் மீன் பிடிக்கப் போகிற போது, அவனோடு படகில் சென்று அப்போதும் ஏதாவது கவிதை இயற்றிக் கொண்டிருப்பாராம்.

ஒரு நாள் இரவு அப்படித்தான், சேந்தனுக்காகக் கடற்கரையில் கவிழ்ந்து கிடந்த அவனுடைய படகின் மீது அமர்ந்து இவர் காத்திருந்தார். அப்பொழுது அங்கே இளம் பெண் ஒருத்தி வந்தாள். சாதாரண மீன்காரிகள்போல அவள் இருக்கவில்லை. நல்ல செக்கச் சிவந்த மேனி; குறு-குறு வென்று சுழன்று மாயா ஜாலம் செய்யும் கண்கள்; எடுப்பான நாசி; நல்ல உயரம்; பரந்த இட-

மான அங்கங்கள்; இவற்றுடன் இமையையும் மூடியிருந்த அவளைக் கண நேரம் சுற்றுப்புறத்தை மறந்து தன்னையும் மறந்து பார்த்துக் கொண்டிருந்தார் இவர்.

அந்தப் பார்வையில் வெட்கித்தான் போலும், அப்பெண் மெல்லத் தான் வந்த காரியத்தை வெளியிட விரைந்தாள். "நீங்கள் தானே வக்கீல் ஐயா வூட்டுப் புள்ளே?" என்று வயதின் வெட்கம் தொனிக்கக் கேட்டாள்.

"ஆமாம்; நீ யார்?"

"நான் சேந்தனின் மகள். அப்பாவுக்கு இன்னிக்கு ஒடம்பு சரியாயில்லே; அதனாலே......"

"அவன் கடலுக்கு வரமாட்டான், இல்லையா?"

"ஆமாம்."

"சரி, பரவாயில்லை; போ."

அவள் தயங்கினாள்.

"ஏன்? என்ன வேணும் உனக்கு?"

"இல்லே; ஒருவேளை ஒங்களுக்குக் கடலுக்குப் போகணும்போல இருந்திச்சின்னு என்னையே உங்களுக்குப் படகு விட்டுட்டுப் போகச் சொன்னாரு அப்பா."

"என்ன?" என்று சிறிது திடுக்கிட்டார் இவர். பிறகு என்ன தோன்றிற்றோ, தெரியாது, "உனக்குப் படகு விடத் தெரியுமா?" என்று கேட்டார்,

"தெரியாமல் என்னங்க? நாங்கள்தான் கடல் மீனு ஆச்சே?"

"நீ கடல் மீன் போலவா இருக்கே!"

"அதெப்படீங்க, மனுசங்க மீனாகி விட முடியும்? ஒரு பேச்சுக்கின்னு சொன்னேன்!"

"நீ உண்மையிலே கடலிலே மிதக்கிற மீன்போல இல்லைதான்! ஆனால்......"

"சொல்லுங்க!" என்று அவள் இவருடைய அனுமதி யின்றியே படகைப் புரட்டிக் கடலில் தள்ளினாள். இயந்திரம்போல அதில் ஏறி அமர்ந்து கொண்டார் இவர். அவள் துடுப்பை உந்தினாள்; படகு கடலில் மிதந்தது. அவர்கள் பேச்சும் தொடர்ந்தது.

"சொல்லுங்க!" என்றாள் இவர் முகத்தை நோக்கிக் கொண்டே.

"சொல்லட்டுமா? நீ கடல் மீன் போல இல்லை. ஆனால், என் கற்பனையில் அடிக்கடி வருவாளே, அந்தக் கடல்கன்னிகை மாதிரி இருக்கிறாய்!"

"கடல் கன்னிகையா? அவள் தெய்வமாச் சுங்களே!"

"தெய்வந்தான்! மனிதனின் தேட்டம் எங்கே தங்குகிறதோ, அதெல்லாம் அவனுக்குத் தெய்வந்தானே?"

மாமி, சம்பாஷணையின் போக்கு முதல் நாள் முதல் சந்திப்பிலே எத்திசையில் திரும்பிற்றோ, அதே திசையில் அவர்களுடைய வாழ்வும் திரும்பி விட்டது. சந்தர்ப்பங்களும் அவர்களுடைய காதலை வளர்க்க உதவின. இல்லாவிட்டால், சேந்தனுக்கு நோய் நீடித்து, சில நாட்களில் அவனையே இந்த உலகிலிருந்து பிரித்துச் செல்லுவானேன்?

பிரபல வக்கீல் ஒருவரின் படித்த பிள்ளைக்கும் கேவலம் ஓர் செம்படவன் மகளுக்கும் இடையே காதல் பாலமிட்டது என்றால், அதன் மகத்துவத்தை என்னவென்று சொல்லுவது? அது நாள்பட வளர்ந்து கொண்டே போயிற்று. நாள் தோறும் அவர்கள் நீலக்கடலின் மத்தியில் சந்தித்தார்கள். அப்பொழுது இவர் அவளைப் போட்டோ பிடித்த ஒரு கோலத்தின் படமும், எழுதிய பாட்டும்தான் இவை. இவர் இவளுக்குக் கல்வி கற்றுக் கொடுத்தார். நாகரிகங்களைக் கற்பித்தார். கவிதை இன்பத்தை நுகரும் சக்தியை ஊட்டினார். தமக்கு மனைவியாக வரப் போகிறவளைத் தமக்குரிய பாணியில் மாற்றி அமைத்துக் கொண்டார். ஆனால், இத்தனையும் அந்த நீலக் கடல் அலை மேலே நடந்தது. இவர்கள் காதலை அறிந்தவை காலடியில் சலசலத்த கருங்கடலும் வான வீதியில் ஒளிர்ந்த முழுமதியுந்தான்.

* * *

காலம் கடந்தது; இல்லை, மாறிற்று. அதன் சுழற்சியில் என் மாமனாரின் போக்கிலே மாறுதல்கள் ஏற்பட்டன. நல்ல மனிதராக இருந்தவர் கடைசிக் காலத்தில் குடி, கூத்து முதலியவற்றில் சொத்துக்களை விரயம் செய்து, தொழிலைப் புறக்கணித்து, புகழை அழித்து, வாழ்வையும் முடித்துக்கொண்டார்.

செல்லப் பிள்ளையாக வளர்ந்த தோஷத்தோடு கவிதைப் பித்தும் காதற்பித்தும் கொண்டலைந்த இவருக்குக் குடும்பத்தில் ஏற்பட்ட தலைகீழ்மாற்றம் பிடிபடவே யில்லை. எப்பொழுதும் போலவே இவர் இருந்து வந்தார். ஆனால் பெற்றவள் விழித்துக் கொண்டாள். தன் பிள்ளை சம்பாதித்து வயிறு வளர்க்கும் காலம் வந்து விட்டதை அவள் உணர்ந்து அவருக்குக் குடும்பத்தில் பற்றுதல் ஏற்பட மணம் செய்து வைக்கத் தீர்மானித்தாள்.

ஒரு நாள் மெல்ல இவரிடம் தனது கருத்தை வெளியிட்டாள். இவரும் ஒளிவு மறைவின்றித் தம் காதலைப் பற்றிக் கூறிவிட்டார். அதைக் கேட்டதும் என் மாமியாருக்குத் தூக்கி வாரிப் போட்டது! "உன் அப்பா அடித்த கூத்துக்களுக்கும் ஏற்படுத்திய அவமானங்களுக்கும் போகாத என் உயிர் நீ செய்யவிருக்கும் இழி செயலால் போகட்டுமென்று பார்க்கிறாயா, அப்பனே!" என்று மனம் நொந்து உரைத்தாள்.

"இழிசெயலோ, நல்ல செயலோ, கைப்பிடிப்பதானால் அந்தப் பெண் மங்கையைத் தான் கைப்பிடிப்பேன்" என்று திடமாகக் கூறினார் இவர்.

"அடே, இந்த அநீதியைத் தெய்வம் பொறுக்காதடா!" என்று கதறினாள் தாய்.

"தெய்வத்தின் கண்களுக்கு ஜாதி-மத பேதம் ஒன்றும் கிடையாதம்மா. அதெல்லாம்

இதோ! நீங்கள் விரும்பியிருந்த கார் பினிஷ்!



அடித்தாற்போல்
சொல்லுங்கள்
ஷாலிமார்
செல்லுலோஸ்
கார் பினிஷ்களை
குறிப்பிடுங்கள்!

- 38 வர்ணங்களில் கிடைக்கிறது.
- அதிக கெட்டியாக உழைக்கக்கூடியது. நீடித்து நிற்கக்கூடியது.
- எண்ணை, பெட்ரோல், முதலியவை உட்புக முடியாதது.
- காரம், அமிலம் முதலியவைகளை எதிர்க்கக் கூடியது.
- பாலிஷ் செய்து வந்தால் "பிரகாசமான" உருவம் மங்காமல் வெகுநாள் நீடித்துநிற்கும்.
- இது ஒரு ஷாலிமார் தயாரிப்பு.

ஷாலிமார்

செல்லுலோஸ் கார் பினிஷ்கள்

SHALIMAR PAINT, COLOUR & VARNISH CO., LTD.

POST BOX 136, MADRAS 1

Importers & Distributors for Ceylon:

LEWIS BROWN & CO., LTD., POST BOX 85, COLOMBO

உங்கள் கற்பனை. அதற்கு நான் கொஞ்சம் கூட மசியமாட்டேன். தெரிந்ததா?"

"அடே, நான் சொல்வதைக் கேளடா! இனிமேலாவது நம் ஜாதியில் ஒரு பெண்ணைப் பார்த்துக் கட்டி வைக்கிறேன்."

"எந்தக் கிளியும் என் கிளியைவிட உயர்வு இல்லை. என்னுடன் இதுபற்றி வாதாடாதே. என் கலியாணம் மங்கையுடன் உன் கண் முன்பே விரைவில் நடக்கும்."

பிள்ளையின் முறையற்ற தீர்மானம், பெற்றவளை கிலேசத்திலாழ்த்தியது. போயும் போயும் மீன்காரியைப் போய்ப் பிடித்தானே என்ற வருத்தங்கூட அவளுக்கு அவ்வளவாக இல்லை. அதிலும் மேம்பட்ட, மிக்க கேவலமான, பெற்ற பிள்ளையிடங்கூட அவள் சொல்ல விரும்பாத தடை ஒன்று இருந்தது.

என் மாமியார் சிந்தித்தாள். கடைசியில் சாட்சிக்காரன் காலில் விழுவதைவிடச் சண்டைக்காரன் காலில் விழுந்து பார்க்கலாமே என்று தோன்றிற்று. மெல்ல ஒரு நாள் மங்கையை வீட்டுக்கு அழைத்து வரச்செய்து தனது குடும்பத்துக்கு ஏற்பட்ட அவமானங்களைச் சொல்லி, மேலும் ஒரு அவமானத்துக்குத் தன்னை உள்ளாக்காமல் தன் பிள்ளையை மறந்துவிடக் கேட்டுக் கொண்டாள்.

பழைய மீன்கார மங்கையாக இருந்தால் ஒருகால் பாவ புண்ணியத்துக்குப் பயந்து அவள் கோரிக்கைக்கு இணங்கி விருப்பாள். ஆனால் மங்கைதான் இப்பொழுது நாகரிக மங்கையாக மாறியிருந்தாளே! காதலின் உயர்வைப் பற்றி அவள் பெரிதாக, 'லெக்சர்' அடிக்க ஆரம்பித்து விட்டாள். அதற்கு ஜாதி, மதம், இடம், பொருள், ஏவல் ஒன்றும் கிடையாது என்று விளக்கினாள்.

"ஜாதிக்காகவும், அந்தஸ்துக்காகவும் சொல்லவில்லை அம்மா, மங்கை! வேண்டுமானால் அவன் உங்கள் ஜாதியிலே வேறொரு பெண்ணை மணந்து கொள்ளட்டும்; நான் தடை சொல்லவில்லை; ஆனால்......"

"நான் மாத்திரம் பாவம் செய்தவள். அதனால் அவர் என்னைக் கட்டிக் கொள்ளக் கூடாது; இல்லையா?"

"நீ பாவம் செய்தவளல்ல, குழந்தாய்; ஆனால், ஆனால்......"

"சொல்லுங்கள்; ஆனால் என்ன?"

"பாவத்தில் உதித்தவள்."

"...அம்மா!"

"நான் உன் அம்மா இல்லை. ஆனால் உங்கள் இருவரின் அப்பாதான் என் வீட்டுக்காரர்."

மங்கை அப்படியே சிலையாக நின்றுவிட்டாள். என் மாமியார் தொடர்ந்தாள். "அந்தப் பாவச் செயல், நான் இவனைப் பெறப் பிறந்தகம் சென்றிருந்த போது நிகழ்ந்தது. உன் அப்பாவாக இருந்தானே சேந்தன், அவன் அப்போது பினாங்கில் இருந்தான். உன் தாயார் எங்கள் வீட்டில் வேலை செய்து பிழைத்து வந்தாள். அவளுக்குக் கணவனைப் பிரிந்த தாபம்; இவருக்கு மனைவித் தாகம். தவறு நேர்ந்து விட்டது.

"நல்ல வேளையாகக் குழந்தை பெற்று காப்பதாவது காலே நான் திரும்பி விட்டேன். மறு மாதத்தில் ஒரு நாள் உன் தாய் என்னிடம் வந்து தேம்பித் தேம்பி அழுதாள். "என்னடி? என்ன நேர்ந்து விட்டது?" என்று கேட்ட போது நடந்ததைச் சொல்லி, நீ இரண்டு மாதக் கருவாக வயிற்றில் வளருவதையும் கூறினாள். அவள் சாக விரும்பினாள். நான்தான் தடுத்துத் தப்புவதற்கும் வழி செய்தேன். அவள் நோயுற்றிருப்பதாகச் சேந்தனுக்குத் தந்தி அனுப்பி வரவழைக்கச் செய்தேன். எல்லோரும் உன்னை எட்டாம் மாதத்தில் பிறந்த குழந்தை என்று சொல்லிக் கொண்டனர்.

"தமக்கும், ஒன்றுமறியாத ஓர் ஏழைப் பெண்ணுக்கும் மாசு கற்பித்துக் கொண்ட தற்குத் தண்டனையாக என் கணவரை இனித் தொடுவதில்லை என்று விரதம் எடுத்துக்கொண்டு, அதைக் கடைசி வரையிலும் நிறைவேற்றி விட்டேன்!"

"இதற்கெல்லாம் அத்தாட்சி?" என்று விசும்பியவாறு கேட்டாள் மங்கை!

"இதோ நீ மற்ற செம்படவப் பெண்களிலிருந்து உருவிலும் நிறத்திலும் மாறுபட்டுப் பிறந்திருக்கிறாயே, அதுவே அத்தாட்சி!"

மங்கை சற்று நேரம் பேச்சு, மூச்சற்று நின்றாள். பிறகு, "சரி அம்மா, இனி உங்கள்



சென்னை P. செல்வராஜ முதலியார் (புரொப்ரைடர் WHITE BROS., Opticians, Broadway) அவர்களின் குமாரத்தி சௌ. T.C. நீலாயதாக்ஷிக்கும் ஸ்ரீ N. சிவப்பிரகாசம் B. A., (Revenue-Dept., Secretariat, Fort St. George) அவர்களுக்கும் சென்ற மாதம் திருவொற்றியூரில் வெகு விமரிசையாகத் திருமணம் நடந்தது. அன்று வித்வான் மதுரை ஸ்ரீ மணி ஐயர் இன்னிசையின்போது அநேக நண்பர்களும் உறவினரும் கண்டு களித்து தம்பதிகளை ஆசீர்வதித்தனர்.

வாழ்க நீலாயதாக்ஷி — சிவப்பிரகாசம்

பின்னை விரைவில் என்னை மறந்து விடுவார்" என்று சொல்லிவிட்டு, விரு விரு என்று வெளியே போய்விட்டாள்.

மறுநாள் அவர்கள் காதல் வளர்ந்த நீலக் கடல் அலைமேலே மங்கையின் உடல் மிதந்தது. ஊரிலே பல வாலிபர்கள் அவளை அடையப் போட்டி யிட்டுக் கொண்டிருந்தனர். அவர்களுள் வெறியனான எவனோ ஒருவன் அவளைக் கடலில் தள்ளி விட்டான் என்று செம்படவர்கள் பேசிக்கொண்டார்கள்.

இவர் அழுதார்; புரண்டார்; முட்டிக் கொண்டார். ஆனால், இறந்தவர்களுக்கு அழுவதெல்லாம் எத்தனை நாட்களுக்கு? கடைசியில் தாயாரின் விருப்பத்தை நிறைவேற்ற என்னைக் கைப் பிடித்தார். இப்பொழுது இவர் முழுவதும் ஹேமா தாசராகி விட்டார்!" என்று கூறி முடித்தாள் ஹேமா.

"நீ பாக்கியசாலிதாண்டி, ஹேமா. ஆனால் யார் உனக்கு இந்த ரகசியமான கதைகளை யெல்லாம் சொன்னார்கள்?" என்று நான் கேட்டேன்.

"என் மாமியார்தான் சொன்னாள், வேறு யாருக்குத் தெரியும் இதெல்லாம்? இவருக்குக் கூட இன்னும் தெரியாது. 'இவரை அடையக் கொடுத்து வைத்த நான் பாக்கியசாலி அம்மா; எல்லாம் உங்கள் அன்பும் ஆசிர்வாதமும் கொண்டு கைகூடிற்று" என்று ஒரு தடவை என் மாமியாரிடம் சொன்னேன். அப்பொழுது அவள் இப் படத்தை அவர் பெட்டியிலிருந்து எடுத்து வந்து என்னிடம் தந்து, "என் ஆசிர்வாதம் மாத்திரம் இல்லையடி ஹேமா! இவனுடைய தியாகமும் சேர்ந்து தான் நீ என் வீட்டுக்கு விளக்கேற்ற வந்தாய்' என்று கூறி இந்தக் கதையையும் சொன்னாள்" என்று முடித்தாள் ஹேமா.

ஹேமாவின் கதையைக் கேட்டதும் என் மனம் பளிச்சென்று அன்று என் கணவர் எழுதிய கதைக்குத் தாவிற்று. பாவம், அவர் எத்தனை சொன்னார்—'இது போல எவ்வளவோ நடக்கின்றன' என்று. வீட்டுக்குப் போனதும் முதல் வேலையாக அக் கதையைப் பத்திரிகைக்கு அனுப்பச் செய்ய வேண்டும் என்று நிர்மானித்துக் கொண்டேன்.

"என்ன ஆலோசிக்கிறீர்கள் மாமி?" என்று கேட்டாள் ஹேமா என் சிந்தனையைக் கண்டு.

அவளிடம் நடந்ததைச் சொன்னேன்.

ஹேமா சிரித்துக் கொண்டே, "இப்பொழுது தான் உங்களுக்கு அந்தக் கதைச் சம்பவம் நடக்கக் கூடியது என்று பட்டதாக்கும்" என்றாள்.

"ஆமாம்; உன் வாழ்க்கையிலும் கிட்டத் தட்ட அப்படித்தானே நடந்திருக்கிறது!"

நாங்கள் இவ்வாறு பேசிக்கொண்டிருந்த போது, ஸ்டுடியோவுக்குப் புறப்பட்டுச் சென்ற ஹேமாவின் கணவன் மிகவும் அவசரமாகத் திரும்பி வந்தான்.

"நீங்கள் ஸ்டுடியோவுக்குப் போகவில்லை?" என்று கேட்டாள் ஹேமா.

"பாதி வழி போனேன்; அப்புறந்தான் ஞாபகம் வந்தது—முந்தாநாள் ஒரு 'ஸ்டில்' கொண்டு வந்தேனே, பத்திரிகை விளம்பரத்துக்குக் கொடுக்க! அதனடியில் ஒரு கவிதை எழுதிவரச் சொன்னார்கள். அதை எடுத்துக் கொண்டு போக மறந்து விட்டேன். அதற்காகத்தான் திரும்பி வந்தேன்."

அவன் அவசரமாகப் பெட்டியைத் திறந்தான். ஆனால், அதே சமயம் ஹேமா என் கையிலிருந்து அந்த மீன்காரியின் படத்தைப் பிடுங்கி, "இதோ இருக்கிறது அந்த 'ஸ்டில்'" என்று கணவனிடம் கொடுத்தாள்.

அவன் அதைப் பெற்றுக் கொண்டு சென்றதும், ஒன்றும் புரியாமல் விழித்து நின்ற என்னை நோக்கி ஹேமா 'இடி-இடி' என்று சிரித்தாள்.

"என்னடி இதெல்லாம்?" என்று கேட்டேன்.

"மாமாவும் நானும் உங்களை ஏமாற்றி விட்டோம்" என்றாள் அவள்.

"மாமாவை நீ எப்பொழுதடி பார்த்தாய்?"

"உங்களைக் காணுமுன்பே நான் அவரைச் சந்தித்து விட்டேன். இவர் பாட்டு எழுதுகிறார், அந்தச் சினிமாவுக்குக் கதை எழுதியவள் நான்தான். அதைத்தான் இப்பொழுது உங்களுக்குச் சொன்னேன். உண்மையில் என் கணவர் அப்படி எந்தப் பெண்ணிடமும் மனத்தைப் பறிகொடுத்து, பிறகு அவளுடைய தியாகத்தால் எனக்குக் கிட்டியவரல்ல.

"சென்ற வாரம் மாமாவை யதேச்சையாகச் சந்தித்து வீட்டுக்கு அழைத்து வந்தோம். நான் சினிமாவுக்குக் கதை எழுதுவதைக் கேட்டு அவர் மிகவும் சந்தோஷமடைந்து அக் கதையைக் கூறும்படி கேட்டார். கதையைச் சொன்னேன். 'அருமையான கதை' என்று பாராட்டி விட்டு, "ஆனால், உன் மாமியிடம் கேட்டாயானால், அவள் இதை நல்ல கதை யென்று ஒப்புக் கொள்ளவே மாட்டாள்!" என்றார்.

"அதைப் பரீட்சிக்க விரும்பினேன். அதன் பயனாகத்தான் மாமா, கிட்டத்தட்ட என் சினிமாக் கதை போலவே ஒரு கதை எழுதி உங்களிடம் காட்டினார். அவர் அநுமானித்தவாறு நீங்கள் அதைப் 'பாஸ்' செய்யவில்லை. கற்பனை என்று தெரிந்தால் நம்பாத ஒரு சம்பவத்தை வாழ்வில் நடந்தது என்று திரித்துக் கூறினால் பலர் நம்புவதை நான் கண்டிருக்கிறேன். அதே பரீட்சையைப் புரிந்து கொள்ளத்தான் இன்று உங்களை இங்கே வரவழைத்து இத்தனை நாடகமும் ஆடினேன்!"

ஹேமா மறுபடியும் கல—கலவெனச் சிரித்தாள். போக்கிரிப் பெண்! என்னையே மட்டம் தட்டிவிட்டாளே. அப்பப்பா, இந்தப் பேனாப் பிடிக்கிறவர்களை மாத்திரம் நம்பவே கூடாது. தங்கள் கற்பனைத் திறனால் எவரையும் அவர்கள் ஏமாற்றிவிடுவார்கள்!



அறிவாளி!
ஸெவன் ஓ'கிளாக்
ஸ்லாட்டெட்
பிளேடுகளினுல்
தினசரி முகத்தை
க்ஷவரம் செய்து
கொள்கிருர்.



ஸெவன் ஓ' கிளாக்
ஸ்லாட்டெட் பிளேடுகள்

[illegible]

[illegible]

[illegible]

7 o'clock

ஸெவன் ஓ' கிளாக் ஸ்லாட்டெட் பிளேடுக



10 ப்ளேடுகள் கொண்ட
பாக்கெட் ரூ. 1

கல்லும் கரைந்தது!



பரிசுக் கதை: மேரி ஷாப்னர் (ஆஸ்திரியா) மொழி பெயர்ப்பு: வாஞ்சி

ரஸ்தாக்களின் வழியாக வரிசை வரிசையாய்ச் சென்று கொண்டிருந்த மோட்டார் லாரிகளுக்கும் ஜனக் கூட்டத்துக்கும் முடிவே இல்லையோ என்று தோன்றியது. ஜனங்களின் முகங்களில் சோகமும் வேதனையும் தாண்டவமாடின. 'இரக்கமற்ற உலகத்தின் கொடுமைக்கு நாங்கள் பலியாகியுள்ளோம்' என்று அவர்களுடைய முகங்கள் கூறுவதுபோல் தோன்றின.

ஒரு தேசம் முழுவதுமே நகர்ந்து செல்வது போல் காணப்பட்டது. சாமான்கள் குவிக்கப் பட்டிருப்பது போல் ஜனங்கள் கூட்டம் கூட்டமாக நின்றனர். அவர்களை யாரும் லட்சியம் செய்யவில்லை. யார் லட்சியம் செய்வது! லட்சியம் செய்தாலும் அந்நிலைமையில் யார் என்ன சாதிக்க முடியும்!

அவர்கள் ஊர் ஊராக அலைந்து கொண்டிருந்தார்கள். தேசம் தேசமாகத் திரிந்து கொண்டிருந்தார்கள். எங்கு செல்லுவது, எங்கு தங்குவது என்று அவர்கள் ஏங்கினார்கள்.

"அம்மா", "அம்மா" என்று அடிக்கடி குழந்தைகளின் கூக்குரல்கள் கேட்டன. ஆனால் "ஏன்" என்று கேட்க அவர்களுடைய தாய்மார்கள் அங்கு இருந்தால்தானே! தாயைப் பிரிந்த குழந்தைகள் அலறின. பெண்கள் தங்கள் தங்கள் கணவனைக் காணாமல் கதறினார்கள். ஆடவர்கள் தங்கள் தங்கள் மனைவியைக் காணாமல் மனம் துடித்தார்கள்.

அப்போது ஐரோப்பா கண்டம் முழுவதையும் அல்லோல கல்லோலப் படுத்திய சூறாவளிக் காற்றே அதற்குக் காரணம். அப்போது மூண்ட மகா யுத்தம் அவ்வாறு குடும்ப பந்தங்களை வேரறுத்துப் பிரித்து விட்டது. குழந்தைகளும் பெற்றோர்களும் உற்றார் உறவினரும் பிரிந்து பல திக்குகளிலும் சிதறி ஓடும்படி செய்து விட்டது.

நடுநிசி நேரமானதால், நகர் முழுதும் துயிலில் ஆழ்ந்திருப்பது போல் தோன்றியது. ஒரு போலீஸ்காரர் மாத்திரம் மெதுவாகப் பாடிய வண்ணம் தெருவில் ரோந்து சுற்றிக் கொண்டிருந்தார். திடீரென்று அவரது பார்வை இருளை ஊடுருவிச் சென்று, ஒரு வீட்டின் தாழ்வாரையில் உட்கார்ந்து கொண்டிருந்த ஓர் உருவத்தின்மீது விழுந்தது. அவர் அதன் அருகில் செல்ல முற்பட்டார். அவர் வருகையை விரும்பாதது போல் அந்த உருவம் எழுந்து அப்பால் செல்லத் தொடங்கியது. போலீஸ்காரர் அதைத் தொடர்ந்து சென்று அதன் கையைப் பற்றினார்.

அந்த உருவம் வேறு யாருமில்லை. ஐந்து அல்லது ஆறு வயது நிரம்பிய அழகிய ஒரு பெண் குழந்தைதான்.

ஒரு பெண் குழந்தை இருளில் தனிமையாக அவ்விதம் உட்கார்ந்திருப்பதற்குக் காரணம் என்ன! அதன் முகம் சோர்ந்திருந்தது; கண்களிலிருந்து நீர்வழிந்து கொண்டிருந்தது. போலீஸ்காரர் கேட்ட கேள்வி எதற்கும் அக்குழந்தை பதில் சொல்லாமல் நின்றது.

மெதுவாகப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்று விட்டால், அதைப் பேச வைக்கலாம் என்பது போலீஸ்காரரின் எண்ணம். எனவே, அதன் கையைப் பிடித்த வண்ணம் நடந்தார். குழந்தையும் பேசாமல் அவரைத் தொடர்ந்து சென்றது.

நடுநிசியிலும் போலீஸ்காரர் அழைத்து வரும் அந்த விசித்திரக் கைதியைக் கண்டு, போலீஸ் ஸ்டேஷனில் இருந்தவர்கள் ஒன்றும் புரியாமல் விழித்தார்கள். சாதாரணக் கைதியாக இருந்தால் அவர்கள் இதற்குள் என்ன பாடு படுத்தி விருப்பார்கள், தெரியுமா!

குழந்தையைக் கண்டதும் எல்லோரும் அதை அன்புடன் சூழ்ந்து கொண்டார்கள்.

அவர்களால் அந்தக் குழந்தையைப் பேச வைக்கவே முடியவில்லை.

எவரை யெல்லாம் ஆட்டி வைத்துவிட்டு ஊமை போல் இருக்கும் கொடிய கைதிகளைப் பேச வைப்பது எப்படி என்பது அவர்களுக்குத் தெரியும். அப்படிப்பட்ட நிபுணர்கள் அந்தக் குழந்தையைப் பேசவைப்பது எப்படி என்று தெரியாமல் திகைத்தார்கள்.

''குழந்தை! உன் பெயரையாவது சொல்லக் கூடாதா! உன் பெயர் என்ன என்பது நிச்சயமாக உனக்குத் தெரிந்திருக்க வேண்டும்'' என்றார் இன்ஸ்பெக்டர் அன்புடன்.

சாதாரணக் கைதியிடம் அவர் பேசுவதற்கும் இந்தக் குழந்தையிடம் பேசுவதற்கும் எவ்வளவு வேற்றுமை!

கடைசியாக, தன் பெயர் தெரியும் என்பதற்கு அறிகுறியாக அந்தக் குழந்தை மெதுவாய்த் தலையை அசைத்தான்.

அவன் பெயர் எல்பிரெட் ஷினீடர். வயது ஆறு.

இதற்குமேல் அந்தக் குழந்தையால் எதுவும் கூற முடியவில்லை. அவனுக்குத் துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது. 'ஹோ' வென்று அழ ஆரம்பித்து விட்டான்.

இன்ஸ்பெக்டர் தமது கைக் குட்டையை எடுத்து அவனிடம் கொடுத்தார். அவன் அதை வாங்கித் தன் கண்களிலிருந்து வழிந்த நீரைத் துடைத்துக் கொண்டான்.

''இப்படி நீ அழக் கூடாது. உன்னுடைய அப்பாவும் அம்மாவும் யார் என்று சொல்லு'' என்றார் இன்ஸ்பெக்டர் பரிவுடன்.

' எனக்குத் தெரியாது. உண்மையாக எனக்குத் தெரியாது'' என்றான் குழந்தை.

'' உன்னைப் போன்ற ஒரு பெரிய குழந்தைக்குத் தன் அப்பா, அம்மா யார் என்பது தெரியாதா! நான் நம்ப மாட்டேன்.''

'தெரியாது' என்று குழந்தை மறுபடியும் தலை அசைத்தான். இன்ஸ்பெக்டருக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. இருந்தாலும் போலீஸ் இலாகாவில் அவர் பெற்றிருந்த நீண்ட கால அனுபவம் அவருக்குத் துணையாக இருந்தது.

சோர்ந்திருக்கும் குழந்தையை முதலில் தூங்க வைக்க வேண்டும். அதுதான் சரியான வழி.



கைதிகளைக் கட்டளையிட்டே வழக்கமுள்ள போலீஸ் அதிகாரிகள் அன்று அவர்கள் கையில் அகப்பட்டுக் கொண்ட அந்த விசித்திரக் கைதிக்குத் தாங்களே படுக்கையை விரித்துப் போட்டார்கள். அதில் படுத்துக் கொள்ளும்படி உபசாரம் செய்தார்கள்.

அழுது கொண்டே அதில் படுத்த குழந்தை சிறிது நேரத்தில் அயர்ந்து தூங்கி விட்டது.

*   *   *

காலையில் குழந்தை விழித்து எழுந்திருக்கும் சமயத்தில் இன்ஸ்பெக்டர் அதன் அருகில் சென்றார். சாதாரணமாக எல்லோரிடமும் கடுமையாகப் பேசி வழக்கமுள்ள இன்ஸ்பெக்டர் அந்தக் குழந்தையினிடத்தில் மிகவும் சிரமப் பட்டுக் கடுமையான தொனியை வரவழைத்துக் கொள்ள வேண்டியிருந்தது. குழந்தையிடம் கடுமையாகப் பேசுவதற்கு அவர் பெருமுயற்சி செய்ய வேண்டியிருந்தது.

திடீரென்று, ''உன் பெயர் எல்பிரெட் ஷினீடர் அல்லவா! உன் வீடு எங்கே இருக்கிறது!'' என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

''26-ம் நெம்பர், மூல்காஸ் தெரு'' என்று குழந்தை இன்ஸ்பெக்டருக்குப் பளிச்சென்று பதில் அளித்தான்.

தமது யுக்தி பலித்து விட்டதைக் கண்டு இன்ஸ்பெக்டருக்கு மகிழ்ச்சி உண்டாயிற்று.

''பேஷ், உன் அப்பாவும் அம்மாவும் அங்குதானே இருக்கிறார்கள்!'' என்று மேலும் கேட்டார்.

இப்போது குழந்தைக்கு நன்றாகத் தூக்கம் கலைந்து விட்டது.

''எனக்கு அம்மா, அப்பா இல்லை. அவர்கள் எங்கு சென்றார்கள் என்பது எனக்குத் தெரியாது. அவர் மாத்திரம் அங்கே இருக்கிறார்'' என்றான் குழந்தை.

''யார் அங்கே இருக்கிறார்!''

''பிரான்ஸ் ஷினீடர்!''

''அவர் உன் தகப்பனார் அல்லவா!''

"ஆமாம்...இல்லே. அவர் என் அப்பா இல்லே" என்று கூறிவிட்டுக் குழந்தை மறுபடியும் அழத் தொடங்கினாள்.

"மூல்கான்ஸ் தெரு, 26-ம் நெம்பர் வீட்டைப் போய்ப் பார்த்து வரட்டுமா?"

இவ்விதம் அங்கிருந்த போலீஸ்காரர்களில் ஒருவர் இன்ஸ்பெக்டரைக் கேட்டார். முதல் நாள் நடுநிசிக்குக் குழந்தையை அழைத்து வந்தவர் அவர்தான்.

"அந்தத் தெருவுக்கு யாரும் போக வேண்டிய அவசியமில்லே. இது போன்ற 'கேஸ்'களில் என்ன நடக்கும் என்பது எனக்குத் தெரியும். இப்போது மணி ஏழு ஆகிறது அல்லவா! இந்தக் குழந்தையின் தகப்பனார் இங்கு வந்து விடுவார்...அதோ பார். அவர்தான் போலிருக்கிறது."

இவ்விதம் இன்ஸ்பெக்டர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே போலீஸ் ஸ்டேஷனுக்கு வெளியே பேச்சுக் குரல் கேட்டது. கதவு திறக்கப் பட்டதும் ஒரு மனிதர் உள்ளே அதி வேகமாகப் பாய்ந்து வந்தார். சோர்ந்து கிடந்த அவரது முகம் அங்கு நின்று கொண்டிருந்த குழந்தையைக் கண்டதும் மலர்ந்து பிரகாசம் அடைந்தது.

"எல்பி" என்று அழைத்த வண்ணம் அவர் அக் குழந்தையை வாரி அணைத்துக் கொண்டார். குழந்தை அவரை இறுகக் கட்டிக்கொண்டு தேம்பித் தேம்பி அழுதாள். அவர் கண்களிலும் நீர் ததும்பி வழிந்தது.

அருகில் நின்று கொண்டிருந்த போலீஸ் அதிகாரிகளையும் மேற்படி காட்சி உருக்கிவிட்டது. கண்ணில் நீர் ததும்பாமல் தடுத்துக் கொள்ள அவர்கள் படாத பாடுபட்டனர்.

தமது பலவீனத்தை மறைத்துக் கொள்வதற்காக இன்ஸ்பெக்டர், "இந்தக் குழந்தைக்கு எவ்வளவு பிடிவாதம் பாருங்கள். தன் தாய், தந்தையின் பெயரைச் சொல்லக் கூட இவள் மறந்து விட்டாள்" என்றுகோபத்தை வரவழைத்துக் கொள்ள முயற்சித்தார்.

"அவளுக்கு அது தெரியாதுதான்" என்றார் பிரான்ஸ் ஷினீடர் இன்ஸ்பெக்டரிடம். அவரது குரல் கம்மியது.

* * *

குழந்தையை அணைத்த வண்ணம் பிரான்ஸ் ஷினீடர் இன்ஸ்பெக்டரிடம் தமது கதையை விவரமாகச் சொல்லத் தொடங்கினார்:

"1944-ம் வருஷம் நான் இராணுவத்தில் சிப்பாயாக இருந்தேன். கர்ப்பிணியான என் மனைவியை விட்டுச் சென்ற பின் எனக்குப் பெண் குழந்தை பிறந்த செய்தி கிடைத்தது. குழந்தை பிறந்த சில மாதங்களுக்குப் பிறகு நான் லீவு எடுத்துக் கொண்டு குழந்தையைப் பார்க்க வந்தேன். சில மணி நேரம்தான் நான் என் குழந்தையைக் கொஞ்சிக் கொண்டிருக்க முடிந்தது. அதற்கு மேல் எனக்கு அவகாசம் இல்லாததால் நான் மறுபடியும் போர் முனைக்குச் சென்று விட்டேன்.

"யுத்த காலத்தில் ஐரோப்பா முழுதும் அல்லோல கல்லோலப் பட்ட போது லட்சக் கணக்கானவர்கள் இடம் பெயர்ந்து சென்றனர். உற்றார் உறவினர் சிதறி ஒருவரை யொருவர் பிரிந்து செல்ல நேர்ந்தது.

"யுத்தக் கைதியாக இருந்த நான் யுத்தம் முடிந்து விடுதலை அடைந்தேன். உடனே என் மனைவியையும் குழந்தையையும் தேடுவதற்குப் புறப்பட்டேன். எனது முயற்சி பலனைக் கொடுக்க வில்லை. கடைசியில் இந்த ஊருக்கு வந்து ஒரு வேலையில் அமர்ந்தேன். பிறகு என் மனைவியையும் குழந்தையையும் கண்டுபிடிப்பதற்காகப் பல இடங்களுக்குக் கடிதங்கள் எழுதத் தொடங்கினேன்.

"ஒரு நாள் என் வாழ்க்கையிலேயே மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கக் கூடிய ஒரு தகவல் எனக்குக் கிடைத்தது. 'எல்பிரெட் ஷினீடர் என்ற அநாதைக் குழந்தை ஒரு ரயில்வே ஸ்டேஷனில் கண்டு பிடிக்கப் பட்டிருக்கிறது' என்பதுதான் அந்தத் தகவல்.

"உடனே நான் அந்த ஸ்டேஷனுக்கு விரைந்து சென்றேன். இந்தக் குழந்தையை அழைத்து வந்தேன். எல்பிரெட் ஷினீடர் என்ற பெயர் தெளிவாகத் தெரியும்போது அவ்விஷயத்தில் எனக்குச்



சந்தேகம் எதுவும் ஏற்படுவதற்குச் சிறிதும் இடமில்லை அல்லவா!

'அம்மா எங்கே!' என்று கேட்டேன்.

'அம்மாவுக்கு ஜுரம், எங்கேயோ போய் விட்டாள்' என்று மாத்திரமே குழந்தை சொன்னான்.

விவரமான கேள்விகளுக்கெல்லாம் பதில் அளிக்கக்கூடிய நிலைமையில் குழந்தை இல்லை.

"குழந்தையாவது திரும்பக் கிடைத்தானே என்ற சந்தோஷத்தில் நான் மேற்கொண்டு எதுவும் விசாரிக்க விரும்பவில்லை. சென்ற இரண்டு மூன்று வருஷங்களாக இந்தக் குழந்தை தான் எனக்கு உயிராக இருந்து வந்தான்.

"நேற்று இவனது ஆறாவது பிறந்த தினம். இதைக் கொண்டாடுவதற்காக இவனுக்குப் பொம்மைகள் வாங்கிக் கொடுத்தேன். புஷ்பங்களால் மேஜையை அலங்காரம் செய்திருந்தேன். இன்னும் என்னவெல்லாமோ விளையாட்டுச் சாமான்கள் வாங்கிக் கொடுத்தேன். கண்ணைத் திறந்து திறந்து மூடும் பொம்மை வேண்டும் என்று இவன் மிகவும் ஆசைப்பட்டான். அதுவும் வாங்கிக் கொடுத்தேன்.

"இரவு நாங்கள் இருவரும் சாப்பிட உட்கார்ந்த பொழுது, வாசற் கதவை யாரோ தட்டும் சப்தம் கேட்டது. எல்சி போய்க் கதவைத் திறந்தாள். வாசற்படியில் யாரோ ஒரு பெண்மணி ஒரு பெண் குழந்தையுடன் உயிரற்ற சிலை போல் நின்று கொண்டிருந்தாள்.

"என்னைக் கண்டதும், அவள் ஓடிவந்து என்னை இறுகத் தழுவிக் கொண்டு கதறினாள்.

"'மேரி, மேரி', நீயும் குழந்தையும் உயிருடன் வந்து சேர்ந்தீர்களே. எல்லாம் ஆண்டவன் கிருபைதான்" என்று விம்மினேன்.

"என் மனைவியும் என் குழந்தையும் என்னை இறுகத் தழுவிக் கொண்டதைக் கண்டு இந்தக் குழந்தை வாசற்படியிலேயே நின்று விட்டான். "'தாங்கள் நம் குழந்தையின் பிறந்த தினத்தைக்கூட மறக்காமல் இவ்வளவு ஏற்பாடு செய்திருக்கிறீர்களே' என்று என் மனைவி ஆனந்தக் கண்ணீர் சொரியக் கேட்டாள். 'எல்சி, இதெல்லாம் உனக்காகத்தான் உன் அப்பா வாங்கி வைத்திருக்கிறார்' என்றாள் தன் குழந்தையிடம்.

"அந்தக் காட்சியை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த இந்தக் குழந்தை உண்மை நிலையை ஒருவாறு உணர்ந்து கொண்டிருக்க வேண்டும். இவனுடைய தந்தை நான் அல்ல என்று இவன் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். என் குழந்தைக்கும் இவனுக்கும் ஒரே வயதாக இருப்பதால் நேற்று வரையில் இவனை நான் என் சொந்தக் குழந்தை என்றே எண்ணியிருந்தேன்.

"பல வருஷங்களாகப் பிரிந்திருந்த காரணத்தால் நாங்கள் வெகுநேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுத் தூங்கி விட்டோம். இந்தக் குழந்தை தனக்கு இனி என் வீட்டில் இடமில்லை என்று நினைத்தானோ என்னவோ, ஒருவருக்கும் தெரியாமல் மெதுவாகக் கதவைத் திறந்துகொண்டு சென்று விட்டான். காலையில் குழந்தையைக் காணாமல் திடுக்கிட்டு, போலீஸ் ஸ்டேஷனுக்குத் தெரிவிக்கலாம் என்ற உத்தேசத்துடன் இங்கு வந்தேன்."

இவ்வாறு இன்ஸ்பெக்டரிடம் தன் கதையைக் கூறி முடித்த பிரான்ஸ் விலிடர் தன்னை அணைத்துக் கொண்டிருந்த குழந்தையை முத்தமிட்டு, "எல்சி, நாம் வீட்டுக்குப் போகலாம், வா. உனக்காக உன் தாயாரும் தங்கையும் காத்துக் கொண்டிருப்பார்கள்" என்றார்.

இந்தக் காட்சியைக் கண்டு இன்ஸ்பெக்டரின் கல்நெஞ்சம் கூடக் கரைந்து விட்டது.

"விலிடர்! நீங்கள் மிகவும் உயர்ந்த மனிதர்" என்றார் இன்ஸ்பெக்டர் தழுதழுத்த குரலில்.

இரும்பு நெஞ்சத்தையும் கல்லாகச் செய்யும் காட்சிகள் தினசரி நடைபெறும் போலீஸ் ஸ்டேஷனில், அன்று நிகழ்ந்த காட்சி இன்ஸ்பெக்டரை உணர்ச்சி வசமாகும்படி செய்து விட்டது.

காரணம் என்ன?

கோமதி விலாஸ் ஹோட்டலில் அன்று கூட்டமே யில்லை. மத்தியான வெய்யிலின் கொடுமையைப் பொறுக்க முடியாமல் 'உஸ்' 'உஸ்' என்று பொறுமிக் கொண்டிருந்தார் முதலாளி ராமநாதய்யர். சர்வரும், கிளீனரும் நின்றபடியே கண் அயர்ந்து கொண்டிருந்தனர்.

சரியாக ஒரு மணி யடித்ததும் 'டக்' 'டக்' என்று செருப்பு சப்திக்க ஹோட்டலில் நுழைந்தான் விகுவம்.

அத்தி பூத்தாற்போல் ஒருவராவது தமது ஹோட்டலில் டிபன் சாப்பிட வந்தாரே என்கிற சந்தோஷத்தில், "இந்தாப்பா! அவருக்கு என்னவேண்டும் என்று விசாரித்துக் கொடு!" என்று சிரத்தையுடன் கூறினார் ராமநாதய்யர். முதலாளியின் ஆணையைச் சிரமேற்கொண்டு சர்வர் வந்தவரை உபசரிக்க விரைந்தான்.

கடும் வெய்யிலின் உபத்திரவத்தினால் வழியும் வியர்வையைத் துடைத்துக் கொண்டே ஒரு ஆசனத்தில் அமர்ந்தான் விகுவம். சர்வர் மின்சார விசிறியைச் சுழல விட்டு விட்டு அவனருகில் வந்து நின்று, "ஸார்! உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டான்.

விகுவம் அவனைத் திரும்பிப் பார்க்காமலே மௌனமாய் உட்கார்ந்து கொண்டிருந்தான். மறுபடியும் சர்வர், "ஸார்! தோசை, பூரி, வடை சூடா யிருக்கிறது. கொண்டு வரட்டுமா?" என்று வினவினான்.

"ஒன்றும் வேண்டாம். எனக்குப் பசியில்லை!" என்று பதிலளித்தான் விகுவம்.

சர்வர் விகுவத்தின் பதிலைக் கேட்டுத் திகைத்துப் போய், "ஆமாம்! அப்படியானால் தாங்கள் இங்கே எதற்காக உட்கார்ந்திருக்கிறீர்கள்?" என்று பவ்யமாகத் தாழ்ந்த குரலில் வினவினான்.

"எனக்கு இப்பொழுது டிபன் வேலை. அரை மணி நேரம் காரியாலயத்தில் ஓய்வு கொடுத்திருக்கிறார்கள். அதனால்தான்..." என்று கூறிவிட்டு விகுவம் சட்டென்று எழுந்திருந்து ஹோட்டலிலிருந்து நடையைக் கட்டினான். அவன் போகும் திசையையே வியப்புடன் நோக்கினர் ஹோட்டல் சிப்பந்திகள் அனைவரும். பி. என்.

நாளுக்கு நாள் அதிக தெளிவானதும் அழகானதுமான சருமம்



ரெக்ஸோனுவிலி
ருக்கும் 'கேடில்'
உங்கள் சருமத்திற்கு
புது ஆரோக்கியமும்
எழிலும் தரும்.



ரெக்ஸோனு


'கேடில்'* கலந்த சோப்
இது ஒன்றே


* சருமத்தை மிருதுவாக்கும் எண்ணெய்களின் பிரத்தியேகக் கலவையின் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட பெயர் இது.


ரெக்ஸோனு ப்ரொப்ரைடரி லிட்., க்காக இந்தியாவில் தயாரிக்கப்பட்டது. R.P. 53-50 TM











Rs. 15 only



12. கோவிந்தனின் சந்தேகம்

வள்ளி அந்தக் கிழவனோடு பேசும்போது தன்னை அனுமதிக்க மாட்டாளென்று மாதவிக்குத் தெரியும். அந்தச் சமயம் வள்ளியின் வார்த்தைகளை மீறி எதையும் செய்ய மாதவி உத்தேசிக்கவில்லை. ஆனால் தலைமறைவாக நின்று அவர்கள் பேசுவதைக் கவனிக்கலாமல்லவா!

அந்தக் கட்டிடத்தின் வாசற்புறம் இருந்த அறையில் வள்ளி நுழைந்தாள். அங்குதான் பெத்தண்ணன் வள்ளியைப் பார்ப்பதற்காக வந்து காத்திருந்தான். பல வருடங்களுக்கு முன் பார்த்த அவனுடைய உருவத்தில் இப்பொழுது எவ்வளவோ மாறுதல் ஏற்பட்டிருப்பதை வள்ளி உணர்ந்தாள். வள்ளி அந்த வீட்டின் எஜமானியைப் போல்தான் அப்பொழுது அவன் கண்களுக்குத் தென்பட்டாள். பெத்தண்ணனின் தலைமயிர் முழுவதும் நரைத்து வெளுப்படைந்திருந்தாலும் அவனது தேக ஆகிருதியில் அதிகத் தளர்ச்சி காணப்படவில்லை. வெகு நாட்களுக்கு முன் இருந்ததுபோல் அவன் கண்களில் ஒரு ஆண்மையும் தெளிவும் இருந்தன. அவன் வள்ளியை ஆர்வத்தோடு பார்த்துக் கொண்டே, "வள்ளி, சௌக்கியமா...! உன்னைப் பார்த்தால் இந்த வீட்டிலே நீ ரொம்பச் சந்தோஷமாகவும் சௌக்கியமாகவும் இருக்கிறாப் போலத்தான் தோணுது. நான் உன்னை நம்ப ஜனங்கள் இட்ட கட்டளைப்படி ஒரு விருந்துக்குக் கூப்பிட வந்திருக்கிறேன். ரொம்ப நாளைக்கப்புறம் பெரிய விருந்து ஒண்ணு இப்போதான் ஏற்பட்டிருக்கிறது. நம்ப ஜனங்களெல்லோரும் இப்போதான் ஒன்று கூடுவாங்க...உன் குழந்தை நம்ப ராணி, வயசானவளானதற்கு அடையாளமாக இந்த விருந்து நடக்கப் போகுது. அதோடு அவள் கலியாணத்துக்குச் செய்யும் பரிசச் சடங்கையும் நடத்தி விடலாம் என்று உத்தேசம். உனக்குத்தான் தெரியுமே, நம்ம ஜாதி ஆசாரம்! இதைக் கேட்க உனக்குச் சந்தோஷமாய்த்தானிருக்கும். நீ எங்கிட்டே குழந்தையாய் இருக்கும்போதே விட்டு விட்டுப்போன உன் பெண்ணு இப்போ எப்படி இருக்காண்ணு பார்க்க உனக்கும் ஆசை இருக்காதா! நீ எங்களுக்கு ஒரு ராணியைப் பெற்றுக் கொடுத்ததை நாங்கள் மறக்க முடியாது. இந்த மரியாதையை நாங்கள் உனக்குச் செய்தாகணும். நீ அந்தக் குழந்தையைப் பெற்ற தாயல்லவா...!" என்று சொல்லி நிறுத்தினான்.

இதைக் கேட்டதும் வள்ளியின் மனசில் ஒரு அலுப்பும் வெறுப்பும் ஏற்பட்டன. அவள் மனம் பொறுமியபடி உதட்டைக் கடித்துக் கொண்டாள். பல வருடங்களுக்கு முன்னால் நாடோடிகளிடம் ஒப்படைத்து விட்டு வந்த குழந்தையைப் பற்றி அவள் மறந்து விடவில்லை. ஆனால் அந்தக் குழந்தையைப் பற்றிய கவலையே அவளுக்கு இல்லை. அந்தக் குழந்தையை மறுபடியும் பார்க்க வேண்டுமென்ற ஆசையும் அவளுக்கு எழுந்ததில்லை. அவளுக்குத் தெரியும்! ஆம், அது அவளுக்கு மாத்திரம் தான் தெரியும்! அந்தக் குழந்தை அவளுடையதா! அவளுடைய சொந்தக் குழந்தை. அவள் தன் வயிற்றில் பத்து மாதம் சுமந்து பெற்ற குழந்தை, அவளுடைய ரத்தத்திலே ஊறிய குழந்தை, அவளுடைய நிழலிலேயே சந்தோஷமாகவும் சௌக்யமாகவும் வளர்ந்து இன்று பதினேழு வயது நிறைந்த யுவதியாகக் காட்சியளிக்கிறாள். ஆனால் அவள் பெற்ற குழந்தைக்கு அவள் தாய் என்று சொல்லிக் கொள்ளக்கூடிய உரிமை மாத்திரம் தான் இல்லை. தாயென்னும் வாஞ்சையோடும் பரிவோடும் அதை வளர்த்திருந்தாலும் இன்று அவளை அந்தக் குழந்தைக்குத் தாதி என்று தான் உலகம் அழைக்கிறது. எங்கோ ஒரு மரத்தடியில் அனாதையாகப் பிறந்த அவளுடைய குழந்தை இன்று ஒரு பணக்காரரின் ஒரே வாரிசாக அருமையோடு வளருகிறது. இதைவிட



அவனுடைய தாய் உள்ளத்திற்குச் சந்தோஷமும் நிம்மதியும் வேண்டுமா!

அவள் அந்தச் சமயம் பெத்தண்ணனுக்குத் தருந்தபடி பதில் சொல்லி அனுப்ப வார்த்தை களைத்தேடிக்கொண்டிருக்கவில்லை. இப்படிப்பட்ட சந்தர்ப்பம் வருமென்று அவளுக்குத் தெரியாது. வந்தால் என்ன சொல்ல வேண்டுமென்று அவளுக் குத் தெரியும். "நீங்களெல்லாம் என்னை இருதயமில் லாதவளாக நினைக்கட்டீங்க. ஆனால் இதை ஞாப கத்தில் வைத்துக் கொள்ளுங்க. அந்தக் குழந்தை என் வயிற்றிலிருக்கும் போதே என்னைவிட அதைத் தான் பெரிதாக நினைத்தீங்க. தாயில்லாமல் குழந்தை வந்துவிடாது என்கிறதை நீங்கள் யோசிக் கவே இல்லை. என்னைவிட உங்களுக்கு அந்தக் குழந்தையிடம் அதிக உரிமை ஏற்பட்டுப் போச்சு. அந்தக் குழந்தை உங்கள் ராணி என்பதுதான் உங் களுக்குப் பெரிதாகப் பட்டது. நான் அதைப் பெற்ற தாய் என்பதை நீங்கள் லட்சியம் செய் யவே இல்லை. அதை நான் பத்து மாதம் சுமந்து பெற்ற குழந்தையாய் மதிக்காமல் உங்கள் கையில் கொடுத்து விட்டு வந்து விட்டேன். அதைப் பற்றி நான் கவலைப்படவேயில்லை. இப்பொழுது நீங்கள் என்னிடம் வந்து அதை யெல்லாம் என் ஞாபகப்படுத்தனும்! இப்போது நீங்கள் அந்தக் குழந்தையிடம் தாயாருக்குள்ள உரிமையெல்லாம் உண்டு என்று சொன் னால் அவளை உங்களோடு விட்டு வைக்கா மல் என்னோடு அழைத்துக்கொண்டு வந்து விடலாமா!" என்று ஆவேசம் வந்தவள் போல் கேட்டாள்.

"அது எப்படி முடியும்! அவள் உன்னுடைய புருஷன் மல்லய்ய னுடைய ரத்த சம்பந்தம்; ராஜ குலத்தைச் சேர்ந்தவள். அவள் அந்த உரிமையை விட்டு வர முடி யாது. நாங்களும் அவளை அனு மதிக்க மாட்டோம். ஆனால் அவ ளுக்கு நீ தாய் என்கிற உரிமையை நான் மறுக்கவில்லை."

"சரி! அப்படியா! அப்படியானால் அந்தக் குழந்தை உங்களுடையது. எனக்கு எவ் வித சம்பந்தமும் இல்லை. பதினேழு வருட காலம் அந்தக் குழந்தையை மறந்திருந்த எனக்கு இப்பொழுது அதனால் புதிதாக என்ன லாபம் வந்து விடப் போகிறது! நான் நீங்கள் வைக்கும் பரிச விருந்துக்கு வரத் தயாராக இல்லை. அங்கு வந்து அவளை என் குழந்தையென்று சொல்லிக் கொள்ளவும் தயாராயில்லை" என்றாள் வள்ளி கண்டிப்பான குரலில்.

"ஹ்ம்! வள்ளி, இது தான் உன்னு டைய கடைசி முடிவா!" என்று பகட் டான் பெத்தண்ணன்.

"ஆமாம்" என்றாள் வள்ளி.

பெத்தண்ணன் ஒரு பெருமூச்சு விட் டான். "மற்றவர்களெல்லாம் உன்னை விருந்துக்குக் கூப்பிடச் சொன்னதாலே தான் வந்தேன். நீ இந்த வீட்டில்தான் வேலைக்கு இருப்பாய் என்று எனக்குத் தெரியும். ஏனென்றால் மல்லய்யன் உன்னை இங்கேயிருந்து தானே அழைச்சுக் கிட்டு வந்து கல்யாணம் செய்து கொண்டான்! நானும் விசாரித்துத் தெரிஞ்சுக்கிட்டு வந் தேன். நீ மறுபடியும் எங்களோடெல்லாம் வந்து கலந்துக்கணும் என்று நான் வற் புறுத்தவில்லை. உன் மகளுக்காக நடத்தப் போகிற பரிச விருந்திலே நீ கலந்து கொள்ளா விட்டால் எல்லோரும் நகைப்பாங்க!" என்றான் பெத்தண்ணன்.

"அதனால் பாதகமில்லை. பதினேழு வருஷம் ஒரு குழந்தையை மறந்து விட்டு இப்பொழுது வந்து கொண்டாடுவது தான் ரொம்பப் பரிகாசத்துக்கு இடமாகும். என் மகளுக்காக நடத்துகிற விருந் துன்னு சொல்லாதீங்க. உங்க ராணிக்காக நடத்து கிற விருந்துன்னு சொல்லுங்க" என்றாள் வள்ளி.

"ஆமாம், எங்கள் ராணி. எங்கள் ராணி தான் அவள். ஒருவேளை எந்தத் தாய் அநாதையாக விட்டு விட்டுப் போய் இன்னொரு அன்னியக் குழந் தையை எடுத்து வளர்த்தாளோ, அந்தத் தாயைப் பதினேழு வருஷங்களுக்குப் பின்னாலே பார்க்கிற கொண்டாட்டமாகவும் இருக்கக் கூடாதா இது! அதைக் கொண்டாடத்தான் உன்னைக் கூப்பிட் டோம் என்று நினைத்துக் கொள்ளக் கூடாதா நீ!" என்றான் பெத்தண்ணன்.

"எனக்காக அந்தக் கொண்டாட்டம் வேண் டாம். உங்களுக்காகவே இருக்கட்டும். ஒரு தாயை விட்டுப் பிரித்து ஒரு குழந்தையைப் பதினேழு

வருடம் வளர்த்து விட்டோம் என்ற பெருமைக்காக வைக்கும் ஒரு விருந்தாகவே அது இருக்கட்டும். நான் இந்த வீட்டை விட்டு ஒரு நிமிஷம் கூட வெளியே வரப் பிரியப்படவில்லை" என்றாள் வள்ளி.

பெத்தண்ணனின் முகத்தில் வருத்தக் குறி தோன்றியது. அவனுக்கு வள்ளியிடம் இத்தனை நாளும் ஏற்படாத வெறுப்பு ஏற்பட்டது. அவன் அவளுக்கு எவ்விதமான பதிலும் சொல்லாமல் தலை குனிந்த வண்ணம் வெளியே சென்றான். வள்ளி தனக்குப் பிறந்த குழந்தை பெருமையோடு இருப்பதைக் கண்டு பொறாமைப் படுகிறாள் என்று அவன் முடிவு கட்டினான். அந்தக் குழந்தை தன் தகப்பன் வழி முறையில் ராணி ஆக்கப்பட்டிருப்பதே அவளது பொறாமைக்குக் காரணம் என்று அவன் எண்ணினான். தகப்பனை விடத் தாய்க்குத்தான் அதிக கௌரவம் கொடுக்க வேண்டுமென்று "அவள் விரும்புகிறாள் என்றும் அவன் நினைத்தான்.



பெத்தண்ணன் அந்த அறையை விட்டுச் சென்றதும் வள்ளியின் எதிரில் மாதவி வந்து நின்றது அவளுக்கு வியப்பை உண்டாக்கியது. மாதவி முகத்தில் பரபரப்புத்தோன்ற வள்ளியைப் பார்த்தாள். அவள் மெதுவாக வள்ளியின் தோளைப் பிடித்து உலுக்கிக் கொண்டே, "வள்ளி! இது நிஜந்தானா! நீ தானா அந்த ராணியின் தாயார்!" என்றாள் ஆச்சர்யத்தோடு.

"நாங்கள் பேசிக்கொண்டிருந்ததை யெல்லாம் நீ கேட்டாயா!" என்றாள் வள்ளி திகிலுடன்.

"ஆமாம், கேட்டேன். அதனால் என்ன! எனக்கு இந்த நாடோடிகளைப் பற்றியெல்லாம் தெரிந்து கொள்ளணும் என்று எவ்வளவு ஆசை இருக்கிறதென்று உனக்குத் தெரியாதா! அவன் சொன்ன ஒவ்வொரு வார்த்தையையும் கேட்டேன். உண்மையாக நீதான் அந்த ராணிக்குத் தாயாரா! இதை ஏன் நீ என்னிடம் சொல்லவே இல்லை! எல்லாம் எனக்குத் தெரிந்து விட்டது. பரிசு விருந்துக்காக அவன் உன்னைக் கூப்பிட வந்தான். என்ன, அப்படித்தானே!"

வள்ளி அலுப்பும் வெறுப்பும் அடைந்தவளாக, "அவன் எதற்காக என்னைக் கூப்பிட வந்தால் உனக்கென்ன, மாதவி! உன் காரியத்தைக் கவனித்துக் கொண்டு போ!" என்றாள்.

மாதவி வள்ளியின் மிரட்டலுக்குப் பயப்படவில்லை. "அந்தக் கிழவன் உன்னிடம் சொல்லிய வார்த்தைகளை எல்லாம் கவனமாகக் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். இத்தனை வருஷமாக உன் மகளை விட்டுவிட்டு என்னை உன் குழந்தை போல் எடுத்து வளர்த்திருக்கிறாய்! உன் மனது இதந்த எப்படி இடம் கொடுத்தது!" என்று கேட்டாள் மாதவி, அவள் முகத்தை வியப்போடு பார்த்துக் கொண்டே.

"நான் அந்தக் குழந்தையை விட்டுவிட்டு வந்ததற்குக் காரணம், நான் அவனுக்கு அவசியமில்லை என்பதால்தான். நான் இல்லாமலேயே அவன் பதினேழு வருடம் வளர்த்து விட்டானே! ஒரு தாய்க்குள்ள உரிமை அந்தக் குழந்தையிடம் எனக்கில்லை. முக்கியமாக நான் இங்கு வந்ததற்குக் காரணம் உன்னை வளர்க்க ஒரு தாயில்லையே என்பதினால் தான். நான் ஒரு தாதியாக இருந்தாலும் ஒரு தாய்க்குள்ள உரிமை அவ்வளவையும் இங்கு பாராட்டிக் கொள்ள முடிந்தது. என்னுடைய ஆசை உன்னை எடுத்து வளர்ப்பதிலாவது தீரட்டும் என்றுதான் இங்கு வந்தேன்" என்றாள்.

மாதவியின் முகத்தில் சட்டென்று ஒரு இரக்கக் குறி தோன்றியது. "வள்ளி! நீ உன் பெண்ணைப் போய்ப் பார்ப்பதுதான் நல்லது. அதுதான் எனக்கு சந்தோஷம். பாவம்! அவள் உன்னைப்பற்றி என்ன நினைத்துக் கொள்வாள்! அவள் என்னைப் பற்றியும் தவறாக நினைத்துக் கொள்வாள். என்னால்தான் நீ அவளை அலட்சியம் செய்வதாக நினைப்பாள். நான் உன்னை நிறுத்தி விட்டதாக அல்லவா அவளுக்குத் தோன்றும்! வள்ளி! பைத்தியக்காரத்தனமாய் அந்த விருந்துக்குப் போகாமல் இருக்காதே. உன்னுடைய பெண்ணுக்காக ஆபுனிலேயே செய்யப்படும் முக்கியமான சடங்கில் சொந்தத் தாயாகிய நீ இல்லாவிட்டால் நன்றாக இருக்காது!" என்றாள்.

"அது சரிதான். ஆனால் அவளை என் பெண் என்று என்னால் நினைக்க முடியவில்லையே! அவள் இவ்வளவு நாளும் அவர்களிடையே வளர்ந்தவள். திடீரென்று இன்று நான் அங்கு போவதினால் அவளுக்குத் திடீரென்று தாய் என்னும் உணர்ச்சி ஏற்பட்டு விடாது. நானும் அந்தக் கூட்டத்தினரிடம் நெருங்குவதில்லை என்று நிர்மாணம் செய்து கொண்டிருக்கிறேன்."

"அப்படிச் சொல்லிவிடாதே, வள்ளி! இன்று ராத்திரி ஏரிக் கரையில் ஓரே பாட்டும் கூத்தும்

விருந்தமாயிருக்கும். நீ நிச்சயம் போய்த்தான் ஆகவேண்டும். நானும் உன்னோடு வருகிறேன்!" என்றாள் மாதவி, இருதயத் துடிப்போடு.

"கூடாது மாதவி, கூடாது!" என்றாள் வள்ளி கண்டிப்பான குரலில்.

"இல்லை, இல்லை! நீ போய்த்தானாகவேண்டும். நானும் உன்னோடு அவசியம் வருவேன்!" என்றாள் பிடிவாதமாக மாதவி.

வள்ளி ஒரு பெருமூச்சு விட்டாள். "வீண் பிடிவாதம் செய்யாதே, மாதவி! அந்த இடத்துக் கெல்லாம் நீ போவது தவறு. நானும் போக மாட்டேன். அது எனக்கும் வெறுப்பாய் இருக்கிறது. நானும் உனக்கு எத்தனை தடவைதான் சொல்ல முடியும்! இத்தமாதிரி அசட்டு ஆசையை யெல்லாம் விட்டுவிடு!" என்றாள் வள்ளி.

"வள்ளி! எனக்கென்னமோ அவர்கள் இந்தச் சடங்கை யெல்லாம் எப்படிக் கொண்டாடுகிறார்கள் என்று பார்க்க வேண்டுமென்று மிகவும் ஆசையாய் இருக்கிறது!" என்று அவளுக்குச் சமீபமாக உட்கார்ந்து கெஞ்சுவது போல் அவள் முகத்தையே பார்த்தாள் மாதவி. பிறகு, "வள்ளி! என்னை நீ அங்கே அழைத்துக் கொண்டு போகவே மாட்டாயா! நான் அங்கே வந்தால் ஒழுங்காக இருப்பேன். உன்னை விட்டுப் பிரிய மாட்டேன். உன் பக்கத்திலேயே இருந்து எல்லாவற்றையும் பார்க்கிறேன். எனக்கு ஒரே ஒரு ஆசைதான். அவர்கள் நீ சொல்லியபடி இருக்கிறார்களா என்று நேரில் ஒரு தடவை பார்த்து விட்டால் போதும். நான் அவர்கள் மத்தியில் கொஞ்ச நேரமாவது இருந்து அவர்களுடைய விநோதமான போக்கைப் பார்க்க விரும்புகிறேன். அப்புறம் அவர்களைப் பற்றியே நினைக்கமாட்டேன்" என்று கெஞ்சினாள்.

மாதவியின் வார்த்தை வள்ளியின் மனத்தைக் கலக்கவில்லை. அவளுடைய விபரீதமான ஆசையை எண்ணி அவள் பச்சாத்தாபப்பட்டாள். "முடியாது. என் மூச்சு உள்ள வரையில் என் கண் எதிரே உன்னை அந்த ஜனங்களிடம் நெருங்க விட மாட்டேன்! நான் அவர்களை ஒதுக்கிவிட்டு வந்து விட்டேன்! என் வார்த்தையை மீறி நீ அவர்களிடம் ஏதாவது பழக்கம் வைத்துக் கொண்டால் கட்டாயம் உன் தாத்தாவிடம் சொல்லி உன்னை ஒரு அறையில் தள்ளிப் பூட்டி வைத்துவிடச் சொல்லுவேன்!" என்றாள் கோபத்தோடு.

மாதவி இதற்கு மேல் அவளோடு தர்க்கம் செய்ய இஷ்டப்படவில்லை. வள்ளியின் கண்டிப்புக்குப் பயந்து நடக்கிறவள்போல், "போதும், வள்ளி! நீ எடுத்ததற்கெல்லாம் தாத்தாவிடம் சொல்லி விடுவேன் என்று பயமுறுத்துகிறாயே! நான் இனிமேல் அதைப் பற்றியே பேசவில்லை. நீயும் தாத்தாவிடம் சொல்ல வேண்டாம்" என்று கூறியவாறு அந்த இடத்தை விட்டுச் சென்றாள்.

தன்னுடைய கண்டிப்பான வார்த்தைகளுக்கு மாதவி பயந்து விட்டாள் என்று நினைத்தாள் வள்ளி. இதனால் அவள் மனத்திற்குச் சிறிது ஆறுதலும் சமாதானமும் ஏற்பட்டன. ஆனால் அப்பொழுது அவள் மனத்தில் ஒரு எண்ணம் தோன்றியது. மாதவிக்குக் கல்யாணம் செய்ய வேண்டிய பருவம் நெருங்கி விட்டது. அவளுக்குச் சீக்கிரம் கல்யாணம் செய்து விட்டால் இப்படி நிலையில்லாமல் பல விஷயங்களில் சென்று திரியும் மனத்தைக் கட்டுப்படுத்தி விடலாம். இதைப் பற்றிப் பட்டக்காரரிடம் சொல்லிச் சீக்கிரத்தில் ஒரு முடிவு செய்துவிட வேண்டும். மாதவியைக் கல்யாணம் செய்து கொள்ளக் கோவிந்தனும் ஆனந்தனும் தயாராய் இருக்கிறார்கள். அவர்கள் இருவரில் ஒருவருக்கு மாதவியைக் கல்யாணம் செய்து கொடுத்துவிட ஏற்பாடு செய்ய வேண்டியதுதான் என்று முடிவு செய்தாள்.

மாதவி மாடிக்குச் சென்று ஜன்னல் வழியாக ஏரிக்கரைப் பக்கம் பார்த்துக் கொண்டே நின்றாள். அந்த உயரமான மாடியிலிருந்து மரங்களின் இடையே ஏரிக்கரையிலுள்ள சிறு குடிசைகளெல்லாம் நன்கு தெரிந்தன. அப்பொழுது அவள் மனத்தில் ஸிங்காரத்தின் கட்டமைந்த உருவம் பதிந்தது. அப்பொழுது அவனும் அந்தக் குடிசைகளில் ஏதாவதொன்றில் இருப்பான். அவன்தானே அந்தக் கூட்டத்தினருள் அழகும் பலமும் பொருந்திய வாலிபன்! ஒருவேளை அவனைத்தான் அந்த ராணிக்கு ஏற்ற புருஷனாய்த் தேர்ந்தெடுத்திருப்பார்களோ என்ற எண்ணம் அவளுக்கு ஏற்பட்டது. அந்த எண்ணத்துடன் கூடவே அவளுக்குத் தங்கத்தின் மீது ஒரு பொறாமையும் ஏற்பட்டது.

'வள்ளி என்ன சொன்னாலும் நான் கேட்க மாட்டேன். அவளால் என்னைத் தடுக்க முடியாது. நான் இன்று இரவு அவளுக்குத் தெரியாமல் ஏரிக் கரைக்குப் போய் அங்கு என்ன நடக்கிறதென்று பார்க்கத்தான் போகிறேன்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள் மாதவி.

வள்ளி அன்றிரவு விருந்துக்கு வரமாட்டேன் என்று பிடிவாதமாகச் சொல்லிவிட்டது பெத்தண்ணன் மனத்திற்கு மிகவும் வருத்தத்தை அளித்தது. அவளைத் தங்கள் கூட்டத்திலிருந்து நழுவ விட்டதே பிசகென்று உணர்ந்தான். உண்மையில் தங்கள் சமூக நலத்தைப் பாதுகாக்க வேண்டுமென்றால் வள்ளியை வேறு ஒரு இடத்தில் வேலை செய்து பிழைக்கும்படி விட்டிருக்கக் கூடாது. அவளைச் சமாதானப் படுத்திப் பிடிவாதமாகத் தங்களோடு வைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்று நினைத்தான்.

அவள் தன் வயிற்றில் பிறந்த குழந்தையிடம் பாசமோ பரிவோ இல்லாமல் இருப்பது அவனுக்கு மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுத்தது. பொதுவாக



மனைவி :—அடுத்த வீட்டு லக்ஷ்மிக்கும் எனக்கும் மனஸ்தாபம். இப்போது எங்களுக்குள் பேச்சு வார்த்தையே கிடையாது!

கணவன் :—நல்ல காரியம் செய்தீர்கள்! இரண்டு பேரும் கொஞ்ச காலத்துக்காவது சிரமப் பரிகாரம் செய்து கொள்ளுங்கள்!

ஒரு தாய்க்குள்ள உணர்ச்சி மாத்திரமில்லை; வள்ளி தன் பெண்ணை நினைத்து விசேஷமான பெருமையும் கர்வமுமல்லவா அடைய வேண்டும்! அவளுடைய பெண் சாதாரணமானவளா! ராணியல்லவா! பெத்தண்ணனுக்கு வள்ளியின் வார்த்தைகள் பெரிய அவமானத்தையும், மரியாதைக் குறைவையும் ஏற்படுத்தியது போல் இருந்தன. அவன் தலை கிறக்கத்தோடு அந்த வீட்டை விட்டு வெளியே வந்தான். அவன் தோட்டத்து வெளி வாசற்படியை நெருங்கியபோது, அவனை யாரோ அதிகாரத் தொனியில், "ஏய்...!" என்று கூப்பிடுவது போலிருந்தது. அவன் திரும்பிப் பார்த்தபொழுது சிறிது தூரத்தில் ஒரு வாலிபன் நின்று கொண்டிருந்தான்.

அந்த வாலிபனைப் பார்த்ததுமே பெத்தண்ணன் அடையாளம் கண்டு கொண்டு விட்டான். அவன் கோவிந்தன். அவன் ஒரு தடவை அவர்கள் தங்கி இருந்த இடத்திற்கு வந்ததும் அங்கு சிங்காரத்திற்கும் அவனுக்கும் நடந்த சச்சரவுகளும் பெத்தண்ணனுக்கு நன்கு நினைவிலிருந்தன.

கோவிந்தனுக்குப் பெத்தண்ணனைப் போன்ற நாடோடி அந்த வீட்டிலிருந்து வெளியே வந்தது ஆச்சரியத்தை அளித்தது. ஏற்கனவேயே அவர்களிடம் ஆத்திரமும் கோபமும் கொண்டிருந்த கோவிந்தனுக்குப் பெத்தண்ணன் தனிச்சையாக அந்த வீட்டிற்குள் நுழைந்தது மிகுந்த கோபத்தை உண்டாக்கியது. அந்த வீட்டில் அவனைப்போன்றவன் காலடி வைக்க என்ன யோக்கியதை! "ஏய்! நீ எதற்காக இங்கே வந்தாய்! உனக்கென்ன இங்கே வேலை!" என்றான் அதிகாரத்துடன்.

பெத்தண்ணன் கோவிந்தனை நெருங்கிக் கர்வமும் மமதையும் கொண்ட முகத்தைப் பார்த்தான். "இங்கே வேலை செய்கிறாளே, வள்ளி! அவளைப் பார்க்க நான் வந்தேன்!" என்றான் அடக்கத்துடன்.

கோவிந்தனுக்கு இந்த வார்த்தை சிறிது சம்சயத்தை ஏற்படுத்தியது. வள்ளி ஒரு நாடோடிப் பெண்தான் என்பது கோவிந்தனுக்குத் தெரியும். அவள் சில நாட்களுக்கு முன்பே தன் கூட்டத்தினரை விட்டுப் பிரிந்து வந்து விட்டாள் என்பதும் அவனுக்குத் தெரியும். இந்தச் சமயத்தில் பெத்தண்ணன் அவளைப் பார்க்க வந்ததில் ஏதோ விசேஷம் இருக்க வேண்டுமென்று அவன் ஊகித்தான்.

"ஹும்! சரிதான். வள்ளி உங்களோடு சேர்ந்து ஏதா வது தந்திரம் செய்வாள் என்று நான் நினைக்கவில்லை! அவளிடம் ஏதேனும் பிச்சை கேட்க நீ வந்திருக்கலாம். இல்லாவிட்டால் அவள் உதவியோடு இந்த வீட்டிலிருந்து எதையாவது திருடிக் கொண்டு போக வந்திருக்கலாம்!" என்று ஏதேதோ சொல்லத் தொடங்கினான் கோவிந்தன்.

இதைக் கேட்டதும் பெத்தண்ணனுக்குச் சிறிது கோபம் வந்தது. இருப்பினும் அதை அடக்கிக் கொண்டு கௌரவமான முறையிலே, "அப்படிப்பட்ட காரியமெல்லாம் நாங்கள் செய்ய மாட்டோம், புண்ணியவானே! வள்ளியின் மகளுக்கு இன்று பரிச விருந்து வைக்கிறதாக உத்தேசித் திருக்கிறோம். அதற்காக அவளைக் கூப்பிட வந்தேன்" என்றான்.

"வள்ளியின் மகளா, அவள்!" என்றான் ஆச்சரியத்துடன் கோவிந்தன்.

"ஆமாம். அவளுடைய மகள்தான். பிறந்தவுடனேயே அதை எங்களிடம் விட்டு விட்டு இங்கே வந்துவிட்டாள்" என்றான் பெத்தண்ணன்.

"நான் வள்ளிக்கு ஒரு குழந்தை இருக்குமென்று இதுவரை நினைக்கவே இல்லை. இப்பொழுது நீ சொல்லவேதான் தெரிகிறது. ஹூம்! அந்தப் பெண்ணுக்கு இன்று பரிச விருந்தா! அது சரி! இப்படி நீங்க ஒவ்வொரு பெண்ணுக்கும் வயது வந்தவுடன் பரிச விருந்து வைக்கிறது வழக்கமோ!" என்று கேட்டான் எதையோ தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறவன்போல்.

பெத்தண்ணன் தலை ஆட்டினான். "எல்லாப் பெண்களுக்கும் செய்வதில்லை. வள்ளியின் மகள் எங்கள் ராணி. அதனால் பரிச விருந்தை விசேஷமாக நடத்த ஏற்பாடு செய்திருக்கிறோம். நீங்கள் கூட அந்தப் பெண்ணைப் பார்த்திருக்கிறீர்கள், துரையே!" என்றான் பெத்தண்ணன்.


பெத்தண்ணன் இப்படிச் சொன்னது தன்னுடைய வாழ்க்கையிலேயே ஒரு அவமானகரமான சந்தர்ப்பத்தைச் சுட்டிக் காட்டியது போலிருந்தது கோவிந்தனுக்கு. பாவம்! அன்று அந்தப் பெண்ணிடம் ஏதோ விளையாடப் போய்த்தானே சிங்காரத்திடம் படாத பாடு பட்டான்! அதை அவனால் எப்படி மறக்க முடியும்!

"ஓம்......! அவள்தான் வள்ளியின் மகளா! அந்தப் பெண் எவ்வளவு அழகாக இருக்கிறாள்!

இறுதி எச்சரிக்கை!



சுதந்திர இந்தியாவின் பிரஞ்சு ஆக்கிரமிப்புக்கு உட்பட்ட சிறிய பிரதேசங்களைப் பற்றி ஸ்ரீ பி. ஷிவராவ் ஐ. நா. சபையில் எச்சரித்தார். "பிரஞ்சு சர்க்கார் காலப்போக்கை உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும். இல்லாவிடில் வருவதை அனுபவிக்க வேண்டும்!" என்று சொன்னார்.



சாந்தி மிஷன் சங்கத்தின் ஆதரவில் ராணிப்பேட்டையைச் சுற்றியுள்ள கிராமங்களில் பஞ்ச நிவாரணத் தொண்டு செய்துவரும் ஊழியர்கள்.


(பஞ்சத்தில் அடிபட்ட ஏழை மக்களுக்குத் துணிமணிகள் உதவி செய்ய விரும்புபவர்கள் பின்வரும் விலாசத்துக்கு அனுப்பி வைக்கலாம். பிக்ஷு நிர்மலானந்தா, சாந்தி மிஷன் சொஸைட்டி, பழைய மாம்பலம், சென்னை-17.)

அவள் இவளுடைய மகள் என்பதை நம்பமுடிய வில்லையே! உண்மையில் வள்ளிக்கு அவள் மகளாக இருந்தால் இவள் பெருமைப்பட வேண்டியதுதான்!'' என்றான் கோவிந்தன்.

இந்த வார்த்தையைக் கேட்டதும் பெத்தண்ணன் அலுப்படைந்தவன்போல் தலையை ஆட்டிக் கொண்டே, ''ஊம்......! உண்மையாக வள்ளி எங்கள் இனத்தைச் சேர்ந்தவள்தானா என்பது எனக்கே சந்தேகமாகத்தான் இருக்கிறது. அவளுடைய மகள் ஒரு ராணி என்பதை எண்ணி அவளுக்குத் துளிக்கூடப் பெருமை இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அவள் பாசமெல்லாம் இங்கே அவள் வளர்க்கிற அன்னியப் பெண்ணிடம்தான் இருக்கிறது. அவளை அழைக்கத்தான் நான் இங்கே வந்தேன். அவள் வர இஷ்டமில்லை என்று சொல்லி விட்டாள். நான் போகிறேன். இனி இந்த வழியே வரமாட்டேன், துரையே!'' என்றான் பெத்தண்ணன்.

கோவிந்தன் அவனுக்கு உத்தரவு கொடுப்பது போல் தலையை ஆட்டினான். பெத்தண்ணன் வாசற்படி தாண்டிப் போகும் வரையில் அவனையே பார்த்துக் கொண்டிருந்து விட்டு ஒரு பெருமூச்சு விட்டான். அவனுக்கு எல்லாம் ஆச்சரியத்துக்கு மேல் ஆச்சரியமாக இருந்தது. வள்ளியின் வாழ்க்கையில் ஏதோ ஒரு ரகசியம் இருக்க வேண்டுமென்று அவன் எண்ணினான். வள்ளி தன் குழந்தையைக் கழைக்கூத்தாடிகளிடம் வளர விட்டுவிட்டு அதைப் பற்றிய நினைவே யில்லாமல் இருப்பதும் மாதவியிடம் குழந்தைப் பருவத்திலிருந்தே மிகுந்த வாஞ்சையோடும் அன்போடும் நடந்து கொள்வதும் அவனுக்குப் பெருத்த சந்தேகத்தை உண்டாக்கின. ஒருவேளை மாதவியே அவளுடைய குழந்தையாக இருக்கலாமோ! மின்னல்போல் பளிச்சென்று தோன்றிய இந்தச் சந்தேகம் அவன் மூளையிலே பதிந்து விட்டது. அவனுக்குப் பழைய கதைகளெல்லாம் கொஞ்சங் கொஞ்சமாக ஞாபகத்துக்கு வந்தன. பட்டக்காரரின் மகனும் அவருடைய மருமகளும் அப்போது திடீரென்று கார் விபத்துக்கு உள்ளாகி மரணமடைந்தது, அவர்களுடைய குழந்தை காணாமற் போனது, அந்தக் குழந்தையைப் போலீசார் தேடிக் கண்டு பிடித்துக் கொண்டு வந்தது, அதை வளர்ப்பதற்குச் செவிலித்தாயாக வள்ளி வந்துசேர்ந்தது—எல்லாம் அவன் நினைவுக்கு வந்தன. வள்ளி மாதவியிடம் குழந்தைப் பருவத்திலிருந்து ஒரு தாய்க்குள்ள வாஞ்சையோடு இருந்து கொண்டு வருகிறாள் என்று எல்லோருக்கும் தெரியும். ஒரு வேலைக்காரி இப்படி நடந்து கொள்வது எல்லோருக்கும் ஆச்சரியத்தைக் கொடுக்கக்கூடிய தாய்த்தானிருந்தது. காணாமற்போன குழந்தை பல மணி நேரங்களுக்குப் பிறகே அகப்பட்டிருப்பதால் இடமாறாட்டம் ஏற்படுவதற்கு வழியுண்டு. தவிர பட்டக்காரருக்குக் குழந்தை எப்படி இருக்குமென்று தெரிய நியாயமில்லை. ஏனென்றால் கும்பகோணத்திலுள்ள பிரசவ ஆஸ்பத்திரியிலிருந்து அப்பொழுதுதான் காரில் குழந்தையுடன் தாய் அழைத்துக்கொண்டு வரப்பட்டாள். இதையெல்லாம் சிந்தித்துப் பார்க்க முடிந்ததே தவிர திடமாக முடிவு கட்டுவதற்குக் கோவிந்தனுக்கு எவ்வித ஆதாரமும் கிடைக்கவில்லை.

அப்பொழுது அவன் அவைகளை வைத்துச் சிந்தித்து மூளையைக் குழப்பிக் கொள்ளவும் இஷ்டப்படவில்லை. ஆகவே, அதற்கு ஒரு முடிவான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்தான். (தொடரும்)



எல்லாவற்றிலும்
அதிக வலிமையானது
Hercules
ஹெர்குலஸ்
THE HERCULES CYCLE & MOTOR CO. LTD.
BRITANNIA WKS BIRMINGHAM
இன்றைய சைக்கிள்களில் மிகவும் நேர்த்தியானது
எல்லா பிரபல வியாபாரிகளிடமும் கிடைக்கும்
THE HERCULES CYCLE & MOTOR CO. LTD., BIRMINGHAM, ENGLAND
EAS/12/73



உழைக்கவந்த உழவன்

'பகீரதன்'

ரயில் கிளம்பப் போகிறது. கார்டு பச்சைக் கொடியை ஆட்டி விட்டார். இன்ஜினும் 'வீல்' என்று ஒருதரம் கூவிவிட்டு 'குபுகுப்' 'குபுகுபு குப்' பென்று புகையைக் கக்கிவிட்டுப் புறப்படத் தயாராகியது. ரயில் வண்டிக்கு வெளியே தலையை நீட்டிப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

காற்று சில்லென்று வீசிக் கொண்டிருந்தது. மேகக் கூட்டங்கள் பலப்பல உருவங்களில் வான வீதியில் வளர்ந்து சென்று கொண்டிருந்தன. அதனுடன் போய்ச் சேர்ந்து கொள்ளத் தாவி ஓடுவது போல இன்ஜினிலிருந்து கிளம்பிய புகைக் கூட்டம் சுருண்டு சுருண்டு மேலே மேலே சென்று கொண்டிருந்தது. இவற்றிற்கு இடையே நீலநிற ஆகாயம் தெரிந்தது. அங்கே நிலவியிருந்த அதிசய மான சூழ்நிலையும் ரயில் வண்டிக்குள்ளிருந்த மக்களின் விவரந் தெரியாத – புரிந்து கொள்ள முடியாத பேச்சுச் சத்தங்களும், ரயில் இன்ஜினி லிருந்து வந்த 'உஸ்'ஸென்ற நீராவிச் சத்தமும் சேர்ந்து ஏதோ ஒரு புது மாறுதலை, அமைதியான புரட்சியை எடுத்துக் காட்டுவது போலிருந்தன. அருமையான ஒரு கதையின் ஆரம்பத்தைப்போல், எத்தனை எத்தனையோ காலமாக இருந்து வந்த பழக்க வழக்கங்கள் எல்லாமே மாறிவிடுவது போலக் காணப்பட்டன.

"பெரியவரே! ரயில் கிளம்பப் போகிறது. அடுத்த வண்டிக்குப் போகலாம். ஓடாதீர்கள்! ஓடாதீர்கள்!" என்று பலத்த சத்தம் கேட்டது. சட்டென்று திரும்பி எதிர்ப் பக்கம் இருந்த ஸ்டேஷன் பிளாட்பாரத்தைப் பார்த்தேன்.

வயது சென்ற பெரியவர் ஒருவர் ஓட்டமும் நடையுமாக வந்து கொண்டிருந்தார். கையில் தடியும் பையும் வைத்துக் கொண்டிருந்தார். நாங்கள் இருந்த பெட்டிக்கு அருகில் வந்து கதவைத் திறக்கப் பார்த்தார். முடியவில்லை. என்ன என்னவோ செய்து கதவைத் திறக்க முயன்று கொண்டிருந்தார். இதைப் பார்த்துக் கொண்டிருந்த நான் சாத்தியிருந்த அந்தக் கதவை நோக்கி விரைந்து சென்றேன். உள்ளேயிருந்த தாழ்ப்பாளைத் தள்ளிவிட்டுப் பரபரப்பாகக் கதவைத் திறந்தேன். அந்தக் கிழவருக்குக் கை கொடுத்து வண்டிக்குள் தூக்கிவிட்டேன்.

கிழவர் ரயில் வண்டிக்குள் ஏறுவதற்கும் ரயில் கிளம்புவதற்கும் சரியாக இருந்தது. 'க்க்கூ......' என்று நீளமாகக் கூவிவிட்டு ரயில் கிளம்பிவிட்டது.

சுருங்கி வதங்கிப் போயிருந்த தம் வலது கையைத் தூக்கிக் கிழவர் எனக்கு நன்றி தெரிவித்தார். சுருக்கம் விழுந்து தொங்கிப் போயிருந்த அவர் முகத்தில் நன்றி உணர்ச்சி பொங்கியதைப் பார்த்தேன். நீர்க்காவி ஏறிப்போய் மிகப் பழசாக இருந்த முண்டாசுத் துணியை அவிழ்த்து விட்டு நாங்கள் உட்கார்ந்திருந்த பெஞ்சின்மீது அமர்ந்தார். அவர் மூன் தலை வழுக்கை விழுந்திருந்ததால் பளபளவென்று மின்னியது. ஒரு ஆசுவாசப் பெரு மூச்சுவிட்டு விட்டுப் பெஞ்சியில் நன்றாக அசைந்து உட்கார்ந்தார். எலும்பும் தோலுமாக ஆனால் வலிவுள்ளதாக இருந்த காலைத் தூக்கிப் பெஞ்சின் மீது குத்திட்டு வைத்தார். அதன்மீது அவர் நீண்ட கை தாங்கியபடி யிருந்தது. இன்னொரு கையால் கைத்தடியைப் பிடித்து ஊன்றிக் கொண்டு சற்றுப் பின்னால் சாய்ந்தபடி வசதி யாக உட்கார்ந்து கொண்டார். என்னைப் பார்த்து மெதுவாகச் சிரித்தார். அப்பொழுது அவர் பல்லில்லாத வாயின் இரண்டு உதடுகளும் லேசா கப் பிரிந்து களங்கமற்றுக் காட்சி அளித்தன.

"ரொம்ப தூரம் போகிறீர்களோ தாத்தா! யாரையாவது துணைக்கு அழைத்துக் கொண்டு வரக் கூடாதோ!" என்றேன்.

"பூந்தோட்டம் வரையில் போகிறேன். எனக்கு எதற்குத் துணை! மனித சஞ்சாரமில்லாத காட் டிலா போகிறேன்! மனிதர்கள் மத்தியிலே தானே போகிறேன்!" என்றார். அவர் வார்த்தையில் அழுத்தமும் தெளிவும் கலந்து இருந்தன.

"வயதான காலத்தில் துணையிருந்தால் நல்லது என்று சொன்னேன். மனிதர்கள் மத்தியிலே நீங்கள் பிரயாணம் செய்தாலும் எல்லாரும் ஆபத்துக்கு உதவி செய்வார்களா!"

"அதெல்லாம் அந்தக் காலத்தில் தம்பி. இப் பொழுதுதான் மனிதருக்கு மனிதர் உதவிசெய்யத் தெரிந்து கொண்டிருக்கிறார்களே. அப்படித் தெரி யாத மனிதர்களுக்கும் தான் சட்டம் இயற்றிக் கற்றுக் கொடுத்து விடுகிறார்களே!"

"எதைச் சொல்லுகிறீர்கள் தாத்தா!"

"நம் முதல் மந்திரி ராஜாஜியின் 'விவசாயப் பாதுகாப்புச் சட்ட'த்தைத் தான் சொல்லு கிறேன்" என்றார்.

"நான் ஏதோ பட்டணக் கரையில் வசிப்பவன். எனக்கு என்ன அந்தச் சட்டத்தின் அவசியமும் பலனும் தெரியப் போகிறது! அதனால் மனித

ருக்கு மனிதர் உதவி செய்து கொள்ளும் அளவுக்கு வசதி யிருக்கிறதா தாத்தா!''

''தம்பி! நீங்கள் வயதில் சிறியவராக இருக்கிறீர்கள். இருந்தாலும் உங்களுக்கு மனித உணர்ச்சி யிருக்கிறது. அதனால்தான் இதையெல்லாம் தெரிந்துகொள்ள ஆசைப் படுகிறீர்கள். இந்தச் சட்டத்தால் எப்படி மனிதருக்கு மனிதர் உதவி செய்து கொள்ள முடிகிறது என்பதை விளக்க வேண்டுமானால் என் சொந்தக் கதையை உங்களுக்குச் சொல்ல வேணும்'' என்றார்.

''சொல்லுங்கள் தாத்தா! சொல்லுங்கள்! எனக்குக் கதைக் கேட்பதென்றால், அதிலும் ஒருவருடைய சொந்தவாழ்க்கையைப் பற்றிய கதையாக இருந்தால் ரொம்பவும் ஆசை'' என்றேன்.



கிழவர் என்னை ஒரு தரம் கூர்ந்துபார்த்தார். வயதாகி விட்டதால் அவர் உடல் சற்றுக் கூனிப் போயிருந்தது. ஒரு காலத்தில் கருத்துப் பளபளவென்றிருந்த அவர் மேனி வாடி பளபளப்புக் குறைந்து சுருங்கிப் போய்க் காணப்பட்டது. தொண்டையை ஒரு தரம் கனைத்துக் கொண்டு தன் கதையைச் சொல்ல ஆரம்பித்தார். அவரது குரல் கணீரென்று ஒலித்தது.

''என் சொந்த ஊர் உழுமங்கலம். எங்கள் ஊரில் இருப்பவர்கள் எல்லாருமே நல்ல திடசாலிகள். என்னையே பாருங்கள். எனக்குப் பத்துக் குழந்தைகள் இருக்கின்றன. பேரக் குழந்தைகளுக்குக் கணக்கே இல்லை. என்பேத்தி ஒருத்திக்குக் குழந்தை பிறந்திருக்கிறது. அந்தச் சின்னக் குழந்தையைப் பார்க்கத்தான் போகிறேன்'' என்று உற்சாகத்தோடு சொன்னார் கிழவர். அவர் முகம் சுருங்கிப்போய்க் கண்கள் குழிவிழுந்து கிடந்தாலும் அதில் மகிழ்ச்சி ததும்பிக் கொண்டிருந்தது. ரயில் வண்டியில் இருந்த எல்லாரையும் ஒரு முறை பெருமையாகப் பார்த்தார். நானும் மனத்துக்குள் சிரித்துக் கொண்டேன்.

ரயில் ஓடிக் கொண்டிருந்தது. ரயில் சக்கரங்களின் ஒரே மாதிரியான ஓசையும், 'டக் டக்' 'டக் டக்' என்ற தண்டவாளத்தின் இணைப்பிலிருந்து எழுந்த தாளம் தவறாத சத்தமும் கேட்டுக் கொண்டிருந்தன. கிழவர் தம் கதையைச் சொல்லிக் கொண்டு வந்தார். வண்டியின் ஆட்டத்தினால் அவர் உடல் இப்படியும் அப்படியும் அசைந்து அசைந்து ஆடிக்கொண்டிருந்தது.

'''நம் குழந்தைகள் நம்மை எல்லாம்விட மேலானவர்கள். அவர்கள் வாழ்க்கை எத்தனையோ மடங்கு சிறந்து விளங்கப் போகிறது' என்று என் தந்தையார் அடிக்கடி சொல்லி வருவார். அதை என் வாழ்நாளிலேயே பார்த்தேன். அடிமை மண்ணில் பிறந்தேன். இப்போது சுதந்தர மண்ணில் இந்நாட்டு மன்னனாக இருக்கிறேன். என் குழந்தைகள் என்னைவிடச் சௌகரியமாக இருக்கிறார்கள். என் பேரக் குழந்தைகளும் அவர்கள் வயிற்றில் பிறக்கும் குழந்தைகளும் சௌகரியமாக சந்தோஷமாக வாழத்தான் போகிறார்கள்'' என்றார். தம் அருகில் இருந்த பையில் எல்லாம் சரியாக இருக்கிறதா என்று பார்த்தார். பேத்தியின் சின்னக் குழந்தைக்காக வாங்கி இருந்த பட்டுச் சொக்காயை எடுத்துப் பார்த்து விட்டு மீண்டும் பைக்குள் வைத்தார்.

வயது சென்றிருந்தாலும் ஆரோக்கியம் குறையாமல் இருந்த தம் முகத்தைத் தடவிக்கொண்டே ஆனந்தப் புன்னகை புரிந்தார். சிறு குழந்தைகள் சிரிப்பதுபோல் கவடு இல்லாமல் இருந்தது அந்தப் பொக்கை வாயின் மோகனச் சிரிப்பு.

''அந்தக் காலத்தில் இப்போது இருப்பதைப் போல் வைத்திய வசதிகள் ஒன்றும் கிடையாது. அதனாலேயே மக்கள் ஜாக்கிரதையாக வாழ்ந்தார்கள். முட்டாள்தனமாகவும் வாழ்ந்தார்கள். வீணுக்குப் பயந்து பயந்தும் வாழ்ந்தார்கள். தங்களுடைய முட்டாள்தனத்துக்குக் கடவுள் மீது பழியைப் போட்டார்கள். தங்கள் ஏழைமைக்குக் காரணம் கடவுளேதான். கடவுளே அப்படி நம்மைப் படைத்து இருக்கிறார். ஆகையால் நாம் இப்படியேதான் வாழவேண்டுமென்று எண்ணினார்கள். ஏழை மக்களின் இந்த எண்ணங்களைப் பணம் படைத்தவர்கள் மேலும் மேலும் வளர்க்க ஆரம்பித்தார்கள். எடுத்ததற்கெல்லாம் 'அதற்கென்ன செய்வது! நீ வந்த வழி. போன ஜன்மத்தில் என்ன பாவம் பண்ணினாயோ! இப்பொழுது இப்படிக் கஷ்டப்படுகிறாய்' என்று அவன் அறிவை மயக்கி அவனிடம் வேலையை வாங்கினார்கள். அவனை உலகத்தைப் பற்றி நினைக்க முடியாமலே செய்து வந்தார்கள். அதனால் எழுத்தறிவும் உலக அறிவும் இல்லாத ஏழை மக்கள் எவ்வளவோ கஷ்டப்பட்டார்கள். உலகம் வியக்கும் உன்னத நிலையில் இருந்த நம் நாடு சீர் குலைய ஆரம்பித்து விட்டது. வேற்று மனிதன் நம்மை ஏமாற்றிப் பிழைக்க ஆரம்பித்தான்.

''எனக்கு வயது பதினைந்து இருக்கும். அப்போது நான் வெறும் விளையாட்டுப் பையனாக இருந்தேன். என்றாலும் என் தகப்பனாருக்கு ஒத்தாசையாக

அவருடன் வேலை செய்து கொண்டு வந்தேன். என் அப்பாவுடன் அன்றும் வயலில் வேலை செய்து கொண்டுதான் இருந்தேன். அப்பாவுக்குக் கடுமையான ஜுரம் அடித்துக் கொண்டிருந்தது. அந்த ஜுரத்திலும் அப்பா வயலில் சேற்றில் அண்டை வெட்டிக் கொண்டிருந்தார். ஜுரத்தோடு ஏன் வேலை செய்ய வேண்டும் என்று கேட்டு விடாதீர்கள். அப்போது விவசாயிகளுக்கென்று பாதுகாப்புச் சட்டம் கிடையாது. அவர்கள் குறையை யாரிடமும் சொல்லிக் கொள்ளமுடியாது. பண்ணை முதலாளி வைத்ததுதான் சட்டம். அவர் கொடுத்ததுதான் கூலி. இந்த லட்சணத்தில் ஒரு நாளைக்கு வேலைக்குப் போகாமல் இருந்து விட்டால் யம வேதனைதான். இப்போது நினைத்துப் பார்க்கவே பயமாயிருக்கிறது. கட்டி வைத்துக்கூட அடிப்பார்கள். மனித இதயம் படைத்தவர்களா இவர்கள் என்று எண்ணும்படி இருக்கும். காலம் எல்லாம் பாடுபட்ட உழவனை ஒரே கணத்தில் வேலையை விட்டும் அனுப்பி விடுவார்கள். நித்தியகண்ட வாழ்க்கைதான்.

"இதுமட்டும்தானா! இன்னும் என்ன என்னவோ கொடுமைகளை எல்லாம் செய்தார்கள்.



ஒரு சம்பவம் என் மனத்தை விட்டு இன்னும் அகலவேயில்லை. நான் என் தந்தை வேலை செய்து வந்த பண்ணையார் வீட்டு மாடுகளை மேய்த்து வந்தேன். என் அம்மா, அவர்கள் வீட்டு மாட்டுக் கொட்டகைகளைச் சுத்தம் செய்து வந்தாள். ஒரு நாள் அம்மாவுக்கு உடம்பு சௌகர்யமில்லை. பண்ணையார் வீட்டுக்குப் போகவில்லை. மழை பெய்து கொண்டிருந்ததால் நானும் மாடு மேய்க்கப் போகவில்லை. கொட்டும் மழையில் பண்ணையார் எங்களை அழைத்து வரச் சொன்னார். நான், அம்மா, அப்பா மூன்று பேரும் பண்ணையார் வீட்டுக்குப் போனோம். அந்தக் காலத்தில் இன்னொரு வழக்கம். எஜமான் வீட்டுக்கு வெளியில்தான் எல்லாரும் நிற்க வேண்டும். மழை பெய்கிறதே என்றுகூட வீட்டுக்குள் போக முடியாது. பண்ணை முதலாளிகளின் இதயம் அப்படிப் பண்பட்டுக் கிடந்தது. நாங்கள் மழையில் வெளியில் நின்று கொண்டிருந்தோம். எனக்குக் குளிர் தாங்க முடியவில்லை. பண்ணையார் அவர் வீட்டு வாசலில் கிடந்த கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்து வெற்றிலைப் பாக்குப் போட்டுக் கொண்டு சாவதானமாக எங்களைத் திட்டிக்கொண்டிருந்தார். எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அப்பாவைப் பார்த்தேன். அவருடைய பரிதாபமான முகத்தைப் பார்த்தேன். என் அம்மாவின் வாடிய முகத்தையும் பார்த்தேன். என் ஆத்திரம் எல்லாம் அழுகையாக மாறிவிட்டது. அப்பாவும் அம்மாவும் ஏன், நானும் கூடத்தான் அந்தக் கொட்டும் மழையில் 'நாங்கள் செய்ததெல்லாம் தப்பு' என்று சொல்லி எங்கள் ஏழைமை காரணமாகவும் அப்பொழுதைய சூழ்நிலையிலும் வேறு வழியின்றிப் பண்ணையார் காலில் விழுந்தோம்.

"எங்களை மன்னித்து விடும்படி மன்றாடினோம். பண்ணையார் எங்களை மன்னித்ததற்கு அறிகுறியாகத் தம்முடைய வசவின் கடுமையைக் கொஞ்சம் குறைத்தார். அதையும் வாய் பேசாமல் கேட்டுக் கொண்டிருந்தோம். நியாயமாகப் பேசினால்கூட எங்களை அடிப்பதற்கு ஆள் தயாராக இருக்கிறதே! இப்படி எத்தனை எத்தனையோ நினைத்துக்கூடப் பார்க்க முடியாத சம்பவங்கள்.

"இந்த மாதிரி துன்பங்களை எல்லாம் அனுபவித்தவர் அப்பா. அதனால்தான் உடம்பு அசௌகர்யத்திலும் போய் வேலை செய்தார். அதனால் அவர் உடல்நிலை மேலும் மோசமாய் விட்டது. அவரை அறியாமல் வேலையில் ஈடுபட்டிருந்தார். நிலத்தை வெட்டிய மண் வெட்டி அவர் காலையும் சேர்ந்து வெட்டி விட்டது. வெட்டுப் பட்ட இடத்திலிருந்து இரத்தம் குபு குபு வென்று பெருக ஆரம்பித்து விட்டது. சேறெல்லாம் இரத்தமாகி விட்டது. தந்தையோ தள்ளாடிக் கொண்டிருந்தார். அதைப் பார்த்தவுடன் அதுவரையில் அனுபவித்தறியாத ஒரு உணர்ச்சி என்னை வந்து தாக்கியதை உணர்ந்தேன். என் மூச்சு வேகமாக வர ஆரம்பித்தது. அது நெருப்பாகச் சுட்டது. என் இதயம் குவிந்தது. என் உள் அவயவங்கள் எல்லாம் வலிக்க ஆரம்பித்து விட்டன. ஒரு கணம் திக் பிரமை பிடித்தவன் போல் நின்று கொண்டிருந்தேன். அடுத்த கணம் என் பலத்தை எல்லாம் உபயோகித்து அப்பாவைத் தாங்கிப் பிடித்து அழைத்துக் கொண்டு வீட்டுக்குப் போனேன்.

வழியெல்லாம் அவர் காலில் இருந்து இரத்தம் சொட்டிக் கொண்டே வந்தது.

"என் தாயார் அப்பாவைப் பார்த்ததும் அலறி அடித்துக் கொண்டு ஓடி வந்தாள். வழக்கமாக அப்பா படுத்துக் கொள்ளும் கயிற்றுக் கட்டிலில் அவரைக் கிடத்தினுள். அதற்குள்ளாகவே அப்பா சோர்ந்து போய் விட்டார். அவர் கண்கள் பஞ்சடைந்து விட்டன. குரல் கம்மி விட்டது. மெதுவாக ஏதோ பேச ஆரம்பித்தார்.

"'இது கல்ல காயம். ஆறும் என்றே தோன்ற வில்லை' என்று கண்ணில் பயம் மிதக்க முனகினுர். ஏற்கெனவே உடல் கலம் குன்றியிருந்ததாலும் ஏராளமான இரத்தம் வெளியாகி விட்டதாலும் அவர் உடல்நிலை மோசமாகி விட்டது. இப்போது இருப்பது போல்தான் அந்தக் காலத்தில் வைத்திய வசதிகள் கிடையாது என்று சொல்லேனே. என்ன என்னவோ கை வைத்தியங்கள் செய்தோம். அதனுல் ஏற்பட்ட பலன் அவர் காயத்தில் சீழ் பிடித்துப் புரையோடி விட்டது.

"இந்தச் சமயத்தில்தான் நீங்கள் அந்தக் காலத்தின் கொடுமையைத் தெரிந்து கொள்ளவேணும். அப்பா மரணத்தோடு போராடிக் கொண்டிருக் கிறார். நாங்கள் எல்லாம் தவித்துக் கொண்டிருக் கிறோம். பண்ணை முதலாளி தினம் தினம் ஆள் அனுப்பிக் கொண்டே இருந்தார். அம்மாவைக் கூப்பிட்டு அனுப்பிக் கண்டபடி திட்டிக்கொண் டிருந்தார். 'காலில் மண்வெட்டி பட்டு விட் டால் என்ன! அதைச் சாக்காக வைத்துக்கொண்டு படுத்துக் கொள்ள வேண்டுமா! அவனுக்குப் பதில் நான் வேறு ஆள் வைத்தால் அந்த ஆளுக்கு யார் கூலி கொடுப்பது! இந்த வருஷத்தோடு உன் கணவனை என் பண்ணையிலிருந்து நீக்கி விடு கிறேன். இந்தப் பக்கம் வரட்டும், அவன் முது குத் தோலை உரித்து விட்டு மறுகாரியம் பார்க் கிறேன்' என்று கருவிக் கொண்டிருந்தார்.

"விவசாயப் பாதுகாப்புச் சட்டத்தில் இப்படி ஆளை நினைத்தபடி நிறுத்திவிட முடியாது. உடல் நோயோடு இருப்பவனை உழவுக்கு வா என்று கொடுமைப் படுத்த முடியாது. இதைவிட மனி தனை மனிதனுக மதிக்கும்படி வேறு சட்டம் இயற்ற முடியுமா! இதுவே விவசாயிகளுக்குப் பெரிய வரப்பிரசாதமாயிற்றே!" என்ருர்.

"ஆமாம், முதலாளிகள் நினைத்தபோது ஆட் களை நிறுத்த முடியாமல் இருப்பது விவசாயி களுக்குப் பெரிய உதவிதான். அதிருக்கட்டும். உங்கள் தகப்பனுருக்கு என்ன ஆயிற்று! மேலே கதையைச் சொல்லுங்கள்!" என்று படபடப் போடு கேட்டேன்.

"இறுதியாக என் தந்தை மீள முடியாத படுக் கையில் வீழ்ந்து விட்டார். அவர், என் தந்தை; மிகவும் வலிவுள்ள பெரிய மனிதர். உயர்ந்த பண் புகள் பெற்றவர். தம் உண்மை மதிப்பை நன்கு உணர்ந்தவர். அதனுல் அவர் பிடிவாதமாக முனகு முனுக்காமல் மூன்று நாட்களைத் தள்ளினுர்.

"காலம் நான் காலே. அப்பா என்னைத் தம் அருகில் கூப்பிட்டார். ஆசையோடு போனேன். தம் பலம் நிறைந்த, ஆனல் வாடிப்போயிருந்த கைகளால் என்னை ஆதரவோடு அணைத்துக் கொண்டார். பிறகு சொன்னுர் :

"இனிமேல் நான் பிழைப்பேன் என்று என்னுல் நம்ப முடியவில்லை. நான் சொல்லுவதைக் கவன மாகக் கேள். விவசாயத்தைப் பற்றியும் உழைப் பைப் பற்றியும் நிறையத் தெரிந்து கொள்ளவேண் டும். அதற்கும் மேலே சமூகத்தில் இருக்கும் பலதரப்பட்ட மக்களுடன் வாழ்வதைப் பற்றியும் நீ அறியத் தெரிந்து கொள்ள வேண்டும்.

"உன் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களிடம் சகஜமாகவே பழகு. அவர்களைப் பற்றி 'ஓ!' என்று உயர்வாகவோ, 'சீ!' என்று தாழ்வாகவோ நினைத்துக் கொள்ளாமல் பழகி வர முயலவேண் டும். அப்படிப் பழகி வந்தாலே போதும் உன் வாழ்க்கை எல்லாம் சரியாகப் போய்விடும். உழவ னும், பண்ணை முதலாளியும், பாட்டாளியும் பணக்காரனும், வியாபாரியும் போர் வீரனும் மனித சமுதாயத்தின் முக்கிய அங்கங்கள்தான். அந்த அமைப்புக்கு மற்ற எல்லாரையும் போல் நீயும் அவசியம். ஆகையால் உன்னைப் பற்றி உயர் வாகவே நினைத்துக் கொள். எந்த மனிதனிடம் பழகும் போதும் அவன் நல்லவன், உயர்ந்த குணம் படைத்தவன் என்று எண்ணிக் கண்யமாகப் பழக வேண்டும். அப்போதுதான் உன்னிடம் நல்ல குண மும் உயர்ந்த பண்பும் உண்டாகும்' என்று சொல்லி என்னைப் பார்த்தார். அந்தப் பார்வையில் தான் என்ன அன்பு! என்ன கருணை! அதை விளக்கிக் காட்டுவதற்கு வார்த்தைகளே கிடை யாது என்றுதான் சொல்ல வேணும்.

"நேற்று நடந்தது போலிருக்கிறது. என் தந்தை காலில் கட்டுடன் கயிற்றுக் கட்டிலில் சோர்ந்து கிடந்ததும், உழைத்து உழைத்து உரம் ஏறிய அவர் நீண்ட கைகள் வலுவிழந்து துவண்டு கிடந்ததும் இப்பொழுதுகூட என் மனக் கண் முன்னே காட்சியளிக்கின்றன. அவர் கண்கள் சோகத்தினுல், என்னைத் தனியே விட்டு விட்டுப் போகிறோமே என்ற தாங்க முடியாத ஏக்கத்தினுல் விரிந்து பெரிதாகத் தெரிந்தன.

"ஒரு நாம் இருமி விட்டு மீண்டும் சொன்னுர். தாம் அறிந்து தேர்ந்த ஐம்பது வருஷ அநு பவத்தை யெல்லாம் எனக்குச் சொல்ல ஆரம்பித் தார். 'மண்ணுக்கும் மனிதனுக்கும் முக்கியமாக வேண்டியது உழைப்பு. விவசாயத்துக்கு வேண்டி யதும் ஓயாத உழைப்புத்தான். காலமறிந்து உழைக்க வேண்டும். மண்ணேடும் தண்ணி ரோடும் சேர்ந்து, சோர்ந்து போகாமல் மல்லாட வேண்டும். வெய்யில் மழை என்று வேதனைப் படாமல், - பனி, குளிர் என்று பார்க்காமல், இரவு பகல் என்றெல்லாம் எண்ணுமல் வேலை செய்ய



நீதிபதி (வக்கீலைப் பார்த்து):—அவன் தான் குற்றவாளி என்று ஒப்புக் கொள் ளுகிருனே! நீர் ஏன் 'அவன் குற்ற வாளி இல்லை' என்று வாதாடுகிறீர்?

வக்கீல் :—அவன் சொல்லுவதை ஒரு போதும் நம்பக் கூடாது. அவன் சுத்தக் 'கேடி' யாயிற்றே!

வேண்டும். தம்பி, விவசாயத்தில் மட்டும் உனக்கு ஆசை வந்து விட்டால் நீ மகா பாக்கியசாலிதான். அதைப் போல இன்பம் கொடுக்கும் தொழில் சுதந்திரமான தொழில் உலகத்திலேயே கிடையாது என்று சொல்லலாம். அந்தத் தொழிலின் பெருமையை, அதன் உயர்வைத் தெரிந்து பாடுபட வேண்டும். வரையாது வழங்கும் தாய் பூமி. அவள் நமக்குக் கேட்டதை யெல்லாம் கொடுப்பாள். ஆனால் அதற்கு வேண்டியது உழைப்பும் உற்சாகமும்தான். ஓயாமல் பாடுபட வேண்டும். அப்படிப் பாடுபடுவது கடினம்தான். கஷ்டமான வாழ்க்கை யென்றுகூட நினைக்கத் தோன்றும். அதனால் வாழ் நாள் முழுவதும் சந்தோஷமாக இருக்கலாம். துன்பத்தையும் துயரத்தையும் கஷ்டத்தையும் கவலையையும் நீக்க வல்லது உழைப்பு ஒன்றுதான். உலகில் உள்ள எல்லாப் பொருள்களையும் விட உயர்ந்தது உழைப்பு! மண்ணும் மணியும், பொன்னும் பொருளும் கொடுக்



காத இன்பத்தை உழைப்பு கொடுக்கும். விவசாயத்தில் இன்னொரு தனி இன்பம். நீ பூமியில் விதைத்த விதை முளைத்துப் பூமிக்கு வெளியே வரும்போது உனக்கு ஏற்படும் இன்பம், அடாடா! சொல்லி முடியாது. அநுபவித்துத்தான் மகிழ வேண்டும். ஆகையால் விவசாயத்தையும் விவேகமான உழைப்பையும் மறந்து விடாதே என்றார். 'மறக்கவே மாட்டேன். உழைப்பதை ஒரு நாளும் மறக்கவே மாட்டேன், அப்பா!' என்றேன்.

"ஆனால் அப்பா என்னை மறந்து விட்டார். என் அருமைத் தாயை அவர் அன்பு மனைவியை மறந்து விட்டார். ஓயாமல் உழைத்த உழைப்பை மறந்து விட்டார். இந்த உலகத்தையே மறந்து விட்டார். அவர் கண்கள் மூடிக் கொண்டன. தலை சாய்ந்து விட்டது. கைகளும் கால்களும் துவண்டு விட்டன.

"இது வரையில் அமைதியாக இருந்த ஆகாயம் அதிர்ந்து இடி இடித்து மின்னல் மின்னியது. மழை பெய்ய ஆரம்பித்து விட்டது. வயல் வெளிக்குப் போய்ச் சொட்டச் சொட்ட நனைந்து வந்த என் தாயார் இந்தச் சோகக் காட்சியைப் பார்த்தாள். அவள் இதை எதிர்பார்க்கவேயில்லை. அப்பாவின் காலின் வெட்டுக் காயத்தில் வைத்துக் கட்டுவதற்காக மடியில் பச்சிலை வைத்திருந்தாள்.

"அடுத்த கணம் வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு அலறினாள்; ஒரு கணம் முகத்தை மூடிக் கொண்டு அழுதாள்; முறையோ முறையோ என்று புலம்பினாள். அவள் மடியில் கிடந்த பச்சிலைகள் கீழே சிதறிக் கிடந்தன. அதைப் பார்க்கும்போது எங்கள் வாழ்க்கையே சிதறி விட்டதுபோலத் தோன்றியது.

"இந்த உலகில் என்னையும் என் தாயாரையும் என் தந்தை தனியாக விட்டு விட்டுச் சென்ற நிலையை நான் அப்போதுதான் உணர்ந்தேன். என் கண்கள் இருண்டன. காதுகள் செவிடாகி விட்டதோ என்று நினைக்கும்படி இருந்தது. உடல் தன் நிலையில் இல்லாமல் துவண்டது. இறுதியில் செய்வதறியாது செயலற்று உட்கார்ந்து விட்டேன்" என்று சொல்லிக் கிழவர் மௌனமானார்.

அவர் கண்கள் கலங்கி இருந்தன. ஆழத்தில் இருந்த அந்தக் கண்களில் இருந்து இரண்டு சொட்டு வெண் முத்துக்கள் போலக் கண்ணீர் திரண்டு அவர் சுருங்கிய கன்னத்தின் வழியே உருண்டு வந்து விழுந்து சிதறியது. சற்று நேரத்துக்குப் பிறகு தோளில் கிடந்த துண்டை எடுத்துத் தம் கண்களைத் துடைத்துக் கொண்டு மேலே கதையைத் தொடர்ந்தார்.

"எனக்கு வயது இருபதாயிற்று. நானும் தொடர்ந்து என் தந்தையார் வேலை செய்து வந்த பண்ணை முதலாளியிடமே வேலை செய்து வந்தேன். அப்பா சொல்லி விட்டுப் போனதை மனத்தில் கொண்டு ஜாக்கிரதையாக மனித சமூகத்தோடு பழகி வந்தேன். உழைப்பதில் இருந்த இனந் தெரியாத இன்பத்தை உணர்ந்து அநுபவித்தேன். ஆனால் பண்ணை முதலாளியின் மனத்தை மட்டும் என்னால் உணர்ந்து கொள்ள முடியவில்லை. என்ன வேலைசெய்தாலும் என்ன பாடு பட்டாலும் அவருக்குத் திருப்தி இருப்பதில்லை. அப்பா பணம் கொடுக்க வேண்டும் என்று பொய் சொல்லி என்னை வேலை வாங்கினார். ஏதாவது சொல்லி விட்டாலோ போலீஸில் சொல்லிச் சிறையில் தள்ளி விடுவேன் என்று பயமுறுத்துவார். எப்போதாவது என்னையும் மீறி ஏதேனும் தவறு செய்து விட்டால் ஆளை விட்டு அடிக்கச் சொல்லுவார். வயிறு ஒன்று இருக்கிறதே! அதை நிரப்ப வேண்டுமே என்று நினைத்து அவரிடம் வேலை

செய்து வரவில்லே. அப்பொழுது பண்ணை ஆட்களின் நிலைமையே அப்படித்தான் இருந்தது. யாரிடம் சொல்லிக் கொண்டாலும் நியாயம் கிடைக்காது. அத்துடன் அப்பா சொல்லிப் போன விஷயங்களும் நினைவுக்கு வந்தன. மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு அப்பா படாத கடனுக்காகப் பண்ணையாரிடம் உழைத்து வந்தேன்.

''பண்ணையாரிடம் வேலே செய்யும்போது அவர் வீட்டில் தினம் ஒரு வேளை பழைய அமுது கிடைக்கும். அதைத்தான் அங்கேபோடு போடுவார்களா! மாட்டுக் கொட்டகையில், திண்ணடியில் வைத்துப் போடுவார்கள். இலே போட்டு ராஜோபசாரம் செய்யா விட்டாலும் மனிதனுக நினைத்துச் சாதம் போட்டால் தேவலாமே. அப்படி இருக்காது. அந்தச் சமயத்தில் எல்லாம் இந்த மனித சமுதாய அமைப்பைப் பற்றி நான் எவ்வளவு வேதனைப் பட்டிருக்கிறேன் தெரியுமா! என் உள்ளம் அடைந்த துன்பத்தை எடுத்துச் சொல்ல முடியாது. மனிதனைப் பார்த்து மனிதன் இவ்வளவு தாழ்வாக நினைக்கும்படி இருக்கிறதே என்று ஏங்குவேன். மனிதனை மனிதனுக மதிக்கும் காலம் வராதா என்று நினைப்பேன். காலம் இப்பொழுது மாறி வருகிறது. மனிதனை மனிதனுக நினைக்க மனிதர்கள் கற்றுக் கொள்கிறார்கள். வெகு விரைவில் மனித சமுதாயத்துக்குள் இருக்கும் ஏற்றத் தாழ்வு, இன மனப்பான்மை எல்லாம் மறைந்து விடும் என்று நம்புகிறேன்'' என்று சொல்லிச் சற்று நேரம் மௌனமாக உட்கார்ந்திருந்தார்.

அவர் முகத்தில் இது வரையில் காணாத ஒரு புது உணர்ச்சி தோன்றியது. காலம் எல்லாம் கஷ்டப்பட்டவன் திடீரென்று சுகப்பட்டால் அவன் முகத்தில் எப்படி மாறுதல் ஏற்படுமோ அவ்வாறு ஒரு மாறுதல் தோன்றியது. மலர்ந்த முகத்துடன் கிழவர் கதையைத் தொடர்ந்தார்.

''இந்தச் சமயத்தில்தான் என் வாழ்க்கையில் ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டது. என் மனத்தில் ஒரு இனந்தெரியாத தைரியம் ஏற்பட்டது. அந்தத் தைரியத்தையும் நம்பிக்கையையும் அளித்த சக்தி எது தெரியுமா! காதல்! காதல்! காதல்தான்! காதலின் சக்தியை, அதன் உயர்வை என்னவென்று சொல்லுவேன்.

''வயல் வெளியில் என்னேடு வேலே செய்து வந்த ஒரு பெண்ணைக் காதலித்தேன். அவளும் என்னைப் போலவே நன்ருக உழைத்து வந்தாள். நல்ல உடல் கட்டு பெற்றிருந்தாள். பிரமாதமான அழகு நிறைந்தவள் என்று சொல்ல முடியாது. ஆனல் அவளை நாள் முழுவதும் பார்த்துக் கொண்டே இருக்கலாம். அவளிடம் விவரிக்க முடியாத ஒரு கவர்ச்சி இருந்தது. அத்துடன் குற்றமற்ற அன்பு நிறைந்தவளாகவும் இருந்தாள். இனிமையான குரலில் அருமையாகப் பாடுவாள். அடாடா! அவள் பாடும்போது எல்லேயற்ற அந்த வயல் வெளி முழுவதுமே இன்ப மயமாகத் தோன்றும். நானும் அவளுடன் சேர்ந்து பாடுவேன். அப்போது அவளுக்கு இன்னும் சந்தோஷம் உண்டாகிவிடும். நேரம் போவதில் நினைப்பில்லாமல் இனிமையான குரலில் பாடிக்கொண்டே இருப்பாள்.

''பகலெல்லாம் வயலில் உழைப்போம். இரவில் வயல் வெளியில் களத்து மேட்டில் பாடிக் கொண்டும் சிரித்துக் கொண்டும் பலப்பல கதைகள் பேசிக் கொண்டும் திரிவோம். அந்த நாளை நினைத்துக் கொண்டால் இப்போது கூட எனக்கு எங்கேயோ வான வெளியில் மிதப்பது போலத் தோன்றுகிறது. அப்போது நான் மீசை வைத்துக்கொண்டிருந்தேன். அதை அழகாக முறுக்கி விட்டிருப்பேன். நிலவொளியில் என் கருத்த மீசையைக் கடைக் கண்ணுல் பார்ப்பாள். அந்தக் கருநீலக் கண்ணைக் கண் கொட்டாமல் பார்த்து மகிழ்வேன். கருத்த பட்டுப் போன்ற தலே மயிர் கருண்டு கருண்டு அவள் முதுகிலே புரளும். திறந்த வெளியில் அடிக்கும் காற்றினுல் அவை ஆடிப் பளபளக்கும். துள்ளித் துள்ளி விளையாடும். அந்த அழகை நினேக்கும்போதெல்லாம் எனக்கு இன்பமாயிருக்கிறது.

''ஒரு சமயம் நல்ல பௌர்ணமி. வெள்ளித் தட்டோ வயிரக் கட்டியோ என்று எண்ணி வியக்கும்படி வானத்தில் நிலவு பிரகாசித்துக் கொண்டிருந்தது. நிலவொளிபட்டு வயல் வெளி யெல்லாம்





பெண் :—அப்பா, நான் அவரிடம் கோபித்துக்கொண்டு வந்துவிட்டேன்! ஆமாம், அம்மா எங்கே, காணும்!

தகப்பனுர் :—அவள் என்னிடம் கோபித்துக்கொண்டு பிறந்தகத்துக்குப் போய் விட்டாள்!

புதுச் சோபை பெற்று விளங்கின. பச்சை கொண்டிருந்த பயிர்கள் பால் போன்ற நிலவில் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தன. கண்ணுக்கு எட்டிய தூரம் மனிதர்களே இல்லை. என் அருகில் மட்டும் அல்லி – அவள்தான் என் காதலி நின்று கொண்டிருந்தாள். லேசாகப் பாடினுள். நானும் அவளுடன் சேர்ந்து பாடினேன். திடீரென்று சிரித்தாள். நானும் சிரித்தேன். பிறகு நீண்ட நேரம் மௌனமாக உட்கார்ந்திருந்தாள். அங்கு சூழ்ந்திருந்த மௌனத்தைக் கலைத்துக் கொண்டு நான் பேச ஆரம்பித்தேன்.

" அல்லி! இப்படியே நாம் எத்தனை நாளைக்குக் காலம் தள்ளுவது! கல்யாணம் செய்து கொள்ள வேண்டாமா!' என்று கேட்டேன்.

" 'அது மட்டும் முடியாது! நான் சம்மதித்தாலும் என் தாயார் சம்மதிக்க மாட்டாள். அப்படியே என் அம்மா சம்மதித்தாலும் உங்கள் தாயார் சம்மதிக்க மாட்டார்கள். அப்படியே நாம் எல்லாருமே ஒத்துப் போய் விட்டாலும் உறவினர்களும் ஊராரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். உங்கள் பண்ணை முதலாளி உங்களை வேலைக்கு வைத்துக் கொள்ள மாட்டார். என்னால் உங்களுக்கு ஏன் இந்தத் தொந்தர வெல்லாம்!' என்று சொல்லி என் முகத்தைப் பார்த்தாள். உடனே, 'என்ன இருந்தாலும் என்னைவிட நீங்கள் தாழ்ந்த சாதிதானே!' என்றுள்.

" என் மண்டையில் ஏதோ தாக்கியது போல் வலித்தது. இது வரையில் நான் அவள் சாதியைப் பற்றி நினைக்கவே இல்லை. அதை நினைத்துப் பார்க்கும் சந்தர்ப்பமும் என் சிந்தனையில் தோன்றவில்லை. அல்லி சாதியைப் பற்றிச் சொன்னவுடன் எனக்கு மேலே என்ன பேசுவது என்றே தெரியவில்லை. ஒரு கணம் வானத்தைப் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தேன். முழு மதியை மேகம் மறைத்திருந்தது. சற்று நேரத்துக்கெல்லாம் மேகம் விலகியது. பூர்ண சந்திரன் தெரிந்தது. சந்திரனின் முழு உருவத்தைப் பார்த்தவுடன் எனக்கும் ஏதோ ஒரு தைரியம் ஏற்பட்டது.

" 'அல்லி!' என்றேன். திரும்பிப் பார்த்தாள்.

" அவள் முகத்தில் எப்போதும் போலவே அன்பு தவழ்ந்து கொண்டிருந்தது. கண்ணில் குறு குறுப்பு கும்மாளி போட்டுக் கொண்டிருந்தது. வானத்துச் சந்திரிகையே பெண்ணுருவில் வந்து என் எதிரில் நிற்கிருளோ என்று எண்ணி வியக்கும்படி எனக்குத் தோன்றினுள்.

" 'நான் உன்னை மனதாரக் காதலிக்கிறேன். நீ இல்லாவிட்டால் என்னால் ஒரு கணம்கூட உயிர் வாழ முடியாது' என்றேன்.

" 'என்னால் மட்டும் வாழ முடியுமா! இப்படி நம் கல்யாணத்துக்கு ஒரு சாதித் தடை இருக்கிறது என்பதைச் சொன்னேன். நான் கல்யாணம் செய்து கொண்டால் உங்களைத்தான் கல்யாணம் செய்து கொள்வேன். இல்லாவிட்டால் கன்னிகையாகவே காலம் கழிப்பேன்' என்றுள்.

" என் உடலில் ஒரு புது உணர்ச்சி ஓட ஆரம்பித்தது. கால் முதல் தலை வரையில் ஏதோ ஜிலு ஜிலு என்று பாய்ந்து துள்ளியது. அல்லியை ஆசையோடு பார்த்தேன். 'அல்லி, இதோ வானத்தில் இருக்கும் சந்திரன் சாட்சியாகப் பூமிதேவி ஆணையாக நான் உன்னை மணந்து கொள்கிறேன்' என்று அவள் கையை ஆவலோடு பற்றினேன்.

" மல்லிகை மலரோ இல்லை, பட்டுக் கையோ என்று எண்ணும்படி மிருதுவாக இருந்தது அல்லியின் மெல்லிய கை. அவளும் லேசாக என் கையைப்பற்றி மெதுவாக அமுக்கினுள். விரல்கள் ஒன்றை யொன்று பின்னி விளையாடின.

" அந்தச் சமயத்தில் ஒரு அதிசயமான சம்பவம் நடந்தது. மழை மேகங்கள் ஒன்றும் காணப் படாத நிர்மலமான ஆகாயம் படபட வென்று ஒரு முறை அதிர்ந்து இடித்தது. எங்கள் திருமணத்துக்குத் தெய்வமும் சம்மதம் அளித்தது போல நினைத்து மகிழ்ந்தோம்.

" அந்தத் திறந்த வெளியில் ஏதோ ஓசைகேட்டது. திரும்பிப் பார்த்தேன். ஒருவரையும் காணவில்லை. சுற்றும் முற்றும் கண்களைச் சுழற்றிப் பார்த்தேன். எங்களுக்குச் சற்றுத் தூரத்தில் இருந்த தனி மரத்தில் யாரோ ஒருவர் நின்று கொண்டு எங்களையே கவனிப்பது போலிருந்தது. நல்ல வாட்ட சாட்டமான உடல் கட்டுடன் இருந்த அந்த ஆளைப் பார்த்தவுடன் எனக்குச் சற்றுப் பயமாகத்தான் இருந்தது. கூடவே மனத்தில் தைரியமும் பிறந்தது. அதைக் காட்டிக் கொள்ளாமல் அல்லியுடன் தொடர்ந்து பேசிக் கொண்டே போனேன். அப்பொழுது என்னென்ன பேசினேன் என்பதெல்லாம் எனக்கு இப்பொழுது நினைவில்லை. எப்படி நினைவிருக்கும்! என்னை மறந்துதானே பேசிக்கொண்டிருந்தேன்.

" சற்று நேரம் எதிர்காலத்தைப்பற்றி யெல்லாம் திட்டம் இட்டோம். நேரம் அதிகம் ஆகவே நான் அல்லியின் கையைப்பற்றி அழைத்துக்கொண்டு கிளம்பினேன். 'அவளைத் தொடாதே! தொட்டால் கொன்று விடுவேன்' என்று சத்தம் கேட்டது. திடுக்கிட்டுத் திரும்பினேன். அல்லியும் திரும்பினுள். மிரள மிரள விழித்தாள்" என்று சொல்லிக் கதையை நிறுத்தினுர் கிழவர்.

கரும் புகையைக் கக்கிக்கொண்டு ரயில் ஓடிக் கொண்டிருந்தது. ரயில் சக்கரங்களின் ஒரே மாதிரியான சத்தமும் தண்டவாளங்களின் இணைப்பிலிருந்து எழுந்த 'டக்டக்' 'டக்டக்' என்ற தாளம் தவருத ஓசையும் கேட்டுக்கொண்டிருந்தன. ரயில் ஜன்னலுக்கு வெளியே தெரிந்த தந்திக் கம்பங்களும் மரங்களும் ரயிலை எதிர் நோக்கி ஓடிக்கொண்டிருந்தன. அதற்கும் அப்பால் தெரிந்த மரங்கள் சுழன்று சுழன்று வந்தன. கிழவர் ஜன்னலுக்கு வெளியே தூரத்தில் தெரிந்த வயல் வெளிகளை நோக்கி வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தார். (அடுத்த இதழில் முடியும்)

கோலினஸ்

இயற்கையின் அற்புதப் பச்சை க்ளோரோபில் சேர்ந்தது

....உங்கள் பல் சுத்திகரிப்பில் இதுவரை ஏற்படாத மாபெரும் அபிவிருத்தி!

செடிகொடிகளை பசுமையுடன் வைத்திருக்கும் பொருளாகிய இயற்கையின் சிருஷ்டி க்ளோரோபில் உதவியால் நாள் முழுதும் வாய் துர்நாற்றத்தை அகற்றுங்கள்....பல் சிதைவும் சாதாரண ஈறுக்கோளாறுகளும் ஏற்படாமல் தடுங்கள்!

உங்கள் பல் பராமரிப்புக்கு இதுவரை இல்லாத முறையில் மிகப் பயன்படக்கூடிய மார்க்கம் இதுவே, சந்தேகமின்றி. க்ளோரோபில் சேர்த்த அற்புதமான கோலினஸ் பல் சிதைவையும் கோய்க் கிருமிகளையும் கொடியதாகத் தாக்குவது மட்டுமின்றி, வாய் துர்நாற்றத்தையும் நாள் முழுவதிலும் ஒழித்து விடுகிறது. இதற்குக் காரணம் இந்தப் பச்சை க்ளோரோபில் தான் — தாவரங்களை பசுமையுடன் வைத்திருக்க இயற்கையால் சிருஷ்டிக்கப்பட்ட அற்புத ரசாயனப் பொருள்!

க்ளோரோபில் சேர்த்த கோலினஸ் விசேஷ பயனளிப்பது தவிர, சிக்கனமானதுங்கூட—ஈரமில்லாத பிரஷ் மீது அரைப்பங்குளவே போதுமானது. பச்சை அட்டைப் பெட்டியில் எல்லா கடைக்காரர்களிடமும் கிடைக்கும். இன்றே வாங்கி, தந்த விஞ்ஞானத்தில் இதுவரை இல்லாத இம்மகோன்னத அபிவிருத்தியின் பயனை அடையுங்கள்!

2000 அமெரிக்க பல் நோயாளிகள் க்ளோரோபில்லின் குணநயங்களை நிரூபிக்கின்றனர்

நான்கு வருட ஆராய்ச்சி மற்றும் சுமார் 2000 அமெரிக்க பல் நோயாளிகளைக்கொண்டு நடத்தப்பட்ட மிக விரிவான சோதனைகள்....இவைகளின் பயனாக நிரூபணமானது என்னவெனில், க்ளோரோபில்லுடன் கூடிய டென்டல் க்ரீம்:—

- வழக்கமான சகல வகை ஈறுக் கோளாறுகளையும் சீர்திருத்துகிறது.
- நாள் பூராவும் வாயில் துர்நாற்றம் ஏற்படாமல் தடுக்கிறது.
- பல் சிதைவுக்குக் காரணமான கிருமிகளை ஒழித்துக்கட்டுகிறது.

உங்கள் பல் டாக்டர் இச்சோதனைகளைப்பற்றி அறிவார்....அவற்றின் பயன்களையும் வர்ணித்துச் செய்வார்.



புதிய பச்சை அட்டைப் பெட்டியை கவனியுங்கள்
ஸ்டாண்டர்ட் கோலினஸ் (மஞ்சள் லேபில்) கூட கிடைக்கும்



'கோலினஸ்' புன்னகையில் ஆரோக்கியம் ததும்புகிறது!

இந்தியாவில் தயாரிப்பாளர்கள்:
ஜியாப்ரே மானர்ஸ் & கோ., லிமிட்., பம்பாய் 1. கிளைகள்: கல்கத்தா — மதராஸ் — டில்லி

ஆரோக்கிய ரகசியம்

வி. என். குமாரசாமி

41. வாய்ப்புண் ஆற வழி

சிலருக்கு வாயின் இரு ஓரங்களிலும் புண் இருக்கும். அவ்விடத்தில் எப்பொழுதும் ஈரமாயிருப்பதால் அது வெளுத்தாற்போல் இருக்கும். பார்ப்பதற்கு ஏதோ சுத்தை வாய் என்று தோன்றும். அதற்கு என்ன மருந்துகள் தடவினாலும் போகாது. இது சாதாரணமாய்ப் புண், சிரங்குகளைப் போன்று மேல் போக்கான குறிகளல்ல. கிருமி தொற்றுதலினாலும் உண்டாவதல்ல. உடலினுடைய சீர்கேட்டை, வயிற்றில் மறைந்திருக்கும் கோளாறுகளை வெளிப்படையாய் எடுத்துக் காட்டும் ஒரு அறிகுறி. வயிற்றைச் சீர்திருத்தம் செய்தால் இது தானே மறைந்துவிடும். அதை விடுத்து மேலுக்கு என்ன மருந்து போட்டாலும் போகாது.

சிலருக்கு அடிக்கடி வாயினுள் புள்ளி புள்ளியாய்ப் புண் போன்று வரும். அதுவும் குடலின் சீர்கேட்டை அறிவிக்கும் குறியே. காரம் ஏதும் சாப்பிட முடியவில்லை என்பார்கள். இப்படி அதிகமாய் வந்தால் கழுத்திலுள்ள கோளங்கள் வீங்கிக் கொள்வதுமுண்டு. எதையாவது விழுங்க வேண்டுமானால், கஷ்டமாய் இருக்கும். கஞ்சி குடிக்கவும் கஷ்டமாயிருக்கும்.

சிலர் வாய் திறந்து பேசினால் போதும். நாற்றம் சகிக்க முடியாது. இந்த நாற்றத்தை மாற்ற வெற்றிலை பாக்கு போடுவார்கள். முதலில் வெற்றிலை பாக்கில் ஆரம்பித்த பழக்கம் சில நாட்களில் புகையிலைப் பழக்கத்தில் கொண்டுவிடும். பிறகு ஒரு நாளைக்குக் கணக்கில்லாமல் போடுவார்கள். முப்பது நாற்பது தடவைகள் கூடப் போடுவதுண்டு. கடைசியில், வாய் நாற்றத்தை மாற்றப் போய் அது வெற்றிலை புகையிலை கலந்த நாற்றமாய் மாறிவிடும். சிலர் கிராம்பு, ஏலம், கிராம்பு முதலியவைகளை வாயில் போட்டு அடக்கிக் கொள்ளுவார்கள். அதுவும் ஒரு பக்கம் கமகமவென்று வாசனை அடிக்கும். ஒரு பக்கம் சாக்கடை திறந்து விட்டாற் போல் நாற்றம் அடித்துக் கொண்டேயிருக்கும். இந்த நாற்றம் அவர்களுக்குத் தெரியுமோ என்னவோ! ஆனால் மற்றவர்களுக்கு உடனே தெரிந்துவிடும். அவர்கள் பேசும் போது நேரில் இருந்து கேட்க மிகவும் கஷ்டமாய் இருக்கும். சமீபத்தில் வந்து பேசினால் நாற்றம் கமட்டு குடலைப் புரட்டும்.


வாய் வழியே வரும் ஆவியே இம்மாதிரி சகிக்க முடியாத நாற்றத்தை உடையதாய் இருந்தால் அவர்கள் வாய், ஆகாரப்பை, குடல்கள் என்ன கதியில் இருக்கும் என்பதைச் சிறிது யோசித்துப் பாருங்கள். அப்பொழுது அவர்களைப் பற்றிப் பச்சாதாபப் படாமலிருக்க முடியாது.

சிலருடைய வியர்வை நாற்றம் பொறுக்க முடியாது. இதனை மாற்ற வாசனைச் சோப்புக்களென்ன! சென்ட், அத்தர்களென்ன! புனுகு, ஜவ்வாது என்ன! பவுடர், ஸ்னோக்கள் என்ன! வித விதமாய் உபயோகிப்பார்கள். அந்த வாசனைகளுடன் வியர்வை நாற்றமும் சேர்ந்தே அடிக்கும். இவர்களுடைய வியர்வையே இந்தக் கோலம் என்றால் வியர்வையை உண்டாக்கும் ரத்தம் மிகவும் கெட்டிருக்க வேண்டும் அல்லவா!

இவைகளெல்லாம் சீர்பட்டு, மனிதன் மனிதனாக வாழ வகை செய்வது இந்த யோக முத்திராவே. வயிற்றுக்குள் கோளாறுகள் ஏற்பட்டால் தானே அதன் மூலமாய் ரத்தம் கெடுவதும், வாய்ப்புண், வாய் நாற்றம் முதலியவைகள் ஏற்படும்! வயிற்றைச் சீர்படுத்தி விட்டால் இவைகளெல்லாம் வராது அல்லவா! யோக முத்திரா வயிற்று உறுப்புக்களைக் காப்பாற்றுவதில் இணையற்றது. யோக முத்திரா செய்யும்போது வயிற்றிலுள்ள எல்லா உறுப்புக்களுமே அழுத்தப்படுவதால், அதன் வேலைகள் சரிவரச் செய்யும்.

சரி, யோக முத்திராவைத்தான் செய்கின்றோமே, நாம் எப்படியும் சாப்பிடலாம், எல்லாம் யோக முத்திரா சரி செய்துவிடும் என்று பழையபடி கண்டதைக் கண்ட நேரங்களில் சாப்பிடக் கூடாது. முதலில் இக்கோளாறுகள் உள்ளவர்கள் காரம், புளி இரண்டையும் நாற்பது நாட்கள்வரையாவது ஒதுக்க வேண்டும். கீரை சூப், தக்காளி சூப், காய்கறி அவியல், பொரியல், கூட்டு, தயிருடன் அரிசி, கஞ்சி வடிக்காத சாதம், மோர், தயிர், பால் இம்மாதிரியே காரம், புளி சேர்க்காமல் சாப்பிட வேண்டும். பலகாரங்களிலும் காரம் புளி சேர்க்காமல் செய்து சாப்பிடலாம்.

சிலருக்குக் காரம் போடாமல் சமைப்பது என்றால் அது விசித்திரமாக இருக்கிறது. "காரம் போடாமல்தான் சமைத்தேன்" என்பார்கள். சாப்பிட்டால் காரமாய் இருக்கும். காரம் இருக்கிறதே என்றால் "இதுவும் ஒரு காரமா! இலேசாய் இரண்டு மிளகாய் தாளித்துக் கொட்டினேன்" என்பார்கள். இம்மாதிரி சாக்குகள் எல்லாம் ஆகாது. மிளகாய் கூடாது என்றால் சாஸ்திரத்துக்கும் ஒரு மிளகாய்கூடச் சேர்க்கக்



புடவை வியாபாரி:—புடவையைத் தண்ணீரில் போட்டால் புடவை ஒரு நாளும் வீணாகப் போய் விடாது, பயப்படாதீங்க அம்மா.

வீட்டுக்காரர்:—ஆமாம், ஆமாம்! வாஸ்தவந்தான். தண்ணீர் தான் வீணாய்ப் போய் விடும்!



ஊருக்குப் புதியவர்:—இந்த ஊரில் யாராவது பெரிய மனிதர்கள் பிறந்திருக்கிறார்களா? உங்களுக்குத் தெரியுமா?

உள்ளூர்க்காரர்:— இந்த ஊரில் எனக்குத் தெரிந்த வரையில் குழந்தைகள்தான் பிறந்திருக்கின்றனர்!

கூடாதுதான். சிலர் "மிளகாய்தான் உஷ்ணத்தை உண்டாக்கும். மிளகு குளிர்ச்சியானது" என்று மிளகாய்க்குப் பதில் மிளகை வைத்துத் திட்டிவிடுவார்கள். மிளகு எப்பொழுதாவது மருந்துக்காக உபயோகிக்க சிரேஷ்டம்தான். ஆனால் குளிர்ச்சி எப்படியாகும்! அதன் தூண்டும் சக்தி எந்த விதத்திலும் மிளகாய்க்குக் குறைந்தது அல்ல. எனவே, மிளகாய், மிளகு சேராமல் நாற்பது நாள் பத்தியமிருந்து யோக முத்திரா மற்றும் சர்வாங்காசனம், மத்ஸ்யாசனம், சிரசாசனம் செய்துவந்தால் எப்பேர்ப்பட்ட வாய்ப்புண் வாய் நாற்றம், வியர்வை நாற்றம், விலகிவிடும்.

இந்த மாதிரி நோய்க்குக் காரணம் மற்றும் பல உண்டு. போதிய ஜீவசத்துக் குறைவினாலும், வருவதுண்டு. ஜீவசத்து என்றதும், மருந்துக் கடைகளில் விற்கும் ஜீவசத்து மாத்திரைகள் அதாவது விட்டமின் மாத்திரைகள்தான் கவனம் வருமே தவிர நாம் அன்றாடம் சாப்பிடும் உணவிலும் அவை நிறைந்து இருக்கிறதே என்று யோசிக்க மாட்டார்கள். டாக்டர்கள் அதற்குத் தகுந்தாற்போல் எந்தச் சத்துக் குறைவாய் இருந்தாலும் அந்தச் சத்துக்கள் அடங்கின மருந்துகளை எழுதித் தந்து வாங்கிச் சாப்பிடச் சொல்லுவார்கள். ஏன் டாக்டர்களுக்குத் தெரியாதா? எந்தக் காய்கறியில் எந்தச் சத்து இருக்கிறது; எந்தக் கீரையில் எவ்வளவு இருக்கிறது; எதை எப்படிச் சாப்பிடலாம்; எப்படிச் சாப்பிட்டால் சத்து இழக்காமல் சாப்பிடலாம் என்று. ஆனால் அப்படிச் சொல்லும் டாக்டர்கள் தான் காணோம். அப்படி அவர்கள் சொல்ல ஆரம்பித்து விட்டால் உண்மையில் மக்களுக்குச் சேவை செய்தவர்களாய் விடுவார்கள். எவ்வளவோ பணம் மேல் நாடுகளுக்கு மருந்துகளுக்காகப் போகாமல் தேசத்திற்கு மீதம் செய்து தேச சேவை செய்தவர்கள் ஆவார்கள். அடிமைத்தனத்தில் ஊறிய கல்வி, அந்நியரின் சரக்குகளுக்கு ஏஜண்டாய் இருந்து விற்பனை செய்விக்கிறது. இவர்களுடைய பட்டம், படிப்பு, மதிப்புகளை யெல்லாம் சிறிது நேரம் ஒதுக்கி வைத்துச் சிந்தனை செய்து பார்த்தார்களேயானால் உண்மைக் கண் தானே திறக்கும்.

இம்மாதிரி உண்மைக் கண் கொண்டு சுய சிந்தனை கொண்டு பார்க்கும் டாக்டர்களும் அடியோடு இல்லாமல் போகவில்லை. எங்கோ ஒரிருவர் சுயநலமில்லாமல் உண்மையை உள்ளவாறு ஒப்புக் கொள்ளுகிறவர்களும், பிறருக்கு எடுத்துச் சொல்கிறவர்களும் ஏன், புத்தமாக எழுதியு மிருக்கின்றனர். அவர்களில் ஒருவர் ஸ்ரீ டி. கல்யாணசுந்தரம் என்பவர். இவர் பல பொறுப்பான வேலைகளை அரசாங்கச் சார்பிலும், ஆஸ்பத்திரிகளிலும், வகிப்பவர். இலங்கை வாசி. இவர் "ஆஸ்துமாவை மருந்தில்லாமல் குணமாக்கும் முறை" என்று ஒரு ஆங்கிலப் புத்தகம் எழுதியுள்ளார். அதைப் படித்துப் பார்த்தால், "மேல் நாட்டுப் படிப்புப் படித்தவரும் இம்மாதிரிஎழுதுவாரா!" என்று ஆச்சரியப் படும்படியாக இருக்கிறது. அவர் உண்மையை வெகு தெளிவாக ஆராய்ந்திருக்கிறார். பிரத்யட்சப் பிரமாணமாய் ஒவ்வொன்றும் வைத்திய உலகுக்கு நமது பழைய நிலையை எடுத்துக் காட்டுகின்றார். அவர் போகும் தோரணையைப் பார்த்தால், சரி இனிமேல் நமது கவலைக்கும் விமோசனம் கிடைத்து விட்டது. இனி நாமெல்லாம் வெறுமனே இருந்து விடவேண்டியதுதான். இவரைப் போன்ற படிப்பாளிகளே இதைப் பிரசாரம் செய்யட்டுமென்று எண்ணம் பிறக்கின்றது. அவரிடம் யார் சென்றாலும் ஆசனங்களைத் தான் சொல்லித் தருகிறாராம். அவசியமானால், சிறிது மருந்தும் உபயோகிக்கின்றாராம். இம்மாதிரி எப்பொழுது நமது ஆசனக் கலை டாக்டர்களால் போற்றப்படுகிறதோ அப்பொழுதுதான் நமது நாட்டுக்கு, நாட்டு மக்களுக்கு விமோசனம் உண்டு.

சத்துக் குறைவை நீக்கப் போய் எதிலோ கொண்டு முடிக்க வேண்டியதாய் விட்டது. சத்துக்களுக்கென்று தனி மாத்திரையோ மருந்தோ அவசியமில்லை. நாம் சாப்பிடும் உணவையே கவனித்துச் சமைத்தால் சத்திழக்காமல் உன்னத உணவைத் தயார் செய்து விடலாம். காய்கறிகளை நறுக்கியபின்பு கழுவக் கூடாது. முன்பே கழுவி நறுக்கவேண்டும். அனாவசியமாய் மேல் தோலை நீக்கக் கூடாது. அவசிய மிருப்பதற்கு லேசாய்ச் சீவலாம். வேக வைக்கும்போது வேகும் அளவுமட்டும் ஜலம் வைக்கவேண்டும். சிறு தீயில் வேக வைக்கலாம். மீதி ஜலம் இருந்தால் கீழே கொட்டி விடக்கூடாது. அதுதான் மிகுந்த சத்து வாய்ந்தது. அந்த ஜலத்தை ரஸத்திற்கோ சாம்பாருக்கோ உபயோகிக்கலாம். வேகும்போதும் நன்கு ஆவி போகாமல் மூடவேண்டும். அடிக்கடி கிளறுவதற்காகத் திறக்கக் கூடாது. ஆவியில் பல சத்துக்கள் வீணாய்விடும். தாளிப்பில் கடுகு குறைக்க வேண்டும். முற்றிலும் நீக்கினாலும், நல்லதே. சீரகம் தாளிக்கலாம். இதைத் தவிர, சாம்பாரில் மட்டும் மிக லேசாய் மிளகாய் சேர்க்கலாம். ரஸத்தில் மிளகு சேர்க்கலாம். எல்லாம் மிக லேசாய்த்தான் சேர்க்க வேண்டும். மற்ற எதிலும் மிளகாயைச் சேர்க்கக் கூடாது.

இன்றைய சமையல்களில் மிளகாய் சேர்க்காத பதார்த்தமே காணுவது அரிதா யிருக்கின்றது. "சாதம், குடிக்கும் ஜலம் தவிர மற்றெல்லாவற்றிலும் மிளகாயைப் பல ரூபங்களில் திட்டி விடுகின்றனர். நெய் சாதத்துக்குப் பருப்பு போட்டுக் கொண்டால் அதில் கடுகு பெருங்காயம் மிளகாய் தாளித்து இருக்கின்றனர். சாம்பார், ரசம்தான் தெரிந்ததே. கூட்டை வாயில் போட்டால் அதிலும் காரம் கடுதலாய் இருக்கின்றது. பொரியலிலும் மிளகாயைப் பொரித்துத் தள்ளுகின்றனர். அவியலில் மிளகாயை அரைத்து விடுகின்றனர். மசியலில் மிள



ஜவாஹர்லால்ஜியின் சென்னை விஜயத்தின்போது தேசிய இளைஞர் அணிவகுப்பைப் பார்வையிடுகிறார்.

வட்ட மேஜை

நவம்பர் 2-ந் தேதி கல்கி இதழில் "தேசிய இளைஞர் முன்னணி" என்ற தலையங்கத்தில் வாலிபர் காங்கிரஸ் ஸ்தாபனம் பற்றிக் குறிப்பிட்டு இருந்தீர்கள். அதைப் படித்துப் பார்த்து மிகவும் மகிழ்ச்சி யடைகிறேன்.

சென்ற பொதுத் தேர்தலின் போது காங்கிரஸ் ஸ்தாபனம் எங்கும் போல இங்கும் சரியாக வேலை செய்யவில்லை. டவுன் காங்கிரஸ் கமிட்டியினர் எதிர்க் கட்சிக்காரர்களின் பிரசாரத்தைக் கேட்டும் கேளாதவர்கள் போலப் பேசாதிருந்தனர். நானும், என்னைப் போன்ற சில வாலிபர்களும் சேர்ந்து காங்கிரஸ் அபேட்சகர்களுக்காக வாக்காளர்களிடம் சென்று பிரசாரம் செய்து வந்தோம். அப்போது எதிர்க் கட்சிகளின் பிரசாரத்தினால் மக்களிடையே காங்கிரஸைப் பற்றித் தவறான அபிப்பிராயம் ஏற்பட்டிருந்ததைக் கண்டோம். காங்கிரஸ்காரர்கள் பொதுக் கூட்டம் நடத்தினாலும் கூட அதற்கு மக்கள் வரமாட்டார்கள் என எதிர்க்கட்சியினர் பொதுக் கூட்டங்களில் மார் தட்டினர். அதை ஆமோதிப்பது போலவே டவுன் காங்கிரஸ் கமிட்டியினர் பேசாதிருந்தனர். மாற்றுக் கட்சியினரின் தவறான பிரசாரத்தையும், அதை டவுன் காங்கிரஸ் கமிட்டியினர் எதிர்த்துக் கூறக்கூட வக்கற்றிருந்த நிலைமையையும் கண்டு மனம் வெதும்பினோம். இனி டவுன் காங்கிரஸ் கமிட்டியினரை நம்பி இருப்பதில் பயனில்லை என்பதை உணர்ந்தோம். அப்பொழுதுதான், எதிர்க் கட்சிக்காரர்களின் பிரசாரத்தை ஒடுக்க வேண்டுமானால், மக்களிடையே மீண்டும் காங்கிரஸின் செல்வாக்கை நிலைநிறுத்த வேண்டுமானால், அதற்கு இளைஞர்கள் அடங்கிய ஓர் சக்தியுள்ள, விறுவிறுப்பான ஸ்தாபனம் தேவை என்று தீர்மானித்தோம். அதன் பயனாக, சென்ற 'மே' மாதத்தில் இங்கு 'இளைஞர் காங்கிரஸ்' என்ற ஒரு ஸ்தாபனத்தை நிறுவினோம்.

சிறந்த சொற்பொழிவாளர்களைக் கொண்டு பல பொதுக் கூட்டங்கள் நடத்தி வந்துள்ளோம். 2—10—52 'காந்தி ஜயந்தி' அன்று மழைக்காக ஓர் சர்வமத பிரார்த்தனைக் கூட்டம் நடத்தினோம். மழையும் பெய்தது என்று குறிப்பிட விரும்புகிறேன். நாங்கள் நடத்தி வந்துள்ள பொதுக் கூட்டங்களுக்கெல்லாம் மக்கள் திரண்டு வந்திருந்தனர். இப்பொழுது எங்கள் ஸ்தாபனத்திற்கு ஓரளவு மக்களின் ஆதரவும் இருக்கிறது.

சிதம்பரம்   பொ. குஞ்சிதபாதம்
3-11-52   (தலைவர்) இளைஞர் காங்கிரஸ்

[இந்த மாதிரி மற்ற இடங்களிலும் உள்ள தேசிய இளைஞர் ஸ்தாபனங்கள் தாங்கள் செய்து வரும் சேவைகளின் விவரங்களைத் தெரிவிக்கக் கோருகிறோம். —ஆசிரியர்]

காயை மசித்து விடுகின்றனர். வறுவலைக் கண்டால் கோபக்காரன் கண்ணைப்போல் சிவக்கக் காண்கிறது. பச்சைக் காய்கறி சிறிது சாப்பிடுவது நல்லதென்று பச்சடி செய்வது வழக்கம். அதிலும் பச்சை மிளகாய் இருக்கும்.

சரி. இத்தனையும் விட்டு, மோர் சாதமாவது நிம்மதியாய்ச் சாப்பிடலா மென்றால், அதிலும், இஞ்சி, பெருங்காயம், மிளகாய் தாண்டவமாடுகின்றது. மனிதன் எதைத்தான் சாப்பிட்டு, எப்படித்தான் உயிர் வாழ்வது என்று தெரியவில்லை. கடைசியில் நானும் சாப்பிட்டேன் என்று பாவனை செய்து எழுந்திருக்க வேண்டியதுதான். இது ஏனைய வீடுகளில் சகஜமாய் நடந்து கொண்டிருப்பதுதான். ஆனால் பொதுவாக ஆசனம் செய்பவர்களுக்கும் மிளகாய்க்கும் வெகு தூரம். அப்படி ஒதுக்கித் தள்ளினால்தான் ஆரோக்கியமாக இருக்க முடியும். மற்றவர்களும் வாய்ப் புண், நாற்றம் இல்லாமல் வாழ முடியும். (தொடரும்)

தலைவர் வந்தார்

ஸ்ரீ வத்ஸன்

ஐந்து மணிக்குக் கூட்டம் ஆரம்பமாகும் என்று விளம்பரம் செய்யப்பட்டும் மணி ஆறரை ஆகியும் கூட்டம் ஆரம்ப மாகவில்லை.

கூட்டம் கூடுவதற்காக இரண்டொரு இசைத் தட்டுக்கள் வைக்கப்பட்டவுடன் ஒவ்வொருவராகக் கூட்டத்தில் வந்து சேர்ந்தார்கள். மணி ஆக ஆக ஜனங்களின் பொறுமை தளர்ந்தது. போதாததற்கு அதுவரை வேலை செய்து வந்த 'மைக்'கும் திடீரென்று நின்று விட்டது. மைக்குக்காரர் மெக்கானிக்கைத் தேடிப் போய்விட்டார். மேடைமீது இரண்டொரு நாற்காலிகளும் ஒரு மேஜையும் மட்டுமே இருந்தன.

"பாழாய்ப் போச்சு, மைக் வேறு நின்று விட்டது. இன்றைக்குக் கூட்டம் நடந்து வாழ்ந்தாற் போலத்தான்."

"மேடையில்தான் பாருங்களேன். யாராவது உள்ளூர் தலைவராவது வந்திருக்கிறாரா!"

"இந்தக் கூட்டத்தில் பேசுபவர்கள் தலைமை வகிப்பவர்கள் எல்லோருமே புதிது போல் இருக்கு. கேள்விப்பட்ட பெயர்களாகவே இல்லையே!"

"புதிதாயிருந்தால் என்ன, குறித்த நேரத்தில் கூட்டம் ஆரம்பிக்கக் கூடாதா?"

"சும்மா ஏன் ஸார் வளவளன்னு பேசுறீங்க! நீங்களும் கூட்டம் நடத்திப் பார்த்தால் அதிலுள்ள சிரமம் தெரியும்!"

"அதோ யாரோ வந்து நாற்காலியில் உட்காருகிறார் போலிருக்கிறது ஸார்!" இப்படிப் பலபேர்கள் பேசலானார்கள்.

நாற்காலியில் வந்து உட்கார்ந்தவர் எழுந்து பேசலானார். "சகோதர சகோதரிகளே! கூட்டத்துக்குத் தலைமை வகிக்க இசைந்துள்ள தலைவர் வெளியூரிலிருந்து வருபவர் ஆதலால் அவர் வரவு கொஞ்சம் தடைப்படுகிறது. அவர் வந்தவுடன் கூட்டம் ஆரம்பமாகும். அதுவரை பொறுமையாக இருக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். துரதிர்ஷ்டவசமாக, வேலை செய்து வந்த 'மைக்' திடீரென்று நின்று விட்டது. மெக்கானிக்கை அழைத்து வர மைக் சொந்தக்காரர் போயிருக்கிறார். இதோ மைக்கும் ரிப்பேராகிவிடும். பொறுமையாக இருக்க வேண்டுகிறேன்!"

மறுபடியும் ஜனங்கள் பேசலானார்கள்.

"இப்போ பேசினவர்தான் தலைமை வகிப்பார் போலிருக்கு. வரப்போகும் வெளியூர் தலைவர் பேசுவார் போலிருக்கு!"

"ஆமாம்! இவர் சொல்லி அரைமணியாகியும் கூட்டம் ஆரம்பமாக வில்லையே?"

"உள்ளூர்க்காரர்கள் கூட்டம் போட்டாலேயே நாழிகை ஆகும்போது வெளியூர்க்காரர்கள் என்ன செய்வார்கள், ஸார்! சற்று தாமதம்தான் ஆகும். வந்தது வந்து விட்டோம். இன்னும் சற்று நாழிகை இருந்து பார்ப்போம். ஆரம்பிக்க வில்லை என்றால் போய் விடுவோம்."

"மணி ஏழரை ஆயிற்று. அப்பொழுது நாகரிகமாக உடை அணிந்த ஒருவர் மேடைமீது ஏறினார். ஜனங்கள் ஆவலாக அவரைப் பார்க்கலானார்கள். நாற்காலியிலிருந்தவர் அவரைப் பார்த்துப் புன்னகை செய்தார். மேடையில் ஏறினவர் அவரைப் பார்த்துப் புன்னகை செய்தார். மேடைமீது இருந்தவர் தாம் உட்கார்ந்திருந்த நாற்காலியை விட்டு எழுந்திருந்து பக்கத்து நாற்காலியில் போய் உட்கார்ந்தார். மேடைமீது ஏறியவர் நேரே மைக்கிடம் சென்றார்.

அதற்குள் ஒருவர் எழுந்து அவருக்கு மாலை போட்டார். உடனே கரகோஷம் உண்டாயிற்று. அதைத் தொடர்ந்து பலர் பல ஸ்தாபனங்கள் சார்பாக மாலைபோட்டார்கள். இரண்டொருவர் வாழ்த்துப் பத்திரத்தை வாசிக்காமலேயே கொடுத்தார்கள். மாலைமேல் மாலை போட்டு அவர் கழுத்தையும் முகத்தையுமே மறைத்து விட்டார்கள். அவர் மாலைகளை மெதுவாக கழற்றி மேஜைமீது வைத்து விட்டு மைக்கைப் போய்த் தொட்டு மேலும் கீழும் நகர்த்தினார். இப்படியே ஐந்து நிமிஷம் செய்து கொண்டிருந்தாரே ஒழிய, வாய் திறந்து ஒரு வார்த்தையும் பேசவில்லை.

"நீங்கள் பேச ஆரம்பியுங்கள். ஏற்கெனவே நாழிகை ஆகிவிட்டது. ஜனங்கள் ஆர்ப்பாட்டம் செய்யப் போகிறார்கள். மைக் கெட்டு விட்டது. மைக் வேலை செய்யாது. பேச ஆரம்பியுங்கள்" என்று அவசரப்படுத்தினார் மேடைமீது அமர்ந்து இருந்தவர்.

"என்னைப் பேசச் சொல்லிக் கட்டாயப் படுத்துகிறீர்கள். எனக்கு என்ன பேசுவதென்பது தெரியவில்லை. ஏனெனில் எனக்குக் கூட்டங்களில் பேசி வழக்கமில்லை. கூட்டத்தில் மைக் வேலை செய்யவில்லை என்று அதை ரிப்பேர் செய்வதற்காக மைக்கின் சொந்தக்காரர் கூப்பிட்டு வந்தார். நான் ஒரு மைக் ரிப்பேர் செய்யும் தொழிலாளி. புதிதாக இந்த ஊருக்கு வந்து ஒரு வாரமாகிறது. இதோ ஒரு நொடியில் மைக்கை ரிப்பேர் செய்து விடுகிறேன்" என்று கூறி ஒலி பெருக்கியை ரிப்பேர் செய்ய ஆரம்பித்தார்.

அப்போதுதான் கூடியிருந்தவர்களுக்கு வந்தவர் ஒரு மெக்கானிக் என்றும் பேச வர வேண்டிய தலைவர் இன்னும் வரவில்லை என்றும், மேடைமீது நாற்காலியில் இருந்தவருக்குக் கூடப் பேச வரும் தலைவரைப்பற்றித் தெரியாது என்றும் தெரிந்தது.

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press 116-119. Sladens Garden. Poonamallee High Road, Kilpauk Madras


"தினசரி சக்தியை
அளிக்க அவன் உணவு
எப்பொழுதும் டால்டாவில்
சமைக்கப்படுகிறது"
டால்டா–சமநிலை
உணவில் உங்களுக்கு தேவை
யான சக்திதரும் கொழுப்பை
அளிக்கிறது
DALDA

HVM. 167-50 TM

REGD. No. M. 4392
Registered as a newspaper in Ceylon

